பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 22, வெள்ளிக்கிழமை 06.01.2017 | கதிர் 62

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நாடுங்கள்

சன்சிகா நகையகம்

இல.114, பஸார் வீதி, வவுனியா.

தொலைபேசி: 024 222 4028

# 9,10,11ஆம் திகதிகளில் நடக்கவிருந்த அரசமைப்புச் சபை அமர்வுகள் ரத்து!

## வழிகாட்டல் குழு தன் நேற்றைய கூட்டத்திலும் இடைக்கால அறிக்கையை இறுதி செய்யாததால்

கொழும்பு, ஜனவரி 06

**பெரும் பரபரப்போடு எதிர்பார்க்கப்பட்ட அரசமைப்புச் சபையின் 9, 10, 11 ஆம் திகதி அமர்வுகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன என அறியப்படுகின்றது.**

**அரசமைப்புச் சபையின் வழிகாட்டல் குழு, உத்தேச அரசமைப்பு நகல் வரைவு தொடர்பாகக் குறைந்தபட்சம் இடைக்கால அறிக்கையைத் தன்னும் அங்கீகரித்து சமர்ப்பிக்காத நிலையில் அரசமைப்புச் சபை கூடுவதில் அர்த்தமில்லை என்று சுட்டிக் காட்டப்பட்டமையை அடுத்தே இந்த அமர்வுகள் ரத்துச் செய்யப்படுகின்றன என கொழும்பு வட்டாரங்கள் 'காலைக்கதிர்' நாளிதழுக்குத் தெரிவித்தன.**

அரசமைப்புச்சபையின்வழிகாட்டல் குழு நேற்றுக் காலை அதன் தலைவரான பிரதமர் ரணில்விக்கிரமசிங்கதலைமையில் சொற்ப நேரம் கூடி ஆராய்ந்தபின்னர், 9, 10, 11ஆம் திகதிகளில் அரசமைப்புச் சபையின்அமர்வைநடத்துவதில்லை

பக்கம் 19 »

## கனகபுரம் துயிலும் இல்லத்தில் நினைவுச் சமாதி அமைக்க தடை

### பிரதேச சபைச் செயலாளர் நேரில் சென்று தடுத்தார்



கிளிநொச்சி, ஜன.06

கிளிநொச்சி - கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் பொது நினைவுச் சமாதி அமைப்பதற்கு நேற்று அடிக்கல் நாட்டப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும்கரைச்சிப்பிரதேச சபைஅதற்குஅனுமதிமறுத்துள்ளது.

சம்பவ இடத்திற்கு நேரில் சென்ற கரைச்சி பிரதேச சபைச் செயலாளர் க.கம்சநாதன், அது சுடலை என்றும் தமது அனுமதி இன்றி அங்கு எந்தவித கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டாம் என்றும் அறிவித்தார்.

அந்த துயிலும் இல்லத்தில் கடந்த காலங்களில் படையினர் தங்கியிருந்தபோதும், அவர்கள் அங்கே கட்டடங்களை அமைத்த

பக்கம் 20 »

### ஜனாதிபதி அறிவிப்பு

## மக்கள் விருப்புக்கு மாறாக அரசைக் கவிழ்க்க முடியாது!

### அதிகாரப் பேராசைக்கு இன்னொரு தடவை இடம் கிடையாதாம்

கொழும்பு ஜன.06

மக்கள் விரும்பினால் அன்றி, சட்டவிரோதமாகவோ, அரசமைப்புக்கு விரோதமாகவோ அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு எவருக்கும் இடமளிக்க முடியாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். 2020 ஆம் ஆண்டுவரை இந்த அரசாங்கம் பதவியில் இருக்கும் என்றும் அவர் உறுதிபடக் கூறினார்.

எனவே, 2017 புதிய ஆண்டில் பொய்பிரச்சாரங்கள் செய்வதை விடுத்து, நியாயமான விமர்சனங்களை முன்வைத்து, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு இணைந்துகொள்ளுங்கள் என ஜனாதிபதி அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

பக்கம் 19 »

### அளப்பு அருணாசலம்



விளக்கு ஏத்தினவை இருக்கேக்கை வேற யாரும் கட்ட ஏலுமோ...!

## இந்திய - இலங்கை கடல்சார் ஒத்துழைப்பு குறித்துப் பேச்சு

கொழும்பு, ஜன.06

கடல்சார் ஒத்துழைப்புக்களை மேலும் வலுப்படுத்திக் கொள்வது தொடர்பில் இலங்கை மற்றும் இந்திய கடற்படை உயர் அதிகாரிகள் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

இலங்கை கடலோரக் காவற் படையின் பணிப்பாளர் றியர் அட்மிரல் சமந்த விமலதுங்க

பக்கம் 20 »

### போர்க்குற்ற விசாரணை தொடர்பில் அரசுக்கு உடனடிப் பதிலடி

## சர்வதேச நீதிபதிகள் கட்டாயம்; அதில் ஐ.நா. மாறவேயில்லை!

### மனித உரிமைகள் ஆணையாளர் கைவிட்டார் என்பது பொய்

கொழும்பு, ஜன.06

போர்க்குற்ற நீதிமன்ற விசாரணைப் பொறிமுறையில் சர்வதேசநீதிபதிகளை உள்வாங்குவதில்லை என்ற இலங்கையின் நிலைப்பாட்டை ஐ.நா ஏற்றுக் கொண்டிருந்தது என இலங்கை தெரிவித்த கருத்தை ஐ.நா. நேற்று முற்றாக நிராகரித்திருக்கிறது.

இலங்கையின் போர்க்குற்ற கலப்பு நீதிமன்ற விசாரணைப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளின் அதிகரித்த பங்களிப்பையே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செய்ட்

பக்கம் 19 »

## சம்பந்தன் கூறும் அனைத்தும் உண்மைக்குப் புறம்பானவை!

### சீற்றத்துடன் கூறுகிறார் கஜேந்திரகுமார்

கொழும்பு, ஜன.06

யுத்தம்முடிவடைந்ததிலிருந்து தற்போது வரை சம்பந்தன் தொடர்ச்சியாகத் தெரிவித்து வரும் அனைத்துக் கருத்துக்களும் உண்மைக்குப் புறம்பானவை என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்பின் ஊடாக

பக்கம் 19 »

### சம்பந்தன் பிரதம அதிதி • ஊர்வலம் • பண்பாட்டு நிகழ்வுகள்

## மட்டுநகரில் கூட்டமைப்பின் 'தமிழ் விழா' 'எழுக தமிழ்' நிகழ்வுக்கு 2நாள் முன்னதாக!

### பொங்கல் திருநாளின் பெயரால் முழுமூச்சான ஏற்பாடு

மட்டக்களப்பு, ஜன.06

மட்டக்களப்பு நகரில் தமிழ் மக்கள் பேரவை எதிர்வரும் 21ஆம்திகதி'எழுகதமிழ்'எழுச்சி நிகழ்ச்சியை நடத்தவிருக்கையில்–

அதற்குச் சரியாக இரண்டு நாள்களுக்கு முன்னதாக மட்டக்களப்பு நகரில் பெருத்த எடுப்பில் பொங்கலை ஒட்டி தமிழர் விழா ஒன்றை பேரணியோடு

பக்கம் 19 »

# கொமர்ஷல் வங்கிக்கிளை பருத்தித்துறையில் திறப்பு



பருத்தித்துறை, ஜன.06

கொமர்ஷல் வங்கியின் 256 ஆவது கிளை நேற்று வியாழக்கிழமை பருத்தித்துறையில் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

கொமர்ஷல்வங்கிசெயலாற்று முகாமையாளர்ஜெகன்துரைரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வங்கிக் கிளையைத் திறந்து வைத்தார்.

பிரதம விருந்தினர் இவ் வைபவத்தில் உரையாற்றும்போது "உலகிலுள்ள ஆயிரக் கணக்கான வங்கிகளில் சிறந்த வங்கியாக கொமர்ஷல் வங்கி தெரிவாகி விருதைப் பெற்றுள்ளது.

"1969ஆம்ஆண்டுஇலங்கையில் முதன் முதல் ஆரம்பிக்கப்பட்ட இவ்வங்கி 256 ஆவது கிளையை பருத்தித்துறையில் திறந்து வைப்பதில் பெருமையடைகிறது. பங்களாதேஷ், மலேசியா, இத்தாலி உட்பட பல நாடுகளில் கொமர்ஷல் வங்கியின் கிளைகள் தற்போது இயங்கி வருகின்றன."

''மக்களுக்குச் சிறந்த சேவையை ஆற்றுவதே கொமர்ஷல் வங்கியின் இலக்காகும். இச்சேவையைப் பருத்தித்துறை மக்களும் பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது." -என்றார். (இ -31)

# சிறுவன் உட்பட 10 தமிழக மீனவர் நேற்றுக் கைதாகி விளக்கமறியலில்!



யாழ்ப்பாணம், ஜன.06

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்ட – தமிழ் நாடு இராமேஸ்வரம், புதுக்கோட்டைப் பகுதியைச்சேர்ந்த–ஒருசிறுவன் உட்பட 10 தமிழக மீனவர்களும் – நேற்று பிற்பகல் ஊற்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

கடற்படையினரின் அனுசரணையுடன், நீரியல் வளத் திணைக் கள அதிகாரியினரால் நீதிமன்றில் இவர்கள் முற்படுத்தப்பட்ட போது அவர்களை எதிர் வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் எம். றியாஸ் உத்தரவிட்டார். இந்த பத்துப் பேரில் 15 வயதுடைய சிறுவனை அச்சுவேலியில் உள்ள சான்றுபெற்றபாடசாலையில் சேர்த்துப் பராமரிக்கும் படியும் நீதிவான் பணித்தார். (உ-10)

## எழுத்தாளர் டானியலின் 'கானல்' நூல் வெளியீடு

கே.டானியல் எழுதிய 'கானல்' நூல் வெளியீட்டு விழா நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் க.ஸ்ரீகணேசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் வரவேற்புரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும், வெளியீட்டுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் சி.பத்மநாதனும் நிகழ்த்துவார்கள். நூலின் முதற்பிரதியை சட்டத்தரணி ஷர்மினி விக்கினேஸ்வரன் பெற்றுக்கொள்வார். (ம-54)

## கலை இலக்கிய களத்தின் இலக்கிய விழா நாளை

தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தின் இலக்கிய விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் கலை இலக்கிய களக் காப்பாளர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் தலைமையில் இடம்பெறும்.

இந்த இலக்கிய விழாவில் கோகிலா மகேந்திரனின் (கதைகளும்விமர்சனமும்) 'வரிக்குயில்' நூல் வெளியீடும் இடம்பெறும்.

பிரதம விருந்தினர்களாக வட மாகாண கல்வி அமைச்சர் குருகுலராசாவும் அவரது பாரியாரும், விசேட விருந்தினர்களாக அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தம்பதியினரும், சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் அ.சண்முகதாஸ் தம்பதியினரும் கலந்து கொள்வர். (இ)

## யாழ். இந்துவில் இணையும் மாணவருக்கு!

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தரம் 6 அனுமதிக்காக கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பெயர்ப்பட்டியலில் உள்ள மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் சனிக்கிழமை 7ஆம் திகதி காலை 10 மணிக்கு கல்லூரியில் நடைபெறும் என கல்லூரி அதிபர் ஐ. தயானந்தன் அறிவித்துள்ளார்.

அதேவேளை அந்த மாணவர்களில் இரு மொழிக்கற்கையில் கற்க விரும்பும் மாணவர்களிற்கான பரீட்சையும் இடம் பெறவுள்தாகவும் அதற்கான மாணவர்களை மட்டும் கூட்டி வருமாறு பெற்றோர் கேட்கப்பட்டுள்ளனர். என அதிபர் தமது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார். (உ)



முன்னாள் கொழும்பு மேயர் ஏ.கே.எம். முஸம்மில் மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டமையையொட்டி நேற்றுமுன்தினம் கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் நடைபெற்ற விருந்துபசாரத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அவரது துணைவியார், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கா, அமைச்சர் மலிக் சமர விக்கிரம ஆகியோர் கலந்துகொண்டனர்.

## காரைநகரில் இன்று முதல் 5 நாள் மாணிக்கவாசகர் விழா

காரைநகர் மாணிக்கவாசகர் சபையின் ஆதரவில் இடம்பெறும் 62 ஆவது ஆண்டு மாணிக்கவாசகர் விழா இன்று வெள்ளிக் கிழமை மாலை 5 மணிக்கு ஈழத்துச்சிதம்பர தேவஸ்தான வசந்த மண்டபத்தில் நடைபெறும். இவ்விழா தொடர்ந்து ஐந்து தினங்கள் இடம்பெறும்.

மாவை ஆதீனம் மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தான ஆதீனகர்த்தா மகராஜஸ்ரீ து.ச. இரட்ணசபாபதிக் குருக்கள் தலைமையில் இடம்பெறும் முதல் நாள் நிகழ்வில் நல்லை திருஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் விழாவை ஆரம்பித்து வைத்து ஆசி வழங்குவார்.

ஈழத்துச் சிதம்பர ஆதீன கர்த்தா மு.சுந்தரலிங்கம் திருவாசகத் திருமுறை ஓதுவார். தொடர்ந்து "திருவாசகத்தில் வேத சிவாகமங்கள்" எனும் தலைப்பிலான சொற்பொழிவை பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மாவும், "பக்திவலையிற் படுவோன் காண்க" எனும் சொற்பொழிவை முன்னாள் இந்து நாகரிகத் துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகமும், "வேண்ட முழுதுந் தருவாய் நீ" எனும் சொற்பொழிவை தமிழ்நாடு புதுக்கோட்டை ஓய்வு நிலைத் தமிழ்ப் பேராசிரியர் புலவர் கோ. அரங்கநெடுமாறனும் நிகழ்த்துவார்கள்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு காரை அபிவிருத்திச் சபைத்தலைவரும், ஓய்வுநிலை வடமாகாணக் கல்விப் பணிப்பாளருமான ப.விக்னேஸ்வரன் தலைமையில் ஆரம்பமாகும். இந்நிகழ்வின் வரவேற்புரையை காரைநகர் மணிவாசகர் சபைக் காப்பாளர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை நிகழ்த்துவார்.

"கேட்டாரும் அறியாதான்" எனும் தலைப்பிலான சொற்பொழிவைசப்ரகமுவபல்கலைக் கழக மொழித்துறைப் பேராசிரியர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனும், "புண் சுமந்த பொன் மேனி" எனும் சொற்பொழிவை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கு.பாலஷண்முகனும், "அருட்பெருஞ்சோதி" எனும் சொற்பொழிவை தமிழ்நாடு புதுக்கோட்டை காந்தி இளநிலைக் கல்லூரி ஓய்வு நிலைத் தமிழ்ப் பேராசிரியர் புலவர் கோ. அரங்க நெடுமாறனும் நிகழ்த்துவர்.

தொடர்ந்து மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

மாணிக்கவாசகர் விழா நாளை மறுதினமும் தொடர்ந்து திங்கள், செவ்வாயும் இடம்பெறும். (இ)

## அம்புலன்ஸை விட்டு இறங்கமுடியாத நிலையில் துமிந்தவுக்கு சுகவீனமாம்!

### நேற்று கொழும்பு நீதிமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.06

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் மருத்துவ அறிக்கைகளை இரண்டு வாரத்துக்கு இடையில் நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு கொழும்பு மேலதிக நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

துமிந்த சில்வாவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றையதினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே கொழும்பு மேலதிக நீதவான் அருணி ஆடிகல இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

2010, 2011 மற்றும் 2013 ஆகிய மூன்று வருடங்களாக சொத்து தொடர்பான விவரங்களை சமர்ப்பிக்க தவறியமையினாலேயே துமிந்தவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக் குழு வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள துமிந்த சில்வா விசேட அம்புலன்ஸ் மூலம் நீதிமன்றுக்குஅழைத்துச்செல்லப்பட்டார்.

இருப்பினும், கடும் சுகயீனம் காரணமாக அம்புலன்ஸ் வாகனத்தை விட்டு துமிந்த சில்வாவினால் இறங்க இயலாது என அவரதுசட்டத்தரணிதெரிவித்தார்.

எனவே துமிந்த நேற்றையதினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. சந்தேகநபர் நீதிமன்ற வளாகத்தில் அம்புலன்ஸ்வாகனத்தில் இருந்துள்ளார். எனவே துமிந்தவுக்கு எதிரான வழக்கு இந்த மாதம் 26ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என நீதிவான் தெரிவித்துள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் கொலை வழக்கு தொடர்பில் துமிந்த சில்வாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 'தகவம்' பரிசுக் கதைகள் அறிமுக விழா நாளை

யாழ்ப்பாணம், ஜன.06

திருமறைக் கலாமன்றத்தின் இலக்கிய அவையும், யாழ். இலக்கியக் குவியமும் இணைந்து நடத்தும் "தகவம் – தமிழ்க் கதைஞர் வட்டத்தின் பரிசுக் கதைகள் தொகுதி – 03" இற்கான அறிமுகமும் கலந்துரையாடலும் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இல.128, டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது அழகியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எழுத்தாளர் ஐ.சாந்தனின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வரவேற்புரையை திருமறைக்கலாமன்ற இலக்கிய அவைப் பொறுப்பாளர் கி.செல்மர் எமிலும், தகவம் தமிழ்க் கதைஞர் வட்டம் தொடர்பான அறிமுக உரையை வட்டத்தின் செயலாளர் திருமதி வசந்தி தயாபரனும், பரிசுக் கதைகள் தொகுதி – 3 தொடர்பான அறிமுக உரையை யாழ். பல்கலைக் கழக சமூகவியல்துறை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணனும் வழங்குவார்கள்.

தொடர்ந்து "சமகால இலக்கிச் செயற்பாடுகள்" தொடர்பாக கவிஞர் கருணாகரன் உரையாற்றுவார். அதனைத் தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறும்.

நன்றியுரையை யாழ். இலக்கியக் குவிய அமைப்பாளர் வேலணையூர் தாஸ் வழங்குவார்.

இந்நிகழ்வில் கலை இலக்கியப் படைப்பாளிகள், ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ)

✦ ✦ ✦

வடமராட்சி, ஜன.06

'தகவம்' சிறுகதைத் தொகுதி – 3 இன் அறிமுகவிழா நாளை மறுதினம் மாலை 4 மணிக்கு பருத்தித்துறை வி. எம். றாட்டில் உள்ள ஞானாலயம் மண்டபத்தில் எழுத்தாளர் டாக்டர் க.முருகானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் எழுத்தாளர்களான முல்லை திவ்வியன், வல்நம்பி, த.அரவிந்தகுமார் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள். தகவத்தின் சார்பில் மு.தயாபரன் ஏற்புரை நிகழ்த்துவார். (இ -30)

# சாவகச்சேரி எல்லைக்குட்பட்ட கச்சாய் வீதியில் குப்பைகள்

## நகரசபை கழிவகற்றும் வாகனம் அங்கு வராததால்

யாழ்ப்பாணம், ஜன.06

சாவகச்சேரி நகரசபை எல்லைக்கு உட்பட்ட கச்சாய் வீதிக்கு நகரசபையினரின் கழிவகற்றும் வாகனம் மாதக்கணக்கில் வருகை தராமையால் வீதிகளில் குப்பைகள் தேங்கிக் கிடக்கின்றன.

இதேவேளை கச்சாய் வீதிக்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கழிவகற்றும் வாகனம் வரும் என்று நகரசபையினரால் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் குறித்த வாகனம் நகரசபை எல்லையான ஊர் எல்லை வீதிவரை சென்று குப்பைகளை அகற்றாமல் 800 மீற்றர் முன்னால் உள்ள பேரம்பலம் வீதி வரை சென்று குப்பைகளை அகற்றி வாகனத்தைத் திருப்பிச் செல்வதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே கழிவகற்றும் வாகனம் வரும் என்ற நம்பிக்கையில் குப்பைகளை பையில் கட்டி மக்கள் வீதிகளில் வைப்பதால் வீதிகளில் குப்பைகள் தேங்குகின்றன.



இதேவேளை பைகளில் கட்டப்பட்டு ஒழுங்கான முறையில் வைக்கப்பட்டிருக்கும் குப்பைகளை விஷமிகள் சிலர் வீதியில் கொட்டிவிட்டு பைகளை எடுத்துச் செல்கின்றனர். சிலர் தமக்கு உபயோகப்படும் பொருள்கள் ஏதும் பைகளில் இருக்கின்றனவா எனவும் ஆராய்கின்றனர் என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஒவ்வொரு வாரமும் முறையாக வந்து குப்பைகளை நகரசபை ஊழியர்கள் அகற்றினால் இந்தப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பில்லை என்று பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக கச்சாய் வீதியில் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக மற்றும் தம்புதோட்டம் படை முகாமுக்கு அருகாமையில் அதிகளவான குப்பைகள் தேங்கிக் கிடப்பதை அவதானிக்க முடிகிறது.

மேலும் தாம் சரியான முறையில் வரி செலுத்தி வருகின்றனர் என்றும் அதற்குத் தக்க வகையில் நகரசபையினர் சேவையாற்ற வேண்டும் என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

(எ-21)

## மண்டைதீவு புகையிலை செய்கை பாத்திகட்டும் வேலைகள் மும்முரம்

மண்டைதீவு கிராமத்தில் புகையிலைப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வரும் கமக்காரர்கள், நாற்றுகளுக்குப் பாத்தி கட்டி நீர் பாய்ச்சும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

செம்பாடு, தந்தடை நாவனங்காடு கிராஞ்சிப் பகுதிகளில் புகையிலை நடப்பட்டுள்ளது. கடந்த காலங்களுடன் ஒப்பிடுமிடத்து இம்முறை புகையிலைச் செய்கை உற்பத்தி மிகக் குறைவு என்று தெரிவிக்கப்பட்டது.

வேலணை மற்றும் காரைநகர் பிரதேச செயலகங்களால் புகையிலை செய்கைக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளமையே பிரதான காரணம்.

தென்னிலங்கையில் மங்கலகரமான விடயங்களில் வெற்றிலையோடு துங்களை (புகையிலை) வைத்து ஆசீர்வாதம் பெறும் நடைமுறையும் அருகிவிட்டது. இதனால் தீவக கமக்காரர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இடப்பெயர்வு காரணமாக மண்டைதீவை விட்டு வெளியேறிய கமக்காரர் பெருமளவில் இன்னும் ஊர் திரும்பவில்லை. இதனால் செம்மண் தோட்டக்காணிகளும் கொட்டுக் கிணறு என அழைக்கப்படும் மணல் தோட்டங்களும் கைவிடப்பட்டுள்ளன. அந்தக் காணிகள் விற்கப்பட்டு குடியிருப்புக்களாக மாற்றமடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

(இ-20)

## கத்தியால் குத்திய இளைஞனுக்கு மறியல்

மல்லாகம், ஜன.06


வீதியால் சென்ற சகோதரிக்கு துன்புறுத்தல் கொடுத்த சம்பவத்தைத் தட்டிக் கேட்ட இளைஞனை கத்தியால் குத்திய சந்தேகநபரான 22 வயதுடைய இளைஞனை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மல்லாகம் மாவட்ட நீதிவான் ஏ.யூட்சன் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 12 ஆம் திகதி உடுவில் ஆலடி பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தை அடுத்து சந்தேநபர் ஊரை விட்டு தப்பிச் சென்று வெளி மாவட்டத்தில் தங்கியிருந்தார். மீண்டும் கடந்த செவ்வாய்க்கிழமை சந்தேகநபர் உடுவில் பகுதிக்கு வந்திருக்கிறார் என்று தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து அவர் கைதாகினார். அவரை நேற்று முன்தினம் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்திய போது நீதிவான் விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார்.

(இ-9)

# மண்டைதீவில் சிறு வீதிகளின் திருத்த வேலைகள் ஆரம்பம்





மண்டைதீவு, ஜன.06

மண்டைதீவு கிராமத்தின் உள்ளகச் சிறு வீதிகள் கடந்த மாதம் தொடங்கி துரிதமாகத் திருத்தப்பட்டு வருகின்றன என்று கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

அம்மன் கோவில் வீதியில் இருந்து பிரிந்து தெற்காகச் செல்லும் சோலைப்பிட்டி வீதியும் கடற்கரைக்குச் செல்லும் வீதியில் இருந்து வடக்கு நோக்கிப் பிரியும் குப்பைத்திடல் வீதியும் கல், மண் கொண்டு செப்பனிடப்படுகின்றன.

கருங்கற்கள் வீதி ஓரங்களில் பறிக்கப்பட்டுள்ளன. இந்த இரு வீதிகளும் 'காப்பெற் வீதியாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் மண்டைதீவின் அம்மன் கோவில் வீதியில் இருந்து பிரிந்து செல்லும் பூம்புகார் வீதியின் திருத்த வேலையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அம்பாள் கோவில் வடக்கு வீதியோரமாகச் செல்லும் கடற்கரை வீதி அங்கு புதியதாக அமைக்கப்பட்டுள்ள பெரிய கடற்படைதளத்தின் ஓரமாகச் சென்று வடக்காகத் திரும்பி கண்ணகை அம்மன் கோவில் பகுதியை அடைகிறது.

இந்தவீதியின் திருத்த வேலைக்காக அம்மன் கோவிலின் வட பகுதி காணியானபுளியடியில்பெரும்தொகையான கருங்கல், கியூப்புக்களாக வகைப்படுத்தப்பட்டிருப்பதுடன், மணல் மற்றும் செம்மண் வகைகளும் பறிக்கப்பட்டுள்ளன. அங்கும் திருத்த வேலைகள் ஆரம்பமாகவுள் ளன என்று தெரிவிக்கப்பட்டது.(இ-20)

## கிளிநொச்சி, மன்னார், வவுனியாவில் நாளை 9 மணி நேர மின்தடை

யாழ்ப்பாணம், ஜன.06

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

அதன்படி நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை யாழ். பிரதேசத்தில் அச்செழு, கரந்தன், நீர்வேலி, மாசிவன், சிறுப்பிட்டி ஆகிய இடங்களிலும் -

கிளிநொச்சி பிரதேசத்தில் டொன் பொஸ்கொ, வன்னிவேளாங்குளம், ஒட்டறுத்தகுளம், வடகாடு, பாலிநகர், அம்பாள்புரம், கொல்லவிளாங்குளம், ஐம்பது வீட்டுத்திட்டம், பாண்டியன்குளம், நட்டாங்கண்டல், கரும்புள்ளியான்,தென்னியங்குளம், உயிலங்குளம், பாரதிநகர், மாங்காக்குடியிருப்பு, ஆலங்குளம், கல்விளான், பிள்ளையார் அரிசி ஆலை,65ஆவது 'இன்வென்ற்றி' ஆலங்குளம், துணுக்காய் ப.நோ. கூ.சங்கம், பனிக்கங்குளம், மாங்குளம், நீரிபுரம், டயலொக் தொலைத்தொடர்புக் கோபுரம்,ஒலுமடு ஆகிய இடங்களிலும் -

வவுனியா பிரதேசத்தில் நெளுக்குளத்தில் இருந்து இராஜேந்திரகுளம், கூமாங்குளம் ஆகிய இடங்களிலும் -

மன்னார் பிரதேசத்தில் மடுதேவாலயம், பெரியதம்பனையில் இருந்து வெள்ளாங்குளம், சன்னார் இராணுவ முகாம், முருங்கனில் இருந்து தலைமன்னார் துறை, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்புஉற்பத்தி நிலையம், கிரி ஐஸ் தொழிற்சாலை, -

மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை விசேட அதிரடிப்படைமுகாம், வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்குப்பிட்டி பாம் ஹவுஸ், மீன்பிடி சமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் கடற்படை முகாம், சீனத்துறைமுகம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

(இ)

## மாதாந்தக் கூட்டம்

வடமராட்சி லயன்ஸ்கழகம் நடத்தும் மாதாந்தக் கூட்டம், பணிப்பாளர் சபைக்கூட்டம், மாதாந்த அங்கத்தவர் கூட்டம் ஆகியன நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை ஐந்து மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரி வீதியில் உள்ள செவிப்புலனற்றோர் சங்க மண்டபத்தில் கழகத் தலைவர் லயன் அ. செந்திலிங்கம் தலைமையில் நடைபெறும்.

(இ)


விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
இல 63 சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொழில் நுட்பப் பிரிவு
A/L 2019
ஆரம்பம் 07ம் திகதி சனிக்கிழமை காலை 8.30
தொடர்புக்கு
077 248 7774
அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## வெளிப்படைக்கு ஜனநாயக ஆட்சி

நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து நல்லாட்சி அரசு நடத்துகின்றன. அமைதித் தீர்வுக்கான நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்பும் விதத்தில் மீள்குடியேற்றம், புனரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. நிரந்தரத் தீர்வுக்கு வழிவகுக்கும் விதத்தில் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான முயற்சிகள் மும்முரமாக முன்னெடுக்கப்படுகின்றன.

அரசை காட்டமாகக் கண்டிக்க வேண்டிய எதிர்க்கட்சித் தலைவர் கூட அரசைப் புகழ்கிறார்; அரசுடன் சேர்ந்து இயங்குகின்றார்.

இவை எல்லாவற்றையும் நோக்கும் போது இலங்கையில் ஜனநாயக ஆட்சி பூத்துக் குலுங்குவது போலவும், இலங்கை அரசியலின் செல்நெறி ஏதோ புதிய உத்வேகத் திசையில்- ஒரு சுபீட்சமான பாதையில்- மேம்பாடான திக்கில்- நகருகின்றதோ என்று எண்ணவும் தோன்றுகின்றது.

ஆனால் உண்மை அதுவல்ல. அதற்குத் தலைகீழ் மாறானது என்பதுதான் யதார்த்தமாக இருக்கின்றது.

இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து நல்லாட்சி அரசு அமைத்திருப்பது வரலாற்றில் முன்னெப்போதும் நடந்திராத அதிசயம்தான். ஆனாலும், தங்களுக்கு இடையில் ஒன்றுபட இல்லை. இரு கட்சிகள் ஒன்று சேர்ந்து ஓரணி அமைத்துக் கொண்டு தங்களுக்குள் ஒத்திசைவின்றியே, அதைக் கொண்டிழுப்பதும் கூட ஒரு பேரதிசயம் தான். நொண்டிக்குதிரை ஓட்டப் பந்தயத்துக்குப் போன கதையாகத்தான் அரசு நகருகின்றது.

வெளியில்தான் நல்லாட்சி அரசு. ஆனால் உள்ளேயோ பெரும் குழப்பம். ஒரு தரப்பை மற்றொரு தரப்பு காலை வாரி விடுவதில்தான் கண்; அதிகவனம் செலுத்துகின்றன.

வெளிப்படைக்குத்தான் தீர்வு முயற்சிக்கான இணக்கம். உள்ளேயோ இரு பிரதான கட்சிகளுமே பாதிக்கப்பட்ட சிறுபான்மையினரான தமிழர்களுக்கு ஏதும் வழங்கி விடாமல் இருப்பதில் தான் உடன்பாடு.

அது மாத்திரமல்ல. ஒவ்வொரு பிரதான கட்சிக்குள்ளும் கூட குழப்பம் உச்சம். ஒவ்வொரு கட்சியும் நீறு பூத்த நெருப்பாகத்தான் உள்ளே கனந்து கொண்டிருக்கின்றன.

ஆட்சித் தரப்பின் பிரதான பங்காளி ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி. அக்கட்சிய பிரதமரின் தலைமையில் கட்டுப்பட்டிருக்கின்றதா என்றால் அங்கும் உள்ளே பிரளயம் தான். இப்போது ரணிலின் அரசு விசேட அபிவிருத்திச் சட்ட மூலமொன்றைக் கொண்டு வந்தது. எட்டு மாகாண சபைகள் அந்தச் சட்ட மூலத்தை நிராகரித்து முடிவு வழங்கின. அந்தந்த மாகாண சபைகளில் அந்தச் சட்ட மூலத்தை எதிர்த்தவர்கள் அணியில் ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சியினரும் பிரதானமாக அடங்குவர்.

மற்றைய கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைமையோ கிழிந்த கந்தலின் கதைதான். ஒரு குழு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் கீழ் நல்லாட்சி அரசுக்குள் இணைந்து தனித்து இயங்கிக் கொண்டிருக்கின்றது. கட்சியின் தலைவர் தாமே என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா கூறிக் கொண்டிருக்கின்றார். ஆனால் மஹிந்த ராஜபக்ஷவைத் தலைவராகக் கொண்டு கூட்டு எதிரணி என்ற பெயரில் ஆட்சியில் கணிசமானோர்- நான்கு டசினுக்கும் குறையாத எம்.பிக்கள் - எதிர்த்தரப்பில் இயங்குகின்றனர்.

பிரதான எதிர்க்கட்சி என்று கூறப்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உள்ளேயும் உள் முரண்பாடு உச்சம்.

'ஏசுவோர் ஏசட்டும், தூற்றுவோர் தூற்றட்டும். நான் என் வழி செல்வேன்' என்று தலைவர் சம்பந்தன் தன் வழி- தனி வழி - போகிறார். அவர் கூடவே சுமந்திரன். தமிழரசுக் கட்சித் தலைவர் மாவைக்கோ எந்த வழியும் இல்லை. எது வழி எது என்றும் தெரியாத சிக்கல் அவருக்கு.

தமிழரசும் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் தனித்தனி வழி. தமிழரசோ தன் பாட்டில் தானே கூட்டமைப்பு என்ற மமதையில் பயணம். கூட்டமைப்புத் தலைமைக்குத் தலையாட்டினால் போதும் என்ற நிலைமை ரெலோவுக்கும் புளொட்டுக்கும். சுரேஷ் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல். என்னவோ வேறு வழிப் பயணத்துக்குத் தயாராக உறுமிக் கொண்டு நிற்கின்றது.

போதாக்குறைக்கு தமிழ் மக்கள் பேரவை வேறு களத்தில். கூட்டமைப்பின் வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரனின் ஆசியுடன் பேரவையும் முழு மும்முரத்தில்.

தமிழரசுக் கட்சிக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வுக்கும் இடையிலான முரண்பாடு சந்தி சிரிக்கும் விடயமாகி விட்டது.

ஒரு கட்சியினரை மற்றைய கட்சியின் செயலாளர் ஒட்டுக் குழு என்ற சாரப்படவும் தமிழர்கள் பலரைக் காணாமற்போகச் செய்தமைக்கும் படுகொலைகளுக்கும் காரணமான தரப்பு என்றும் விமர்சிக்கும் அளவுக்கு நிலைமை நாறுகிறது.

இப்படி , இலங்கை அரசியலின் பிர்தான தரப்புக்களான கட்சிகள், அணிகள், கூட்டுகள் இடையே குழப்பம் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கின்றது.

வெளியில்தான் நல்லாட்சி, இணக்கத்தைக் காணுவதற்கான புரிந்துணர்வு நடவடிக்கைகள், அமைதித் தீர்வுக்கான எத்தனங்கள் என்ற பேச்சுக்கள் எல்லாம் உள்ளே - புரையோடிப் போயிருப்பதற்கு போட்டி, பொறாமை, அரசியல் குத்துவெட்டு, பதவியாசை நடிப்பு, சுத்துமாத்து, சுருட்டல்.... இத்யாதி.... இத்யாதிதான்...! தமிழ் மக்களோ தலைகளில் கை வைத்தபடி...!!




# போதைக்கு அடிமையானோர் அதிலிருந்து விடுபட கெடு

### பொதுமன்னிப்புத் திட்டத்தை அரசு வழங்கவுள்ளதாக சமந்தகுமார தெரிவிப்பு

கொழும்பு, ஜன.06

போதைப் பழக்கத்துக்கு உட்பட்டவர்கள் தாங்களாகவே திருந்திக் கொள்வதற்கான பொது மன்னிப்புக் காலம் ஒன்றை வழங்கும் திட்டம் அரசிடம் இருப்பதாக போதைப் பொருள் கட்டுப் பாட்டுக் கான ஜனாதிபதி விசேட அதிரடிப் படைப்பிரிவுத் தலைவரும் திட்ட இயக்குனருமான டொக்டர் சமந்த குமார கித்தலவாராச்சி தெரிவித்தார்.

மேற்படி திட்ட நடவடிக்கைகள் குறித்த சந்திப்பு ஒன்றின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:

''போதைமருந்துப் பாவனையைத் தடுப்பதற்கும், போதைப் பழக்கத்துக்கு அடிமையானவர்களை அதிலிருந்து மீட்கவும் அரசு சார்பில் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறோம். போதைப் பழக்கத்துக்கு அடிமையானவர்களை ஏற்கனவே அடையாளம் கண்டு, அவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் செயற்றிட்டங்களையும் தற்போது செயற்படுத்தியுள்ளோம். மேலும், போதைப் பழக்கத்துக்கு அடிமையானவர்கள் தம்மைத் தாமே திருத்திக்கொள்வதற்கான காலக் கெடு ஒன்றை அறிவிக்கவும் எண்ணியுள்ளோம்.

இதேவேளை போதைப் பொருள் பாவனையைத் தடுப்பதற்கான குழுக்களையும் ஏற்கனவே அமைத்துள்ளோம். அந்தவகையில் இவ்வருடம், கிராமப்புறங்களிலும் இது போன்ற குழுக்களை அமைக்கவுள்ளோம். போதைப்பொருள் பாவனையில் இருந்து சிறுவர்களையும் இளைஞர் யுவதிகளையும் மீட்க முப்படையினர் பல்வேறு தியாகங்களைச் செய்து வருகின்றனர்.

குறிப்பாக, வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு எடுத்துவரப்படும் போதைப் பொருள்களைத் தடுக்கும் முயற்சியில் இலங்கை கப்பற்படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

தற்போது சட்டவிரோத சிகரெட் கடத்தல்களை முறியடிக்கும் நடவடிக்கை மூலம் சிகரட் பாவனையைக் குறைக்கும் முயற்சியிலும் இறங்கியுள்ளோம். இந்தநிலையில் சிகரெட்டுக்குப் பதிலாகப் பீடி புகைப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகச் சிலர் கூறி வருகிறார்கள். ஆனால் அதில் உண்மையில்லை.''-என்றார். (எ)

# சுற்றுலா விடுதிகளை தரப்படுத்தல் ஆரம்பம்

கொழும்பு, ஜன.06



சுற்றுலா விடுதிகளைத் தரப்படுத்தலுக்கான வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு;

இந்தத் திட்டத்தின் கீழ் சுற்றுலா விடுதிகளை 1 தொடக்கம் 5 நட்சத்திர ஹோட்டல்களாக வகைப்படுத்தப்படவுள்ளன.

இதற்கான அனுமதிப்பத்திரங்கள் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஹோட்டல்கள் அமைந்திருக்க வேண்டிய இடத்தின் அளவு அதனை நடத்துவது தொடர்பான விடயங்கள், அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் போது கவனத்திற் கொள்ளப் படும்.

இது தொடர்பாக சுற்றுலாத் துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. (எ)

# உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளுடன் பல்கலை அனுமதிக் கையேடு

கொழும்பு, ஜன.06

பல்கலைக்கழகங்களுக்கு இம்முறை மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான கையேட்டை, கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளுடன் வெளியிட எதிர்பார்த்துள்ளதாக, பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

குறித்தநுழைவுக்கையேட்டை அச்சிடுவதற்காக தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மொஹான் டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

## நாளை

07.01.2017
சனிக்கிழமை
திதி : நவமி 7.19 வரை
நட்சத்திரம்: அச்சுவினி மு.ப.11.39 வரை
சுபநேரம் : 03.32 - 05.02
இராகுகாலம் : 09.32 - 11.02

# தீவிர சிந்தனை போக்குடையோரின் தலையீட்டால் காணி விடயத்தில் சிறுபான்மையினருக்கு நெருக்கடி

## பிரித்தானிய பிரபுக்கள் சபை உறுப்பினரிடம் ஹக்கீம் எடுத்துரைப்பு

உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து ஆறு ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால் சிறுபான்மையினர் எதிர்நோக்கிவரும் காணிப் பிரச்சினைகள் பூதாகரமாக உருவம் எடுத்துள்ளன. மக்கள் பாரம்பரியமாக வசித்து வரும் பிரதேசங்களில் தமது வழிபாட்டுத்தலங்கள் இருந்துள்ளன எனக் கூறிக்கொண்டு, சமயம் சார்ந்த தீவிர சிந்தனைப் போக்குள்ள ஒரு சாரர் தடயங்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் கைங்கரியத்தில் இறங்கியிருக்கிறார்கள். இந்தப் பரபரப்பான நிலைமையை அரசு உரிய முறையில் தலையிட்டு தீர்வு காண வேண்டியது அவசியமாகும்.

-இவ்வாறு பிரித்தானிய பிரபுக்கள் சபையின் உறுப்பினர் நெஸெபியிடம் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், அமைச்சர் ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டினார்.

பிரபுக்கள் சபையின் உறுப்பினர் நெஸெபி பிரபு கடந்த செவ்வாய்க்கிழமை முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீமை அவரது இல்லத்தில் சென்று சந்தித்துக் கலந்துரையாடினார்.



இதன்போது தற்பொழுது கிழக்கில் நிகழ்ந்து வரும் சம்பவங்கள் தொடர்பிலும், பொதுவாக வட, கிழக்கின் காணிப் பிரச்சினைகள் பற்றியும் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் ஹக்கீம் இது தொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பரம்பரை பரம்பரையாக செய்கை பண்ணப்பட்டு வந்த விவசாய நிலங்கள் விடயத்தில் பொதுவாக வட,கிழக்கில் பிரச்சினைகள் இருந்து வருகின்றன. இவை பற்றி நாம் அரசின் கவனத்துக்கு பல தடவைகள் கொண்டு சென்றிருப்பதோடு, பல்வேறு மட்டங்களில் பேச்சுக்களையும் நடத்தியிருந்தோம். ஆனால் பிரச்சினைகள் உரிய முறையில் தீர்க்கப்படாமலேயே இருக்கின்றன.

வில்பத்து வனப்பிரதேசத்துக்கு அண்மையில் முன்னர் பரம்பரையாக வசித்த முஸ்லிம் மக்கள் மீள்குடியேற்றப்பட்டபொழுது அதற்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. ஒரு சாரார் வில்பத்து வனப்பிரதேசத்தை மீண்டும் விஸ்தரித்து வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கு முற்படும் அளவுக்கு ஜனாதிபதியை தவறாக வழிநடத்தியிருப்பது கவலை அளிக்கிறது.-என்றார்

மேலும், இடம்பெயர்ந்த வட, கிழக்கு மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போது, யுத்தம் முடிந்த பின்னரும் கூட அதனால் பாதிக்கப்பட்ட மக்களை மீள்குடியேற்றும் செயற்பாடுகள் மந்தகதியிலேயே நடைபெறுகின்றன. ஆனால் அரசும், மீள்குடியேற்றம் தொடர்பான அமைச்சும் இந்த விடயத்தில் கரிசனையாகவே இருக்கின்றன. எதிர்பார்த்தபடி வெளிநாடுகளில் இருந்து இதற்காகப் போதியளவு நிதியுதவிகள் கிடைப்பதில்லை என்று மேலும் அவர் தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச் சட்டத்துக்குப் பதிலாக வேறு சட்டம் கொண்டு வரப்படுவது பற்றி மேற்கு நாடுகளில் கவலை வெளியிடப்படுகிறது. அது தொடர்பில் என்ன கூற விரும்புகின்றீர்கள் எனக்கேட்டதற்கு, அது தொடர்பான சட்ட வரைவைப் பரிசீலிக்கும் பணி நாடாளுமன்றத்தில் மேற்பார்வைக்குழு ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என அமைச்சர் தெரிவித்தார். (இ-ச)

# குடாநாட்டு குற்றச்செயல்களுக்கு தண்டம்

### கசிப்புக்கு தண்டம் 30ஆயிரம் ரூபா

சுழிபுரம், ஜன.06

சுழிபுரம் பகுதியில் 4லீற்றர் 125 மில்லிலீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த 34 வயதுடைய நபர் ஒருவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்தார் மல்லாகம் நீதிவான் ரீ.கருணாகரன்.

கடந்த 21ஆம் திகதி சுழிபுரம் பகுதியில் 4 லீற்றர் 125 மில்லிலீற்றர் கசிப்பை வைத்திருந்த நபரை சங்கானை மதுவரிநிலைய அதிகாரிகள் கைது செய்திருந்தனர்.

பிரஸ்தாப நபருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரம் நேற்று முன்தினம் மல்லாகம் நீதிமன்றில் வாசிக்கப்பட்டபோது நீதிவான் தண்டம் விதித்ததுடன் கசிப்பை அழிக்கக் கட்டளை பிறப்பித்தார். (இ-9)

### வெளிநாடு சென்றுவிட்டதால் கணவரின் குற்றத்தை ஏற்று நீதிமன்றில் அபராதம் செலுத்தினார் மனைவி

சாவகச்சேரி, ஜன.06

குற்றச்சாட்டு ஒன்றுடன் தொடர்புபட்டிருந்த கணவன் வெளிநாடு சென்ற காரணத்தினால் அற்றோனி தத்துவம் எடுத்த மனைவி, கணவனின் குற்றச்சாட்டை ஏற்று அபராதம் செலுத்தினார். சாவகச்சேரி நீதிமன்றில்நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வழக்கு ஒன்றுக்கே மனைவி இவ்வாறு அபராதம் செலுத்தினார்.

2015ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கச்சாய் பகுதியில் வாகனம் ஒன்றில் சென்ற நபர் ஒருவரைக் கொடிகாமம் பொலிஸார் மறித்து சோதனையிட்டனர். இதன் போது அந்த நபர் மதுபோதையில் வாகனம் செலுத்திப் பொலிஸாரின்கடமைக்கு இடையூறு விளைவித்தார் என்று குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

அவர்அன்றைய காலப்பகுதியில் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். பின்னர் நிபந்தனை பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இந் நிலையில் மேற்படி நபர் வெளிநாடு சென்றுள்ளார். இது தொடர்பான அழைப்பாணை அந்த நபருக்கு அனுப்பப்பட்ட போதும் அவர் வெளிநாடு சென்ற காரணத்தால் சமுகம் தர முடியவில்லை என மன்றிற்குக் கூறப்பட்டது.

கணவருடைய நீதிமன்ற வழக்கை முடிக்க வேண்டும் என எண்ணிய மனைவி அற்றோனி தத்துவம் பெற்றுக் கொண்டு நேற்று முன்தினம் மன்றில் சமூகமளித்திருந்தார். அங்கு கணவன் புரிந்த குற்றத்தை மனைவி ஏற்றுக் கொண்டார். இதன் போது நீதிவானால் 16 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அபராதத் தொகையைச் செலுத்தி வழக்கை முடித்துக் கொண்டார் மனைவி. கச்சாய் பகுதியைச் சேர்ந்த பெண்ணே தனது கணவரின் குற்றச்சாட்டை ஏற்று அபராதம் செலுத்தியவர் ஆவார். (இ-9)

### சாரதிக்கு தண்டனை

சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய கெருடாவில் பகுதியைச் சேர்ந்த ஓட்டுநருக்கு 12 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார் பருத்தித்துறை நீதிவான்.

வல்வெட்டித்துறைப் போக்குவரத்துப் பொலிஸாரினால் இரவு வேளை கைதானவருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டது. (இ-9)

### சூது விளையாடிய 9 பேர் சிக்கினர்

பணத்துக்குச் சூது விளையாடிய 9 பேருக்கு தலா 100 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிவான்.

அத்துடன் சூது விளையாடுவதற்கு வைத்திருந்த 17ஆயிரத்து 200 ரூபாவையும் அரசுடைமையாக்குமாறு நீதிவான் கட்டளையிட்டார்.

கடந்த முதலாம் திகதி வல்வெட்டித்துறை ஊறணி பகுதியில் சட்ட விரோதமான முறையில் சூது விளையாடிய ஒன்பது பேர் வல்வெட்டித்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர். அந்த 9 பேருக்கும் தண்டம் விதிக்கப்பட்டது. (இ-9)

### இளைஞனுக்கு சீர்திருத்தக் கட்டளை

இரவுநேரம் வீதியில் அநாகரிகமான முறையில் நடந்து கொண்ட இளைஞன் ஒருவருக்கு அபராதத்துக்கு பதிலாக 200 மணித்தியாலங்கள் சமுதாய சீர்திருத்த கட்டளைக்கு உட்படுத்துமாறு பருத்தித்துறை நீதிவான் நளினி கந்தசாமி நேற்று முன் தினம் உத்தரவு பிறப்பித்தார்.

கடந்த திங்கட்கிழமை வல்வெட்டித்துறை பிரதான வீதியில் மதுபானம் அருந்தி அநாகரிகமான முறையில் நடந்து கொண்ட இளைஞனை பொலிஸார் கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

### அனுமதியின்றி பனை தறித்தவருக்கு அபராதம்

அனுமதியின்றி இரண்டு பனைமரங்களைத் தறித்த வீட்டு உரிமையாளருக்கு பருத்தித்துறை நீதி மன்றினால் 5ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.அத்துடன் தறிக்கப்பட்ட இரண்டு பனைமரங்களையும் அரசுடைமையாக்குமாறு நீதிவான் நளினி கந்தசாமி உத்தரவிட்டார்.

கடந்த 31 ஆம் திகதி உடுப்பிட்டி வதிரி வீதியில் உள்ள காணி ஒன்றில் இரண்டு பனை மரங்களைத் தறித்த வீட்டு உரிமையாளரை வல்வெட்டித்துறைப் பொலிஸார் கைது செய்திருந்தனர். அவருக்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டது. (இ-9)

# சிதம்பரநகர் மக்களுக்கு காணி உறுதிகள் பொங்கலுக்கு முன்னர் கிடைத்து விடும்!

## வுவுனியா பிரதேச செயலாளர் தகவல்

தைப்பொங்கலுக்கு முன்னர் வவுனியா,சிதம்பரநகர் மக்களுக்கு காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும் என்று வவுனியா மாவட்ட பிரதேச செயலாளர் கா.உதயராசா தெரிவித்துள்ளார்.

சிதம்பரநகர் மக்களுக்கான காணி அனுமதிப் பத்திரம் வழங்காமை தொடர்பாகக் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த வருடம் சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த 187 குடும்பங்களுக்கு அவர்கள் தங்கியிருந்த பகுதிகளில் காணிகள் வழங்கப்பட்டிருந்தன. சிதம்பரநகர் கிராமம் என அப்பகுதி மீள்குடியேற்றம் செய்யப்பட்டு உத்தியோகபூர்வமாக வட மாகாண முதலமைச்சரால் கடந்த ஜூன் 30 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

இதன் போது 20 குடும்பங்களுக்கு முதல் கட்டமாக காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. மிகுதியாக இருக்கும் குடும்பங்களுக்கு தைப்பொங்கலுக்கு முன்னதாக காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்க நடவடிக்கைமேற்கொள்ளப் பட்டுள்ளதாககா.உதயராசா குறிப்பிட்டார். (100)

# அரச வேலை வாய்ப்பில் பண மோசடி; நிரூபிக்கப்பட்டால் சட்ட நடவடிக்கை

## எச்சரிக்கிறார் கிழக்கு முதலமைச்சர்



அரசதுறைகளில் வேலை வாய்ப்புகள் பெற்றுத் தருவதாகக் கூறி பணம் பெறுவோரிடம் ஏமாற வேண்டாம். கையூட்டலைப் பெற்றுக் கொண்டு தொழில் நியமனங்கள் வழங்கப்படுவதில்லை. அவ்வாறு கையூட்டல் வழங்கி அரசநியமனங்களைப் பெறவோ அல்லது பெற்றுக் கொடுக்கவோ இருக்கின்றமை தொடர்பில் நிரூபிக்கப்பட்டால், அத்தகைய நபர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

-இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

அரச வேலை பெற்றுத் தருவதாகக் கூறி பல லட்சம் ரூபா பணம் பெற்றுக்கொண்டு சிலர் ஏமாற்றியுள்ளனர். இது தொடர்பான முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களில் அண்மைக்காலமாக பதிவாகியுள்ளன. மாகாண அரச நிர்வாகத்தில் பணம்பெற்றுக் கொண்டு எவருக்கும் நியமனம் வழங்கப்படுவதில்லை. கிழக்கு மாகாணத்தில் அரச தொழில்கள், தகைமை மற்றும் நியதிகளின் அடிப்படையில் வெளிப்படைத் தன்மையுடன் ஒழுங்கு முறையாக மாத்திரமே வழங்கப்படுகின்றன.

வேலைவாய்ப்புக்காக ஏங்குவோர் எந்த நபரிடமும் பணம் கொடுத்து ஏமாற வேண்டாம். கடந்த காலத்தில் இவ்வாறு அரசியல் அதிகாரத்தில் இருந்த சிலர், நியமனங்களை வழங்குவதற்குப் பணம் பெற்று அத்தகைய மோசடி அரசியல் தொழில் வழங்கும் கலாசாரத்தை அனுமதிக்க முடியாது.

இந்த முயற்சிக்கு வேலை வாய்ப்புக்காக காத்திருப்போர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.மேலும், வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தருவதாகக் கூறிப் பணம் கேட்கும்போது, எந்த அமைச்சின் மூலமாக வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறுகின்றார்களோ, அந்த நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு விவரங்களைப் பெற்று, பணம் கேட்ட நபர் பற்றிய விவரங்களைப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்த வேண்டும்.- என்றுள்ளது. (ச)

## 30 போதனாசிரியர் பிரிவுகளில் காளான் செய்கை

மட்டக்களப்பு மாவட்டத்தில் 30 விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் காளான் செய்கை பண்ணப்பட்டு வருகிறது என்று ஆரையம்பதி பிரதேச சத்துக்கான விவசாயப் போதனாசிரியை குந்தவை ரவிசங்கர் தெரிவித்தார்.

இங்கு வீட்டுத் தோட்டத்தின் ஓர் அங்கமாகக் காளான் செய்கை காணப்படுகிறது. இதில் பெண்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். காளான் செய்கையாளர்களுக்கு கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தால் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## கிரான் மகா வித்தியாலயத்தில் கணித, விஞ்ஞானப் பிரிவுகள்



கல்குடாகல்வி வலயத்துக்கு உட்பட்ட கிரான் மத்திய கல்லூரியில் 2019 ஆம் ஆண்டுக்கான உயர் தரமாண வர்களுக்கான கணித மற்றும் விஞ்ஞான பிரிவுகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிரான் மத்திய மகா வித்தியாலயத்தில் முதற்தடவையாக உயர்தரகற்கைகளில் கணிதம் மற்றும் விஞ்ஞானப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## போக்குவரத்து விதிகளை மீறியவர்களுக்கு அக்கரைப்பற்றில் 69 லட்சம் ரூபா அபராதம்

### கடந்த வருட புள்ளிவிவரத் தகவல்

அக்கரைப்பற்று,ஜன.06

அக்கரைப்பற்றில் கடந்த வருடத்தில் ஜனவரி முதல் டிசெம்பர் வரையான காலப் பகுதியில் போக்குவரத்து விதிகளை மீறிய குற்றச்சாட்டின் பேரில் உடனடியாக 51 இலட்சத்து 63 ஆயிரத்து 700 ரூபாவும், நீதிமன்றத்தின் மூலம் 17லட்சத்து 42ஆயிரத்து 600 ரூபாவும் அபராதமாக அறவிடப்பட்டுள்ளது என்று அக்கரைப்பற்றுப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எல்.எம்.ஜெமீல் நேற்றுத் தெரிவித்தார்.

இக்காலப்பகுதியில் போக்குவரத்து விதிகளை மீறியமை தொடர்பில் 17 ஆயிரத்து 786 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இப்பிரதேசத்தில் இடம்பெற்ற 94 வாகன விபத்துகளில் 17 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)



தேசிய மற்றும் உள்ளூர் ஊடகங்களில் கடமையாற்றும் மட்டக்களப்பு காத்தான்குடி மீடியா போரத்தின் ஊடகவியலாளர்களுக்கு நவீன தொழில்நுட்ப புகைப்படக் கருவிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை வழங்கப்பட்டன.

காத்தான்குடி மீடியா போரத்தின் தலைவர் ஊடகவியலாளர் எஸ்.எம்.எம்.முஸ்தபா தலைமையில் காத்தான்குடி கடாபி மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்வில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எப்.எம்.சிப்லி பிரதம அதிதியாக பங்கேற்று இப் புகைப்படக் கருவிகளை வழங்கினார். (ச)

# காணாமற்போன மீனவர்களில் இருவர் மாலைதீவு கடற்படையினரால் மீட்பு!

கல்முனையைச் சேர்ந்த 6 மீனவர்களுடன் கடலுக்குச் சென்ற 2 இயந்திரப் படகுகள் காணாமற்போயிருந்தன. இந்நிலையில், அவற்றில் ஒரு படகு 2 மீனவர்களுடன் மாலைதீவு கடற்படையினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

மாலைதீவுத் துறைமுகத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள இவர்கள் இருவரும், நேற்று அதிகாலை தங்களின் குடும்பங்களுக்குத் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு இத் தகவலை வழங்கியுள்ளனர்.

கடந்த டிசெம்பர் 24 ஆம் திகதி மீன்பிடித் தொழிலுக்காக ஒலுவில் துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்ற 2 படகுகள் கரைக்குத் திரும்பவில்லை என மீனவர்களின் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டிருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் திசை மாறிச்சென்ற இந்தப் படகுகளின் எரிபொருள் தீர்ந்துவிட்ட நிலையில், கடல் காற்றினால் நகர்ந்து கொண்டிருந்த மேற்படி படகை, மாலைதீவுக் கடற்படையினர் அவதானித்துள்ளனர். இதனை அடுத்து பிரஸ்தாப படகை மாலைதீவுத் துறைமுகத்துக்குக் கட்டி இழுத்துச் சென்றுள்ளனர். பாதுகாப்பாக மீட்கப்பட்ட படகில் 3 மீனவர்கள் இருந்த போதிலும், மற்றைய படகிலுள்ள மீனவர்களுக்கு உதவுவதற்காக ஒரு மீனவர் மற்றைய படகில் ஏறியுள்ளார். பின்னர் அந்தப் படகு வேறு திசை நோக்கி நகர்ந்து விட்டது என்று மீட்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (ச)

## விபத்தில் மூவர் படுகாயம்

காத்தான்குடி,ஜன.06

வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனிச்சங்கேணிப் பகுதியில் ஓட்டோ ஒன்று மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயம் அடைந்துள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை காலை இடம் பெற்ற இந்த விபத்தில் காத்தான்குடியைச் சேர்ந்த ஏ.எல்.அகமட் லெவ்வை(வயது-49) அவரது மனைவி எம்.எஸ்.பவுஸியா (வயது-46) மகள் பாத்திமா அதூ (வயது-5) ஆகியோரே படுகாயமடைந்தவர்கள் ஆவர். (ச)

## களுவாஞ்சிக்குடியில் தங்க நகைகள் திருட்டு

களுவாஞ்சிக்குடிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குருக்கள் மடம் பகுதியிலுள்ள விஷ்ணு கோவில் வீதியை அண்டி அமைந்துள்ள வீடு ஒன்றிலிருந்து 10 பவுண் பெறுமதியான தங்க நகைகள் திருடப்பட்டுப் போயுள்ளன.

நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சுமார் 4 லட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான 10 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டுப் போயுள்ளன.

சம்பவ வீட்டில் எவரும் இல்லாத நிலையில்,கதவை உடைத்துக் கொண்டு திருடர்கள் நுழைந்துள்ளனர்.

களுவாஞ்சிக்குடி பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

## கிழக்கில் கடந்த இரு தினங்களாகக் கடுங்குளிர்

கிழக்கு மாகாணத்தில் கடந்த இரண்டு தினங்களாக மாலை வேளையிலிருந்து காலை ஏழு மணிவரை கடுங் குளிர் நிலவுகிறது என மக்கள் தெரிவிக்கின்றனர்.

நகரப் பகுதிகளை விட கிராமப் புறங்கள் மற்றும் வயற் பிரதேசங்கள் ஆகியனவற்றிலே குளிர் அதிகமாக உணரப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த கால அனுபவத்தின்படி இத்தகைய குளிர் நிலவுவது அடுத்து வரப்போகின்ற கடும் வறட்சிக்கான அறிகுறியாக இருக்கலாம் என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் இந்த ஆண்டுக்கான பருவமழை போதியளவு கிடைக்காது போனதால் ஏற்கெனவே மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் மழையை நம்பி மேற்கொள்ளப்படும் நெற்செய்கை 90 வீதம் அழிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சிறுபான்மை மக்களின் இடங்கள் புராதன பகுதிகளாக அடையாளம்

கிழக்கு மாகாணத்தில் சிறுபான்மைச் சமூகங்களுக்குச் சொந்தமான 54 இற்கும் மேற்பட்ட இடங்கள் புராதன இடங்களாக அடையாளப்படுத்தப்பட்ட நிலையில், அவற்றுக்குப் சிறுபான்மைச் சமூகம் உரிமை கொண்டாடுகின்றன. இதனால் சிறுபான்மைச் சமூகங்களின் இருப்பு கேள்விக்குறியாகி உள்ளது.

- இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர்சிப்லி பாறூக் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அக்கரைப்பற்று, பொத்தானைக் கிராமத்தில் 200 வருடங்கள் பழமை வாய்ந்த பள்ளிவாசல், அதனுடன் சூழவுள்ள பிரதேசங்கள் புராதன இடங்களாக அடையாளம் காணப்பட்டிருக்கின்றன. இந்த இடங்களை நல்லாட்சி அரசாங்கம் அபகரிக்கும் நிலைமை உருவாகியுள்ளது.


சிறுபான்மையின அரசியல் பிரதிநிதிகள் ஒற்றிணைந்து குரல் கொடுக்கும் நிலைமை உருவாகியுள்ளது - என்றார். (ச)

# அம்பாந்தோட்டையில் வழிபாட்டுத் தலங்கள் தொல்பொருள் உரிமை அழிவடையுமா?

## அப்படி இல்லை என மறுக்கிறது அரசாங்கம்

கொழும்பு, ஜன.06

அம்பாந்தோட்டையில் 15 ஆயிரம் ஏக்கர் காணியைச் சீனாவுக்கு வழங்குவதன் மூலம் பௌத்த வழிபாட்டுத் தலங்கள் மற்றும் தொல்பொருள் உரிமை ஆகியன அழிவடையப் போன்றன என்று சிலர் கூறிவருகின்றனர்.




இது சில வங்குரோத்து அரசியல்வாதிகள் தமது குறுகிய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக மேற்கொள்கின்ற பொய்ப் பிரசாரங்களாகும் என்று அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

அரசாங்கத்தின் சுற்றுலா மேம்பாடுகள் குறித்துஜிரித்துப் பினர் முன்னெடுக்கும் இவ்வாறான பிரசாரங்கள் மூலம் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தைத் தடுக்க முடியாது.

தெற்கு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பல்வேறு முதலீடுகள் தொடர்பில் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இதுவரையில் துறைமுக அபிவிருத்தி தொடர்பில் அடிப்படை ஏற்பாடுகளில் உடன்பாடு காணப்பட்டுள்ளது.

சில உடன்படிக்கைகள் தொடர்பில் தற்போது பேச்சுக்கள் முன்னெடுக்கப்படவில்லை. அம்பாந்தோட்டைத் துறைமுக செயற்பாடுகள் மற்றும் அதனை வெற்றிகரமானதுறைமுகமாக மேம்படுத்துவதற்கு பொருள் ஏற்றுமதி நடவடிக்கைகளை இதன் மூலம் விரிவுபடுத்த வேண்டும்.

முதலீட்டுக்காக அம்பாந்தோட்டை துறைமுக பிரதேசத்தில் 1200 ஏக்கர்கள் இதுவரையில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்துக்காக தனியார் காணிகளில் 5 சதவீதமான அளவு பெற்றுக் கொள்ளப்படும். அவ்வாறு பெற்றுக் கொள்ளப்படும் காணிகளுக்கு நஷ்டஈடு வழங்கப்படும் என்றும் அரசுதெரிவித்துள்ளது.

# இந்திய - இலங்கை கடலோரக் காவல்படை அதிகாரிகள் இடையே முக்கிய பேச்சு

கடல்சார் ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வது தொடர்பாக, இந்திய-இலங்கைக் கடலோரக் காவல்படை உயர் அதிகாரிகள் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

இலங்கைக் கடலோரக் காவல்படையின் பணிப்பாளர் நியர் அட்மிரல் சமந்த விமலதுங்க தலைமையிலான மூன்று பேர் கொண்ட, அதிகாரிகள் குழு மூன்று நாள்கள் பயணமாக இந்தியா சென்றுள்ளது.

இந்தக் குழுவினரை இந்திய கடலோரக் காவல்படையின் பணிப்பாளர் நாயகம், ராஜேந்திரசிங் நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலானகடல்சார் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது, பரஸ்பர கரிசனைக் குரிய கடல்சார் விவகாரங்கள், கூட்டு அணுகுமுறையை உருவாக்குவது தொடர்பாக இந்தப் பேச்சுக்களில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், இரண்டு நாடுகளின் கடலோரக் காவல் படைகளுக்கும் இடையிலான தொடர்பாடலை அதிகரிப்பது குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது.

இலங்கை கடலோரக் காவல் படை அதிகாரிகள் குழுவினர், இந்தியாவின் பாதுகாப்புச் செயலர் ஜி.மோகன் குமாரையும் சந்தித்து, பொதுவான கடல்சார் நலன்கள் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

# வாக்காளர்களைப் பதிவுசெய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டம் நீடிப்பு

கொழும்பு, ஜன.06

யுத்தத்தினால் இடம்பெயர்ந்துள்ள மக்களின் வாக்குரிமையைப் பாதுகாக்கும் நோக்கில் தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச வாக்காளர்களைப் பதிவு செய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டத்தை நீடிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வாக்காளர்களைப் பதிவு செய்வதற்கான 2013 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க விசேட ஏற்பாடுகள் சட்டத்தை அமுல்படுத்தும் காலப்பகுதி 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.

இதுதொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவின் பரிந்துரைக்கு அமைவாக இந்தப் பதிவுகளை மேற்கொள்வதற்கு மேலும் காலஅவகாசம் தேவையென அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இடம் பெயர்ந்த மக்களின் வாக்குரிமையை பாதுகாப்பதற்கான விசேட ஏற்பாடுகள் சட்டத்தை மேலும் நான்கு வருடங்களால் நீடிப்பதற்காக நாடாளுமன்ற அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் நீதியமைச்சரினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்தவர்களின் வாக்குரிமையை பாதுகாப்பதற்கான விசேட ஏற்பாடுகள் சட்டமூலத்தை நான்கு வருடங்களால் நீடிக்கும் யோசனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர் வர்த்தமானி பிரகடனம் ஊடாக நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# நவீன தொழில்நுட்பத்துடனான பால் பண்ணை இலங்கையில்!




அதி நவீன தொழில்நுட்பத்துடனான பால் பண்ணை இலங்கையில் அமைக்கப்படவுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தை அம்பேவலயில் அமைப்பதற்குச் சுவிற்ஸர்லாந்து முதலீட்டாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இதற்காக 90 கோடி ரூபா செலவிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2014 ஆம் ஆண்டு இந்த முதலீடு குறித்து திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதனைச் செயற்படுத்த முடியாமல் போனதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது அம்பேவலயில் 200 ஏக்கர் நிலம் இதற்காக இனம் காணப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் உரிய முறையில் அமுல்படுத்தப் பட்டால், பிரதேசவாசிகள் பெரும் நன்மை பெறுவர் என்றும் அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அம்பாந்தோட்டையில் சீன கடற்படைத் தளம்; ஒருபோதும் அனுமதியில்லை என்கிறது அரசு!

அம்பாந்தோட்டையில் சீனா தனது கடற்படைத் தளத்தை அமைக்கவுள்ளது என்று வெளியாகும் தகவல்களை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

இது தொடர்பாகக் கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர நேற்று முன்தினம் தெரிவித்தவை வருமாறு:-

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீனா கடற்படைத் தளத்தை அமைத்துக் கொள்ளப் போவதாக சில குழுக்கள் பொது மக்களைத் தவறாக வழிநடத்த முனைகின்றன.

அரசாங்கத்தின் அனுமதியில்லாமல் எந்தவொரு வெளிநாடும், இலங்கையில் இராணுவத் தளங்களை அமைக்க முடியாது.

துறைமுகத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளை இலங்கைக் கடற்படையே கையாளும்.

அம்பாந்தோட்டைத் துறைமுகப் பகுதியில் சீமெந்து தொழிற்சாலை, இயற்கைத் திரவ எரிவாயு நிலையம், எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை என்பன நிறுவப்படும்.

பெரிய இழப்புகளில் இருந்து இலங்கையை மீட்பதற்காக, சீனாவும், இலங்கையும் இணைந்து துறைமுகத்தை இயக்குவதற்கு உடன்பாடு காணப்பட்டுள்ளது.

இதுபற்றிய புரிந்துணர்வு உடன்பாடு ஏற்கனவே, சீன நிறுவனத்துடன் கையெழுத்திடப்பட்டுள்ளது.

துறைமுக செயற்பாடுகள் தொடர்பாக வேறும் பல உடன்பாடுகள் விரைவில் கையெழுத்திடப்படும்.

15 ஆயிரம் ஏக்கரில் அம்பாந்தோட்டையில் முதலீட்டு வலயம் ஒன்றை உருவாக்குவது குறித்தும் பேச்சுக்கள் நடத்தப்படுகின்றன என்றும் தெரிவித்துள்ளார்.

# காணிகளில் மண் நிரப்பும் நடவடிக்கை தடுத்து நிறுத்தினார் ஜனாதிபதி மைத்திரி!

கொழும்பு, ஜன.06

ஜாஎல, தடுகம ஆகிய பகுதிகளில் இரண்டு இடங்களில் மண்போட்டுக் காணிகளை சட்டவிரோதமாக நிரப்பும் நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பிரதேச மக்கள் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்து இந்த உத்தரவை அவர் பிறப்பித்துள்ளார்.

மத்திய சுற்றாடல் அதிகார சபை இதனை நிறுத்துவதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பில் விரிவான விசாரணையை மேற்கொள்வதற்கும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவருக்கும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முத்துராஜவெல காட்டைப் பாதுகாப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள கண்டல் தாவரங்கள் இதனால் பாதிக்கப்படுகிறன்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டவிரோத நடவடிக்கையுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தனியார் ஊழியர்களின் பணிநேரம் அதிகரிக்கும்?

கொழும்பு, ஜன.06

தனியார்துறை ஊழியர்களின் பணி நேரத்தை 9 மணித்தியாலமாக மாற்றியமைப்பதற்கான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தேசிய தொழிலாளர் பேரவையில் இந்த விடயம் குறித்துக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று தொழில் ஆணையாளர் நாயகம் சாந்தனி அமரதுங்க குறிப்பிட்டார்.

# கழிவுகள் சூழ்ந்த நிலையில் முல்லை. கடற்கரைப் பகுதி



முல்லைத்தீவு, ஜன.06

முல்லைத்தீவு நகரத்துக்கு அண்மையாக உள்ள கடற்கரை பிரதேசம் மற்றும் அதனைச் சூழ உள்ள பிரதேசங்கள் குப்பைகளாலும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுப்பொருள்களாலும் நிறைந்து காணப்படுவதால் பொழுது போக்கிற்காக ஒன்று கூடும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி உள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலேயே மிகவும் பிரபல்யமானதும் பெருமளவு மக்கள் தமது ஓய்வு நேரங்களை இனிமையாகக் கழிப்பதற்கு ஒன்று கூடும் இடமா கவும் காணப்படும் இப்பிரதேசத்தில் கழிவுகள் அகற்றப்படாமை குறித்து பலரும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

கரைதுறைப்பற்று பிரதேச சபையினரின் அசமந்தப் போக்கு காரணமாக பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் சிறுவர்கள் எனப் பலதரப்பட்டோர் பாதிக்கப்படுவதுடன் சுற்றாடலும், இயற்கையான கடற்கரையோரமும் மாசடைந்து வருவதை அவதானிக்க முடிகிறது.

ஆகவே, சம்பந்தப்பட்ட தரப்பினர் இதனைக் கருத்தில் கொண்டு அந்தப் பிரதேசத்தை நாளாந்தம் சுத்தமாகவும் அழகாகவும் பேணுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இதேவேளை இப்பிரதேசத்தில் கழிவகற்றும் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருக்கும் பிரதேச சபையினர் வருமானத்தை மட்டும் கருத்தில் கொண்டுள்ளனர் என்றும் மக்களின் பொழுது போக்கு இடங்கள் மற்றும் நகரப் பகுதிகளை அழகுபடுத்திப் பேணுவதில் அவர்கள் அக்கறை காட்டுவதில்லை என்றும் பொதுமக்கள் குறை கூறுகின்றனர். (இ-81)

## முள்ளியவளை-வற்றாப்பளை வீதி உரிய முறையில் செப்பனிடப்படுமா?

முள்ளியவளை, ஜன.06

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட, வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமான முள்ளியவளை-வற்றாப்பளை பிரதான வீதி தகுந்த முறையில் செப்பனிடப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சுமார் நான்கு கிலோமீற்றர் அளவுடைய இவ்வீதி மீள்குடியேற்றத்துக்குப் பின்னர் எவ்விதமான நிரந்தர அபிவிருத்திப் பணிகளும் இல்லாத நிலையில் காணப்படுகின்றன. தற்போது அந்த வீதியில் 170 மீற்றர் தூரமான அளவுக்கு மட்டும் கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்படுகின்றது.

இதேவேளை குறிப்பிட்ட தூர இடைவெளிக்குள் அடங்கும் சிறு பாலங்கள் எவையும் சீரமைக்கப்படாமலேயே அவற்றுக்கு மேல் கொங்கிறீட் இடப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் கூறுகின்றனர்.

இவ்வாறு தகுந்த முறையில் செப்பனிடல் இடம்பெறாததால் முள்ளியவளை 4 ஆம் வட்டாரப் பகுதியில் இருந்து பள்ளவெளிப் பாலம் ஊடாக நந்திக்கடலுக்கு வழிந்தோடும் வெள்ள நீர் வெளியேற வழி இன்றி மக்களின் காணிகளுக்குள் தேங்கி நிற்கும் நிலை ஏற்படுகின்றது. இதனால் சுற்றுச் சூழல் பாதிக்கும் நிலை ஏற்படுவதாகப் பொது மக்கள் அச்சம் வெளியிடுகின்றனர். எனவே, உரியவர்கள் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)



## செயற்படாத நிலையில் நூல் நிலையம்; முள்ளியவளை மக்கள், வாசகர் கவலை!

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முள்ளியவளை மேற்கு கிராமத்தில் உள்ள நூல்நிலையக் கட்டடம் எவ்விதமான பாவனையும் அற்று பாழடையும் நிலையில் இருப்பதாக பிரதேச மக்களும் வாசகர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.




அந்தக் கட்டடத்தை தமது ஆளுகையின் கீழ் வைத்திருக்கும் கிராம மட்ட அமைப்பினரின் அக்கறையின்மையே இவ்வாறான நிலைக்குக் காரணம் என்று மக்கள் மத்தியில் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி நூல் நிலையத்துக்கு பிரதேச சபையால் நாளாந்த, வாராந்தப் பத்திரிகைகள் வழங்கி அதனை நடைமுறைப்படுத்த கரைதுறைப்பற்றுபிரதேசசபையின் முள்ளியவளை உப அலுவலகத்தினர் தயாராக இருக்கின்றனர்.

எனினும் அந்தக் கிராம மட்ட அமைப்பினரும் கிராம மட்ட அரச அலுவலர்களினதும் அக்கறையின்மையே அந்த நூல் நிலையம் செயற்படமுடியாதநிலைக்குக் காரணம் என்று பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, இவ்வாறு இயங்காமல் இருக்கும் அந்த நூல் நிலையத்தைப் பிரதேச சபையினர் பொறுப்பேற்று நடைமுறைப்படுத்துவதனூடாக மக்களும் வாசகர்களும் பயனடைவர் என்று பொது மக்கள் குறிப்பிடுகின்றனர்.(எ)

## மன்னார் கடலில் இரவுவேளை சுழியோடி சங்கு, கடலட்டை பிடிக்க கடற்படை தடை!

### தொழில் பாதிப்பால் மீனவர்கள் அதிருப்தி, கவலை

மன்னார்,ஜன.06

மன்னார் மாவட்டத்தில் கடலில் சுழியோடி கடலட்டை, சங்கு பிடிப்பதற்கு கடற்றொழில் திணைக்களத்திடம் வருடாந்த அனுமதிப்பத்திரம் பெற்றிருந்தபோதும் இரவு வேளையில் இந்தத் தொழிலை மேற்கொள்வதற்கு கடற்படையினர் தடை விதித்துள்ளனர் என்று பாதிப்படைந்துள்ள மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது குறித்து தெரியவருவதாவது:-

மன்னார் மாவட்டத்தில் தென்கடல் பகுதியில் நீண்ட காலமாக சில மீனவர்கள் சுழியோடி சங்கு, கடலட்டை பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்

இந்தத் தொழிலில் ஈடுபடுவோர் கடற்றொழில் திணைக்களத்திடம் விண்ணப்பித்து வருடாந்த அனுமதியைப் பெற்றே ஈடுபட்டு வருகின்றனர் எனவும், மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் இந்தத் தொழில் ஒக்ரோபர் மாதம் தொடக்கம் ஏப்ரல் மாதம் வரையுமே மன்னார் தென்கடல் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் தற்பொழுது பகல் நேரங்களில் மட்டும் தொழில் செய்ய அனுமதிக்கும் கடற்படையினர், இரவு வேளையில் இத் தொழிலை மேற்கொள்ளத் தடை விதித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் 300 மீனவர்கள் சிலிண்டர் மூலமும் சுமார் 300 மீனவர்கள் சிலிண்டர் இல்லாமலும் இத் தொழிலில் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

கடற்றொழில் திணைக்களம் இத் தொழிலை இரவு-பகல் செய்வதற்கு அனுமதி வழங்கியிருக்கக் கடற்படையினர் இரவு வேளையில் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டதற்கான காரணம் தெரியாமல் பாதிப்படைந்துள்ள மீனவர்கள் திண்டாடுகின்றனர். அதுவும் சங்கு, கடலட்டை பிடிபடும் இக் காலத்தில் இவ்வாறு தடை விதித்திருப்பது குறித்து மீனவர்கள் கவலையும் விரக்தியும் அடைந்துள்ளனர்.

(இ-112)

## முல்லைத்தீவு பிரதான வீதியுடனான போக்குவரவு சில மணி நேரம் தடங்கல்

முல்லைத்தீவு, ஜன.06

முல்லைத்தீவிலிருந்து பரந்தன் செல்லும் ஏ-35 பிரதான வீதியில் வட்டுவாகல் பாலத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் இரவு போக்குவரத்துதடைஏற்பட்டிருந்தது. பாலத்தின் நடுவே கனரக வாகனம் ஒன்றை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று பழுதடைந்த காரணத்தாலேயே இந்தத் தடை ஏற்பட்டது.

எனினும் பின்னர் போக்குவரத்து சீர் செய்யப்பட்ட நிலையில் தற்போது போக்குவரத்து நிலைமை சீராகியுள்ளது. இதேவேளை அந்தப் பாலம் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. இந்த நிலையில் அதனூடாக கனரக வானகத்தை ஏற்றிய நிலையில் பயணித்த லொறி பாலத்தின் நடுவில் பழுதடைந்து நின்றது. இதனால் அந்த வீதியூடாகச் சேவையில் ஈடுபடும் பஸ்கள் மற்றும் ஏனைய கனரக வாகனங்களும் மாற்றுவழியைப் பயன்படுத்த முடியாத நிலையில் பாலத்தின் இருமருங்கிலும் நீண்ட வரிசையில் மாலை 5 மணி தொடக்கம் பல மணி நேரமாகக் காத்து நின்றன.


இந்தநிலையில் தூர இடங்களிலிருந்து பஸ்களில் முல்லைத்தீவுக்குச் சென்ற பயணிகள் வட்டுவாகலில் இருந்து முல்லைத்தீவு நகரம் வரை நடந்து சென்றனர்.



இதேவேளை அந்த லொறியைச் செலுத்தி வந்தவர்கள் வாகனத்தை நடு வீதியில் விட்டு விட்டுச் சென்ற நிலையில் கடற்படையினரும் பொது மக்களும் இணைந்து வீதியில் உள்ள வாகனத்தை அகற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டனர். அதனையடுத்து போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது.

இந்தநிலையில் வட்டுவாகல் பாலம் பிரதானமான பாலமாகக் காணப்படுவதுடன் மிக ஒடுக்கமாகவும் சேதமடைந்த நிலையிலும் உள்ளது.

எனவே உரிய அதிகாரிகள் இதனைக் கவனத்தில் எடுத்து மிக விரைவில் பாலத்தைப் புனரமைக்க வேண்டிய தேவை உள்ளது என்று பல தரப்பினராலும் கோரிக்கை முன்வைக் கப்பட்டுள்ளது. (எ)



முருகபூபதி - ஆஸ்திரேலியா

# அடிநிலை மக்களின் குரலாக ஒலித்த தெணியான்

## இன்று அவருக்கு வயது 75

கந்தையா நடேசன் என்ற இயற்பெயர் கொண்டவரும், இலக்கிய ஊடகத்துறைகளில் தெணியான் என அழைக்கப்பட்டவருமான ஈழத்தின் மூத்த இலக்கிய ஆளுமையின் பிறந்த தினம் இன்றாகும்.

வடமராட்சியில் பொலிகண்டியில் கந்தையா - சின்னம்மா தம்பதியருக்கு 06-01-1942 இல் பிறந்த நடேசு, இலக்கிய உலகில் பிரவேசித்ததும் தெணியான் என்ற பெயரில் எழுதத் தொடங்கியவர்.

தான் கல்வி கற்ற கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரியிலேயே நீண்டகாலம் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றுள்ள தெணியான் மற்றும் ஒரு மூத்த எழுத்தாளர் கே. டானியலின் வாரிசு எனவும் வர்ணிக்கப்பட்டவர்.

உட்படப் பல இதழ்களில் அயராமல் தொடர்ந்து எழுதியிருப்பவர்.

இவருடைய கழுகுகள் (நாவல்) சொத்து (சிறுகதைத்தொகுதி) என்பன தமிழ்நாட்டில் பிரபல பிரசுர நிறுவனங்களான நர்மதா பதிப்பகம், என்.சி.பி.எச் வெளியீடுகளின் ஊடாக தமிழக வாசகர்களையும் சென்றடைந்துள்ளன.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் வாழ்ந்த காலத்தில் யாழ்ப்பாணக் கிளையின் செயலாளராகவும் இயங்கியிருக்கும் தெணியான், தமது படைப்புகளுக்காக இலங்கை தேசிய சாகித்திய விருது, வடக்கு கிழக்கு மாகாண அமைச்சுப்பரிசு, யாழ். இலக்கிய வட்டத்தின் பரிசு, இலங்கை தேசிய கலை இலக்கியப்பேரவை - தமிழ்நாடு சுபமங்களா இதழ் ஆகியன இணைந்து வழங்கிய பரிசு மற்றும் தமிழ்நாடு கு.சின்னப்பாரதி அறக்கட்டளை விருது, கொடகே விருது, கலாபூஷணம் விருது ஆகியனவற்றுடன் இலங்கை அரசின் உயர் இலக்கிய கௌரவமான சாகித்திய ரத்னா விருதும் பெற்றிருப்பவர்.

இலங்கை வானொலிக்காக முன்னர் பல நாடகங்களும் எழுதியிருக்கும் தெணியான், பேராசிரியர் கா.சிவத்தம்பி, மல்லிகை ஜீவா ஆகியோர் பற்றியும் விரிவான நூல்களை வரவாக்கியிருப்பவர்.

தான் கல்வி கற்ற, ஆசிரியப்பணியாற்றிய தேவரையாளி இந்துக்கல்லூரியின் இரண்டு வெளியீடுகள் மற்றும் மல்லிகை ஜீவாவின் ஈழத்திலிருந்து ஓர் இலக்கியக்குரல் நூலினதும் தொகுப்பாசிரியரும் ஆவார்.

இலக்கிய ஆளுமைகள் இவர் பற்றி எழுதியிருக்கும் மணிவிழா சிறப்பு நூலும் வெளிவந்திருக்கிறது.

இவரது பல்துறை இலக்கிய ஆற்றல்களை மதிப்பீடு செய்யும் ''தெணியானின் படைப்புகள் மீதான பார்வை'' - ''தெணியானின் ஜீவநதிச் சிறுகதைகள்'' ஆகியனவற்றை யாழ். ஜீவநதி கடந்த 2013 இல் இவரது பிறந்த தினத்திலேயே விழா எடுத்து வெளியிட்டமை குறிப்பிடத்தகுந்தது.

இலங்கையில் மல்லிகை, ஞானம், கனடா காலம் முதலான கலை, இலக்கிய இதழ்கள் தெணியானை அட்டைப்பட அதிதியாகவும் பாராட்டிக் கௌரவித்துள்ளன.

நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் பல நாவல்கள் உட்பட சில விமர்சனக் கட்டுரைத் தொகுதிகளையும் தமிழ் இலக்கியத்துக்கு வரவாக்கியிருக்கும் தெணியானின் பாதுகாப்பு என்ற சிறுகதை யாழ்ப்பாணம் ஜீவநதியில் வெளிவந்தது. இச்சிறுகதை தற்போது இலங்கைப் பாடசாலைகளில் 11 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான தமிழ் பாட நூலிலும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் இருந்து முன்னர் வெளியான விவேகி இதழில் 1964 இல் தெணியானின் முதல் சிறுகதை பிணைப்பு வெளியாகியது. அதனைத் தொடர்ந்து மல்லிகை, ஞானம், யாழ். முரசொலி, வீரகேசரி, தினக்குரல்

கனடாவில் வதியும் தெணியானின் தம்பி க.நவம் நடத்திய நான்காவது பரிமாணம் இதழின் சார்பில் வெளியான மரக்கொக்கு நாவல் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

1964 முதல் அரை நூற்றாண்டுக்கும் மேலாக அயராமல் இலக்கியப் பிரதிகளை எழுதிவரும் தெணியானுக்கு கடந்த 2003 ஆம் ஆண்டில் நடந்த மணிவிழாக்காலத்தில், பல

இன்று 75 வயதையடைந்து, பவளவிழாவுக்குத் தகுதியாகியிருக்கும் எங்கள் மூத்த இலக்கிய சகோதரன் தெணியான், இதுவரையில் கடந்த ஒரு வருடத்திலும் கூட தமது பிறந்த நாளைக் கொண்டாடவில்லை என்பதும் ஒரு முக்கிய செய்தி.

அதனால் நாம் அவரை நினைத்து அவரது 75 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடுவோம்.

## ரயில்வே அருங்காட்சியகத்துக்கு தொழிற்சங்கங்கள் கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஜன.06

சுமார் 300 மில்லியன் ரூபா செலவில் ரயில்வே அருங்காட்சியகம் ஒன்றை அமைக்கும் தீர்மானத்துக்கு தொழிற்சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இந்த நிதி மூலம் ரயில் பெட்டிகளைத் தயாரிக்கும் நிலையம் ஒன்றை அமைப்பதே சிறந்தது என்று ரயில்வே தொழிற்சங்க கூட்டமைப்பின் இணை ஏற்பாட்டாளர் எஸ்.பி. விதானகே குறிப்பிட்டார்.

இந்தநிலையில் பெரியளவு தொகையைச் செலவிட்டு ரயில்வே அருங்காட்சியகம் அமைப்பது காலத்தின் தேவை அல்ல என்றும் அவர் கூறினார்.

இதேவேளை ரயில் பெட்டிகளைப் புனரமைப்பதற்கும் ரயில் பெட்டிகளைத் தயாரிப்பதற்கும் நாட்டில் தொழிற்சாலை ஒன்று காணப்படவில்லை என்பதால் அது குறித்து கவனம் செலுத்துவது அவசியமாகும் என்றும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (எ)

## திருவாசகம் முற்றோதல்

குடத்தனை, ஜன.06

நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை காலை 7 மணி முதல் திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது.

அடியார்கள் கலந்து கொண்டு நாகேஸ்வரப் பெருமானின் அருளைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கிறார்கள் ஆலய பரிபாலன சபையினர். (இ)

## நலன்புரி நிலைய மக்களுக்கு பாதுகாப்புப் படையினர் உதவி





யாழ்ப்பாணம், ஜன.06

ஊறணி பிள்ளையார் நலன்புரி நிலையத்தில் தங்கிவாழும் இடம்பெயர்ந்த முப்பது குடும்பங்களுக்கும் யாழ்.பாதுகாப்புத் தரப்பினர் ஹொறன கிறவுன் கொன்ஸ் றக்சன் நிறுவனத்தின் அனுசரணையுடன் நாளாந்தம் பாவனைக்கான பொருள்களை வழங்கி உதவினர்.

யாழ்.பாதுகாப்புப் படையினரின் கொமாண்டர், மேஜர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்காவின் வேண்டுகைக்கு இசைவாக.-

பண்டாரகம, உத்தர சேத்திய ராமய பிரதம குரு வண.சுகத்தவன்ச தேரரின் அனுசரணையுடன் மேற்கண்ட நிகழ்வு நடத்தப்பட்டது.

றிக்கிறவுன் கொன்ஸ்ரக்சன் நிறுவனத்தின் அதிபர் சிறானி தம்மிக்கவின் நிதி உதவியுடன் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கான அரிசி மற்றும் மரக்கறிகள் கொள்வனவு செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

## புத்தளம் நகரில் மின் தடைக்குத் தீர்வாக புதிய மின்மாற்றிகள் பொருத்தும் பணிகள்

புத்தளம், ஜன.06

புத்தளம் நகரில் அதிக நேரமாக மின் தடை ஏற்படுவதால் அங்கு பழைய புதிய மின் மாற்றிகள் மற்றும் பாதுகாப்பு மின்வயர்கள் பொருத்தும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மின் தடையால் மக்கள் சிரமத்தை எதிர் நோக்குவதாகவும் இதற்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்குமாறும் அமைச்சர் ரிஷாட் பதியுதீனிடம் புத்தளம் நகரசபை முன்னாள் உறுப்பினரும் அ.இ.ம.கா. மத்திய குழு உறுப்பினருமான எஸ். ஆர். எம். முஹ்ஸி கோரிக்கை விடுத்தார்.

இதனை அடுத்து, புத்தளம் நகரில் அடிக்கடி ஏற்படும் மின் தடைக்கு உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்குமாறு மின் சக்தி அமைச்சர் ரஞ்சித் சியாம்பலாப்பிட்டியவின் கவனத்துக்கு அமைச்சர் ரிஷாட் பதியுதீன் கொண்டு வந்ததுடன், அவசரமாக நடவடிக்கை எடுக்குமாறும் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்தார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மின் சக்தி அமைச்சர், இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் மற்றும் வடமேல் மாகாண மின் சார சபையின் பிரதிப் பொது முகாமையாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்து, உடனடித் தீர்வைப் பெற்றுக் கொடுக்குமாறு பணித்தார்.

இதற்கமைய, குளியாப்பிட்டியிலிருந்து புத்தளம் நகரில் மின்மாற்றிகள், புதிய பாதுகாப்பு மிக்க மின்வயர்கள் பொருத்தும் நடவடிக்கையில், 5 குழுக்களைச் சேர்ந்த 100 இற்கும் அதிகமான மின்சார சபை ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்த நடவடிக்கை காரணமாகப் புத்தளம் நகரில் சுமார் 45 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மின் பாவனையாளர்கள் பயனடையவுள்ளனர். (எ)

காலைக்கதிர் Kalaikkathir




பொன்.வேணு கிருஷ்ணா




## சிரியாவில் எப்படி போர் தொடங்கியது உள்நாட்டில்




தெரிந்த தூண்டல்கள்




Syria 2015

சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸில் இருந்து சுமார் நூறு கி.மீ. தூரத்தில் இருக்கிறது டேரா. விவசாயத் தொழில் செய்யும் மூன்று லட்சம் மக்கள் வாழும் குடியிருப்புகள், ஜோர்டான் எல்லையோரமாக உள்ளன. ஜோர்டான் எல்லை கடந்து வருபவர்கள், டேராவில் இருந்து தான் டமாஸ்கஸ் செல்ல வேண்டும். தலைநகரை இணைக்கும் சாலை டேராவில் இருந்துதான் ஆரம்பிக்கின்றது. இங்கே தான் 15 மார்ச் அன்று, முதல் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாகின. ''பஷார் அரசு ஒழிக'' கோஷம் முதன் முதலாக அங்கே தான் கேட்டது. துனிசியா, எகித்திய புரட்சிகளால் உந்தப்பட்ட சிலரின் வேலையாக இருக்கலாம். மதிலில் அரச எதிர்ப்பு சுலோகம் எழுதிய மாணவர்கள் சிலரை, பொலிஸ் கைது செய்து கொண்டு சென்றது. பொலிஸ் நடவடிக்கை ஆர்ப்பாட்டத்தை அதிகரிக்கச் செய்தது. குறிப்பாக உழவர்களின் பிரச்சினைக்கு அரசு செவி சாய்க்காமல், அடக்குமுறையை கையாண்டது ஆத்திரத்தை கிளப்பி விட்டது.

டேரா உழவர்கள், தமது பிரதேச ஆளுநர் பைசல் கல்தூமுக்கு எதிராக கிளர்ந்தெழுந்தனர். டேரா நகரையும், மாகாணத்தையும் 2006ஆம் ஆண்டிலிருந்து ஆட்சி செய்து வந்த புதிய ஆளுநர் ஊழல்களுக்கு பேர் போனவர். விவசாய நிலங்களை விற்பது, பங்கிடுவது சம்பந்தமான முறைகேடுகள் உழவர்களை அதிருப்திக்கு ஆளாக்கின. டேரா பிரதேசத்தில் நிலவும் தண்ணீர் தட்டுப்பாடும் பிரச்சினைக்கு மூல காரணம். டேராவாசிகளே தண்ணீருக்கு அல்லல்படும் வேளை, அதிகரித்து வரும் குடியேறிகளும் பிரச்சினையை தீவிரப் படுத்துகின்றனர். ஒரு காலத்தில் தானியக் களஞ்சியமாக இருந்து, இன்று வறண்ட பாலைவனமாக மாறி விட்ட, சிரியாவின் வட-கிழக்கு பகுதியை சேர்ந்த மக்களே அதிகளவில் வந்து குடியேறினர். அது போதாதென்று, ஈராக் அகதிகளும் பெருமளவில் தஞ்சமடைந்திருந்தனர்.

வறட்சி, தண்ணீர்ப் பற்றாக்குறை, நலிவடையும் விவசாய உற்பத்தி, உணவுப் பொருள்களின் விலையேற்றம். இவ்வாறு ஒன்றுக்கொன்று தொடர்பான பிரச்சினைகள் சிரியாவில் நீண்ட காலமாகவே உணரப்பட்டு வந்துள்ளன. டேரா பிரதேசத்தில் புதிய விவசாய நிலங்களை உருவாக்கும் திட்டம் கொண்டு வரப்பட்டது. அரசு அந்த நிலங்களை குறைந்த விலைக்கு விவசாயிகளுக்கு விற்க வேண்டும். ஐ.நா.,




என்ற இனவாத கண்ணோட்டமும் சேர்ந்து கொண்டது. டேரா மக்களின் எழுச்சிக்கு இந்தக் காரணங்கள் போதும்.


அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில், இன/மத முரண்பாடுகளே கோஷங்களாக முன் வைக்கப்பட்டன. ''ஈரான் ஒழிக!'', ''ஹிஸ்புல்லா ஒழிக!'' போன்ற கோஷங்கள் ஷியா மதப் பிரிவினருக்கு எதிரானவை. ''உண்மையான முஸ்லிம்கள் அரசாங்கத்தை நடத்த வேண்டும்!'' என்ற கோஷம், சுன்னி முஸ்லிம் பிரதிநிதிகளைக் கொண்ட அரசை நோக்கமாக கொண்டது. மறு பக்கத்தில், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்கள் ''சவூதி அரேபியாவின் கைக்கூலிகள்'' என்று சிரிய அரசு முத்திரை குத்தவும் அதுவே காரணமாக அமைந்து விட்டது. வாஹபிச சவூதி அரேபியா, பிற நாடுகளில் சுன்னி முஸ்லிம் தீவிரவாதத்தைத் தூண்டி விடுவது புதிய செய்தியல்ல. முன்னர் ஒரு தடவை, ''முஸ்லிம் சகோதரத்துவம்'' என்ற ஆயுதமேந்திய இயக்கம் சிரியாவில் அரசைக் கவிழ்க்க முயன்றது. எழுபதுகளில், எண்பதுகளில் முஸ்லிம் சகோதரத்துவ செயற்பாட்டாளர்கள் நாடு முழுவதும் தீவிரமாக இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

வட- சிரிய நகரமான ஹாமா, நீண்டகாலமாக இஸ்லாமியக்கிளர்ச்சியின் தலைமையகமாக திகழ்ந்தது. இன்றைய சிரிய அதிபர் பஷாரின் தந்தை ஆசாத், முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கினார். 1982ஆம் ஆண்டு, ஹாமா நகரம் விமானக் குண்டுவீச்சுகளால் தரைமட்டமாக்கப்பட்டது. மொத்தம் நாற்பதாயிரம் மக்கள், சிரிய பாதுகாப்புப் படையினரால் கொன்று குவிக்கப்பட்டனர். அத்துடன் சிரியாவில் இஸ்லாமிய மத- அடிப்படைவாத அரசியலுக்கு முடிவு கட்டப்பட்டது. டேராவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது, ''ஹாமாவை நினைவுகூருவோம்'' என்ற கோஷமும் முன்வைக்கப்பட்டது. ஆரம்பத்தில் மற்றும் சில மேற்கத்திய நாடுகள் அந்த திட்டத்திற்கு ஆதரவளித்தன. திட்டத்தை நடைமுறைப்படுத்த நியமிக்கப்பட்ட ஆளுநர், தனது உறவினர்களின் பெயரில் ஒரு தனியார் நிறுவனம் அமைத்துக் கொண்டார். அரசு நிதியை கையாண்ட நிறுவனம், விவசாயிகளை நட்டாற்றில் விட்டது. விவசாயிகள் தாமாகவே புதிய கிணறுகளை தோண்டுவதற்கு ஆளுநர் அனுமதி வழங்கவில்லை. இந்த நேரத்தில் தான் துனிசியா புரட்சி இடம்பெற்றது. டேராவில் சுன்னி முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். டமாஸ்கஸ்ஸில் ஆளும் வர்க்கம் அலாவி (ஷியா) முஸ்லிம் பிரிவைச் சேர்ந்தது. இதனால், சுன்னி முஸ்லிம்கள் புறக்கணிக்கப்படுகின்றனர்

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அரசு மாற்றத்தை கோரவில்லை. பாதுகாப்புப் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் மரணச் சடங்கில் கலந்து கொண்ட மக்கள் அதனை அரசியல் ஊர்வலமாக்கினார்கள். பெரும்பாலும் அன்புக்குரியவர்களை இழந்ததால் ஏற்பட்ட துயரமே, அந்த மக்களை அரசியலுக்குத் தள்ளியது.

''சவூதி கைக்கூலிகள்'' ஆயுதங்களுடன் ஊடுருவியிருக்கின்றனர் எனவும், அவர்கள் மறைந்திருந்து பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்கின்றனர் என்று, அரசு தெரிவிக்கின்றது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொது மக்களும், மர்ம நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக தெரிவித்தனர். பொலிஸ் திருப்பிச் சுட்டதனாலும், பொது மக்கள் இறந்துள்ளனர். ஆனால், எப்போதும் அப்படி நடக்கின்றன என்று கூற முடியாது. சில இடங்களில் ஊர்வலங்களில் சென்றோர் மீது பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளது. டெராவில் கலகத்தை அடக்குவதற்கு இராணுவம் அனுப்பப்பட்டது. ஆர்ப்பாட்டம் செய்பவர்களை சுட்டுத் தள்ளியாவது கலகத்தை அடக்கும் பணியில் பாதுகாப்புப் படைகள் ஈடுபட்டுள்ளன. நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் என்று செய்திகள் தெரி விக்கின்றன. இருந்த போதிலும், ''சர்வ தேச சமூகம்'' பொருளாதாரத் தடைகள் விதிப்பது குறித்து மட்டுமே பேசியது. லிபியாவில் நடந்ததைப் போல, நேட்டோப் படைகளின் விமானக் குண்டுவீச்சு நடத்துவது குறித்து ஆரம்பத்தில் பேசவில்லை.

THE TANGLED WEB IN THE FIGHT FOR SYRIA'S FUTURE




சிரியா மீது இராணுவ நடவடிக்கை எடுத்தால், அது அயல்நாடான இஸ்ரேலை பாதிக்கும் என்ற அச்சம் 2011இல் இருந்தது. 2010 வரை கடந்த இரு தசாப்தங்களாக போரில் ஈடுபடாத சிரியா, ஈரானிடம் இருந்து நவீன ஆயுதங்களை வாங்கிக் குவித்துள்ளது. சிரியாவுடன் நெருக்கமான நட்பு பாராட்டும் ஈரான் சிரியாவுக்கு உதவிக்கு வரலாம் எனவும் 2011இல் எதிர்பார்க்கப்பட்டது. அதே நேரம், லெபனானின் கெரில்லா அமைப்பான ஹிஸ்புல்லாவும், பாலஸ்தீன ஹமாஸும் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தலாம் எனவும் 2011இல் எதிர்பார்க்கப்பட்டது. இந்த இயக்கங்களுக்கு சிரியா ஆதரவு வழங்கி வருவது இரகசியமல்ல. மேலும், ஷியா முஸ்லிம்களின் நாடான ஈரான், சிரியாவில் ஆட்சி மாற்றத்தை எதிர்க்கவே செய்யும். ஹிஸ்புல்லாவும் ஷியா முஸ்லிம்களின் பிரதிநிதிகள் என்பது குறிப்பிடத்தக்கது.


(கேள்வி தொடரும்...)

Syria is the prototype place where it's a proxy war for some regional powers. The camps, so to speak, are the regime in Damascus, which is Alawi core Islam. Alawi are an offshoot of Shia Islam, supported mainly by Iran, which is the major regional Shiite power, as well as by Hezbollah - Hezbollah is working for - essentially serving Iranian interests there - and also supported by militias from Iraq.


So you have the Shia coalition fighting to save the regime in Damascus. And in that sense, Iran and Hezbollah are more important for the survival of Bashar al&Assad's regime than Moscow.

On the other hand, you have the majority Syrians, who - happen to be Sunnis - in state of revolt against the regime. They are supported by the Sunni powers in the region, from Turkey, to Jordan, Saudi Arabia, Qatar, and others.

- HISHAM MELHEM, Al Arabiya News Washington bureau chief, in an interview on PBS Newshour (30 August 2014)







# தமிழ்த் தேசிய எழுச்சி

ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.



18

## வன்முறைப் புயல் வீசிய 'கறுப்பு ஜூலை'

கொழும்பில் இனவெறிக் கலவரத்தை நேரில் கண்காணித்த, பிரித்தானிய 'பைனான்சியல்டைம்ஸ்' பத்திரிகையாளர் நிலைமையைப் பின்வருமாறு வர்ணித்தார்.

*"வன்செயல், கொடியதாகவும் இரத்தக் களரியாகவும் தோற்றமளித்தன. ஏனைய ஆசிய நாடுகளின் கலவரங்களில் இருந்து இந்தக் கலவரத்தில் காணப்பட்ட தெளிவான வேறுபாடு என்னவென்றால், குறித்த வர்த்தகத் தலங்களை, கலகக் கும்பல்கள் அச்செட்டாகக் கண்டுபிடித்தமையே. கொழும்பிலே வீதிக்கு வீதி சென்ற கலகக் கும்பல்கள், தமிழருக்குச் சொந்தமான தொழிற்சாலைகளையும் வீடுகளையும் மட்டுமே தாக்கியமையாகும். அவர்கள் கவனமாகத் தேடித் தேடித் திரிந்தது ஏனென்றும் இப்போது புரிகிறது. ஒவ்வொரு வீதியிலும் குறித்த வர்த்தக வளாகம் தீ மூட்டப்பட்டிருக்கும். அடுத்து அமைந்திருக்கும் வளாகம் எந்தப் பாதிப்பும் இன்றி அப்படியே பத்திரமாக இருக்கும். அரச படைகளும் காவல்துறையினரும் ஒன்றில் கலகக்காரருடன் சேர்ந்து கொண்டார்கள். அல்லது பராக்குப் பார்த்த வண்ணம் வாளா நின்றார்கள்." (பைனான்சியல் டைம்ஸ், 1983 ஆகஸ்ட் 12).*

கொழும்புத் தலைநகரில் தமிழர்களது பொருளாதார அடித்தளத்தை நாசம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட செயற்பாடாகவே இந்த இனக் கலவரம் அமைந்தது எனலாம். இக் கலவரம் தமிழின அழிப்பையும் இலக்காகக் கொண்டிருந்தது. ஏனென்றால், தமிழர் என்ற தேசிய இன அடையாளத்தைக் குறிவைத்தே தமிழர்களின் உயிர், உடைமைகள் அவர்களது பொருளாதார வாழ்வு ஆகியன அழிக்கப்பட்டன.

நாடு அடங்கிலும் தலைவிரித்தாடிய இனக் கலவர வன்செயல்கள் ஆறு நாள்கள் வரை தொடர்ச்சியாக நீடித்தன. ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட போதும் அதனைச் செயற்படுத்த சிங்கள ஆயுதப் படைகள் மறுப்புத் தெரிவித்தன.

தமிழர் வரலாற்றின் இந்த இருள் படிந்த காலத்தில், மிகவும் அருவருக்கத்தக்க சம்பவம் ஒன்று ஜூலை 25 அன்று வெலிக்கடைச் சிறையில் இடம்பெற்றது. சிங்களக் கைதிகள் சிறை அதிகாரிகளுடனும், சிறைக் காவலருடனும் கூட்டுச் சேர்ந்து, சிறைக் கூண்டுகளைத் தாக்கி உடைத்து 35 தமிழ்க் கைதிகளைக் கண்டதுண்டமாகவெட்டிக் கொன்றனர். சிங்களச் சிறைக் குற்றவாளிகளால் குத்திக் கிழிக்கப்பட்டு, அடித்து நொருக்கப்பட்டு மிருகத்தனமாகக் கொலை செய்யபட்ட தமிழ் அரசியல் கைதிகளில் நால்வர் முக்கியமானவர்கள். தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன் ஆகியோர் ஒப்பற்ற விடுதலைப் போராளிகள். மாவீரர்கள். தமிழீழ விடுதலை அமைப்பின் (ரெலோ) மூல பிதாக்கள். இன்னொருவர் கலாநிதி ராஜசுந்தரம். காந்தியம் அமைப்பை உருவாக்கியவர் இவர்.

இனக் கலவரம் ஒருவாறு ஓய்ந்து அடங்கியது. பாரிய குண்டுவீச்சினால் சிதைந்து போய், தீயினால் எரிந்து கருகிய நகரமாகக் கொழும்பு கோரக் காட்சியளித்தது. எலும்புக்கூடுபோல கருகிய கட்டடங்களின் மீதங்களில் இருந்து புகை மண்டலம் எழுந்து கொண்டிருந்தது. கலவர காலத்தில் வாய் மூடி மௌனிகளாக இருந்த சிங்கள அரசியல்வாதிகள் வாய் திறக்கத் தொடங்கிய போது, பாதிக்கப்பட்ட அப்பாவித் தமிழர்களுக்காக அனுதாபமான ஒரு வார்த்தை கூடத் தெரிவிக்கவில்லை. நேர்மாறாக, அரச அதிபர் ஜெயவர்த்தனா சிங்கள தேசத்துக்கு விடுத்த செய்தியில், திருநெல்வேலியில் வீழ்த்தப்பட்ட சிங்கள வீரர்களுக்காகக் கொடுக்கப்பட்ட நியாயபூர்வமான நஷ்டஈடாக தமிழருக்கு எதிரான கலவரக் கொடுமையை நியாயப்படுத்த முனைந்தார். தமிழ்த் தேசிய ஆன்மாவில் ஆழமான வடுவை ஏற்படுத்திய மாபெரும் துன்பியல் நிகழ்வாக இனக் கலவரம் முடிவுற்றது. என்றுமே சீர்செய்ய முடியாத அளவுக்கு இரு இனங்கள் மத்தியிலான உறவை, இக் கலவரம் நிரந்தரமாகப் பாதித்தது.

சிங்கள இனவாத அரசு அனைத்துலக சமூகத்தின் கண்டனத்துக்கு இலக்காகியது. காருண்ய மகான் புத்தரின் புண்ணிய பூமியில் மனிதத்துவமற்ற மிருகத்தனமான கொடுமைகள் எவ்வாறு சாத்தியமாயிற்று என உலகத்தின் மனச்சாட்சி திகைத்து நின்றது. இந்திய அரசு கடும் சினம் கொண்டது. இந்திராகாந்தி அம்மையார் தனது ஆழ்ந்த அங்கலாப்பைத் தெரிவித்துடன், புதுடில்லி அரசின் ஆழ்ந்த அதிருப்தியை நேரில் எடுத்துக் கூறும் பொருட்டு வெளிவிவகார அமைச்சர் நரசிம்மராவ் அவர்களையும் கொழும்புக்கு அனுப்பி வைத்தார். தமிழ்நாடு உணர்ச்சி வசப்பட்டு கொதித்து வெடித்தது. சென்னையிலும் தமிழ் நாட்டின் ஏனைய நகரங்களிலும் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் குதித்தனர். இலங்கையிலுள்ள தங்களது தமிழ்ச் சகோதரர்களைக் காப்பாற்ற மத்திய அரசு இந்தியப் படைகளை அங்கு அனுப்ப வேண்டும் என தமிழ் நாட்டுத் தலைவர்கள் கோரிக்கை விடுத்தார்கள்.

1983 ஜூலை மாத இனக் கலவரப் பேரழிவானது, மடைவாயை உடைத்தோடிய பெரு வெள்ளம்போல, தமிழ்த் தேசிய உணர்வை எங்கும் பிரவாகம் எடுக்கச் செய்தது. நாடுகள், கண்டங்களின் எல்லைகள் கடந்து இன உணர்வு ஈழத் தமிழர்கள் அனைவரையும் பற்றிக் கொண்டது. தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட தாங்கொணாக் கொடுமைகளை அறிந்து இரத்தம் கொதித்த தமிழ் இளம் சமூகம், ஆயுதம் தரித்த விடுதலைப் போரில் இணைந்து கொள்ள பல்லாயிரக்கணக்கில் அணிதிரண்டனர். விடுதலைப் புலிகளின் படையணியில் நூற்றுக்கணக்கில் இளைஞர்கள் இணைந்தனர். புலிகளின் தலைமையின் கீழ் ஆயுதப் போராட்டத்தில் பங்கு பற்ற பல்லாயிரம் பேர் துடித்தார்கள். பிரபாகரன் இந்த நிலைமையை மிகச் சாதுரியமாகக் கையாண்டார். தமது அமைப்பின் நிதி வளத்தின் வரம்புக்கு அப்பால் தனது கெரில்லாப் படையின் எண்ணிக்கையைப் பெருப்பிக்கக்கூடாது என்பதில் கவனமாக இருந்தார். அதே வேளை, தமிழ் நாட்டில் தலைமறைவாக செயலிழந்து ஒதுங்கியிருந்த போராளி அமைப்புகள், தங்கள் அணிக்கு ஆள்சேர்ப்பதற்கு இதை ஒரு பொன்னான வாய்ப்பாகக் கண்டன.



குட்டிமணி, தங்கத்துரை,ஜெகன் கைது 05-04-1981



> "சிங்களக் கைதிகள் சிறை அதிகாரிகளுடனும், சிறைக் காவலருடனும் கூட்டுச் சேர்ந்து, சிறைக் கூண்டுகளைத் தாக்கி உடைத்து 35 தமிழ்க் கைதிகளைக் கண்டதுண்டமாக வெட்டிக் கொன்றனர். சிங்களச் சிறைக் குற்றவாளிகளால் குத்திக் கிழிக்கப்பட்டு, அடித்து நொருக்கப்பட்டு மிருகத்தனமாகக் கொலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளில் நால்வர் முக்கியமானவர்கள். தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன், ஆகியோர் ஒப்பற்ற விடுதலைப் போராளிகள். மாவீரர்கள்."

செயற்படாது இருந்த இந்த அமைப்புகள் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்ந்த ஈழத் தமிழ் மக்களிடம் இருந்து பெற்ற நிதி உதவியுடனும் புதிதாகச் சேர்ந்த உறுப்பினரோடும், திடீரென புனர்வாழ்வு பெற்று செயற்பட ஆரம்பித்தன.

கறுப்பு ஜூலை இனக் கலவரத்தை கட்டவிழ்த்து விட்டதன் மூலம் சிங்கள இனவாத சக்திகள், தமிழ்த் தேசிய மறுமலர்ச்சியைத் தோற்றுவித்ததுடன், தனியரசு போராட்டத்துக்கான அக – புற சூழ்நிலையையும் உருவாக்கிக் கொடுத்தன. இந்த இனக்கலவரம் தமிழீழ மக்களது அரசியல் வரலாற்றுப் பாதையை மாற்றியமைத்தது மட்டுமன்றி, இந்திய தலையீட்டுக்கு வழிசமைக்கும் புறநிலையையும் ஏற்படுத்தியது.

(தொடரும்...)

# சனி மாற்றம் உங்களுக்கு எப்படி?



ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

**திருக்கணித பஞ்சாங்கப்படி எதிர்வரும் 26.01.2017 அன்று வியாழக்கிழமை இரவு 07.55 மணிக்கு சனி பகவான், விருச்சிக இராசியில் இருந்து தனுசு இராசிக்கு பெயர்ச்சியாகிறார். இனி ஒவ்வொரு இராசி அன்பர்களுக்கும் சனிப்பெயர்ச்சி எப்படி இருக்கும்? என்பதையும் அத்துடன் ஒவ்வொரு இராசி அன்பர்களுக்கும் என்னென்ன பரிகாரம் செய்ய வேண்டும் என்பதையும் பற்றி விரிவாகப் பார்க்கலாம்**

### மேஷ இராசி :

அச்சுவினி, பரணி, கிருத்திகை 1 ஆம் பாதம்

இனி உங்களுக்கு யோகம்தான் அஷ்டமச் சனியிலிருந்து விடுதலையாகி விட்டீர்கள். இப்பொழுது சனி பகவான் உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் அமர்ந்து நன்றாக வாரி வழங்கப் போகின்றார். இதுநாள்வரை பட்ட கஷ்டங்கள் பறந்து ஓடிவிடும். 10-11 இற்குரிய சனி பகவான் 9 இல் இருப்பதால் உத்தியோகம், தொழில் சிறப்பாக அமையும். பொருளாதாரம் வளர்ச்சி பெறும். பெற்றோர் உதவி கிடைக்கும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு மேலதிகாரியின் பாராட்டும், உதவியும் கிடைக்கும். வழக்கில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். இத்தனை நாள் இருந்த அலைச்சல் தீரும். இனி வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் வரும் என்ற நம்பிக்கை உயர்ந்து நிற்கும். 11 ஆம் இடத்தை சனி பார்வை செய்வதால், வெளி நாட்டில் வேலை வாய்ப்புக் கிடைக்கும். 6 ஆம் இடத்தைப் பார்வை செய்வதால், முன்னேற்றம் நன்றாக இருக்கும். ஓரளவு கடன்தொல்லை அகலும். ஆகவே கடன் விடயத்தில் கவனம் தேவை. வாகனம் ஓட்டுவதிலும் கவனம் தேவை. பொதுவாக பாக்கிய சனி பதவி, அந்தஸ்து வாரி வழங்கும்.

பரிகாரம்!

உடல் ஊனமுற்றவர்களுக்கு உங்களால் முடிந்த உதவிகளைச் செய்யுங்கள். சனிக்கிழமையில் ஆஞ்சநேயருக்குச் செந்தூரம் வழங்கி வணங்குங்கள். செந்தூரத்தைத் தினமும் நெற்றியில் இட்டு வாருங்கள். சனிபகவானையும் சனிக்கிழமையில் வணங்குங்கள்.

### ரிஷப இராசி:

கிருத்திகை 2, 3,4 ஆம் பாதங்கள்,
ரோகிணி மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்

உங்களுக்கு இது அஷ்டம சனி. ஐயோ சனி 8 ஆம் இடத்துக்கு வந்து விட்டதே? என்று பயப்பட வேண்டாம். ரிஷப இராசிக்குச் சனி யோகக்காரன். அஷ்டமச் சனியாக வந்தாலும் நிச்சயம் கெடுக்க மாட்டான். ரிஷப இராசிக்கு சனி தர்ம -கர்மாதிபதி. அவன் 2 ஆம் இடத்தைப் பார்வை செய்வதால் குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள், குழப்பங்கள் தீரும். திருமணம் தடைப்பட்டு இருந்தால் இனி வீட்டில் மேளச் சத்தம்தான். பூர்வ புண்ணிய ஸ்தானத்தைப் பார்ப்பதால், தெய்வதரிசனம் அதிகரிக்கும். தெய்வஸ்தலங்களுக்குச் செல்லும் பாக்கியம் அமையும். இழுத்துக்கொண்டு இருந்த வழக்கு உங்களுக்கு வெற்றியைக் கொடுக்கும். சொத்து-சுகங்கள் தேடி வரும். பல நாள்களாகப் பீடித்து வந்த நோய், நொடிகள் நீங்கி நலம் பெறுவீர்கள். புதிய திட்டங்கள் வெற்றி தரும். தொழில் ஸ்தலத்தை 8ஆம் இடத்து சனி நோக்குவதால், புதிய தொழில் துவங்குவீர்கள். தொழிலில் நண்பர்களையும் சேர்த்துக் கொள்வதாக இருந்தால் உஷாராக இருங்கள். காரணம், 7ஆம் இடத்துக்கு இரண்டாம் வீட்டில் சனி பகவான் உள்ளார்.

பரிகாரம்!

சனிக்கிழமையில் சனிபகவான் சந்நதியில் எள் தீபம் ஏற்றுங்கள். சனிக்கிழமையில் நீல நிற பூ, அல்லது கறுப்பு நிறத்தில் ஆடை அணியுங்கள். காகத்துக்கு எள் கலந்த சாதம் வையுங்கள். சனிபகவானை சனிக்கிழமையில் வணங்கி வாருங்கள்.

## தினசரி ராசி பலன் 06.01.2017

| | | |
|---|---|---|
| சுபநேரம் | : காலை | : 9.30 – 10.30 |
| | மாலை | : 4.30 – 5.30 |
| ராகு காலம் | : 10.30 – 12.00 | |
| குளிகன் | : 7.30 – 9.00 | |
| எமகண்டம் | : 3.00 – 4.30 | |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

சம நோக்கு நாள்

**மேஷம்:** ஆர்வம் - செய்யும் செயல்களில் கூடுதல் ஈடுபாட்டுடன் வாழ்வில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**ரிஷபம்:** உதவி - உங்களுக்கு மற்றவர்களால் உதவியும் உங்களால் மற்றவர்களுக்கு உதவும் எண்ணங்களும் உதயமாகும்.

**மிதுனம்:** அலைச்சல் - வீண் அலைச்சல்களும் மன உளைச்சல்களும் உண்டாகும்.

**கடகம்** : குழப்பம் - மனதின் எண்ணங்கள் தடுமாறும் ஆதலால் செயல்களில் சிறப்புகள் குறையும் நாள்.

**சிம்மம்** :ஜெயம் - நல்முயற்சிகள் சிறக்கும், எடுக்கும் காரியத்தில் கீர்த்தி தரும் சிறப்பான நன்னாள்.

**கன்னி:** பரிசு - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் நிதானத்துடன் செயற்பட்டால் எதிர்பாராத வகையில் பரிசுகள் கிடைக்கும்.
சந்திராஷ்டமம் : உத்திரம் 2,3,4ஆம் பாதங்கள், அஸ்தம்

**துலாம்:** புகழ் - செய்யும் காரியங்களில் மேன்மை தந்து புகழ் நல்கும்.

**விருச்சிகம்:** நன்மை - மனக்குழப்பங்கள் குறைந்து நிம்மதி எனும் அமைதி காணும் நாள்.

**தனுசு:** பரிவு - உங்களின் இதயத்தில் கருணை மிகுந்து அனைவரிடத்திலும் அன்பு காட்டும் நாள்.

**மகரம்:** வெற்றி - செய்யும் காரியங்களில் மேன்மை தந்து வெற்றி நல்கும்.

**கும்பம்:** சினம் - வீண் கோபத்தால் அனைவரிடத்திலும் உள்ள மதிப்புக் குறையும்.

**மீனம்:** பாசம் - இனிமையானவர்கள் அன்பானவர்களின் ஆதரவு கிடைக்கும் நன்னாள்.

## நிலக்கரி கொள்வனவு 'டெண்டர்' நடைமுறைகள் முன்னெடுப்பு

கொழும்பு, ஜன.06


நிலக்கரி கொள்வனவு செய்யும் கேள்விப்பத்திர (டெண்டர்) நடைமுறைகளைத் தற்போது ஒழுங்குபடுத்தியுள்ளதாக, மின் சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி நிலக்கரி விற்பனை செய்வது தொடர்பில் தகுதியுடைய வழங்குநர்களைப் பதிவு செய்யத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக, அமைச்சின் செயலாளர் பி.எம்.எஸ்.படகொட குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தற்போது 17 பேரே இவ்வாறு பதிவு செய்துள்ளனர் என்று சுட்டிக்காட்டிய அவர், அவர்களிடம் இருந்து மட்டுமே விலை யோசனையைக் கோரவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த ஐந்து ஆண்டுகளாகக் கேள்விப்பத்திர முறை இன்றியே நிலக்கரிக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

எனினும், 2015, 2016 ஆம் ஆண்டு கேள்விப்பத்திரம் விடப்படும் நடவடிக்கைகளை மீள ஆரம்பித்துள்ளதாகவும் படகொட மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)



வட்டுக்கோட்டை துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய முன்னாள் ஆலயகுரு சிவசங்கர் சர்மாவின் பாரியாரின் கண் சத்திரசிகிச்சைக்காக ஆலய தொண்டர்களால் ஒரு தொகைப் பணம் வழங்கப்பட்டபோது... (இ)

## ரஷ்யப் பிரஜை நீரில் மூழ்கிச் சாவு

கொழும்பு, ஜன.06

கொஸ்கொட கடற்பகுதியில் நீராடச் சென்ற ரஷ்யப் பிரஜை (வயது 29) ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இவர் பெண் ஒருவருடன் நீராடச் சென்றவேளை, நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, அவரை மீட்ட பிரதேச மக்கள் பலபிட்டிய வைத்தியசாலையில் சேர்த்திருந்தனர்.

எனினும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் கூறினர்.

அவரது சடலம் பிரேத பரிசோதனைகளுக்காகப் பலபிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (எ)

## ஆங்கிலப் பயிற்சி நெறிக்குப் பதிவு

யாழ்ப்பாணம், ஜன.06

வடமாகாண கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் 'ஸ்டெப்ஸ் இன்சிரியூட்டினால் நடத்தப்படும் பாடசாலை விடுமுறை மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக புதுமுக மாணவர்களுக்கான ஆங்கிலப் பயிற்சி நெறியின் அடுத்த பிரிவு எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பயிற்சியாளர்கள் உள்வாங்கப்படும் இப் பயிற்சியை பின்பற்ற விரும்புபவர்கள் தமது விவரங்களை யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வளாகத்தில் அமைந்துள்ள ஸ்டெப்ஸ் இன்சிரியூட்டில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை பதிவுசெய்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் பகிரங்கக் குற்றச்சாட்டு:

# சம்பந்தனின் படத்தை எரிக்கத் தூண்டியவர்கள் தமிழ்க் கூட்டமைப்பில்தான் இருக்கின்றார்கள்!

வவுனியாவில் எதிர்க் கட்சித் தலைவர் சம்பந் தனின் படத்தை எரிப்ப தற்குத் தூண்டியவர்கள் தான் வவுனியாவில் சிலர் காணாமற் போவதற்குக் காரணமாக இருந்தார் கள் என தமிழரசுக்கட்சி யின் பொதுச்செயலாள ரும் கிழக்கு மாகாண விவசாய அமைச்சருமான கி. துரைராசசிங்கம் குற் றம் சாட்டியுள்ளார்.

மட்டக்களப்பு வந்தாறு மூலை கமநல சேவை நிலையத்தில் கடந்த செவ் வாய்க்கிழமை பிற்பகல் 35 விவசாயிகளுக்கு உள்ளீடு வழங்கும் நிகழ் வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரி வித்தார்.

இந்த மக்களைத் தூண்டி விட்டவர்கள் யார் என்று எங்களுக்குத் தெரியும். அவர்களும் தமிழ் தேசியக் கூட்ட மைப்பில் தான் இருக் கின்றார்கள். எங்களு டைய வீட்டை வைத்துக் கொண்டுதான் வாக்குக் கேட்டு வவுனியாவில் நாடாளுமன்ற உறுப்பி னர்களாகவும் இருக்கின் றார்கள். ஆனாலும், கூட

## பலரைக் காணாமற் போகச் செய்தவர்களும் அவர்கள் தானாம்!!

இருந்து குழிபறிக்கின் றார்கள். இது அவர்களுக்கு பழக்க தோசம், கூட இருந் தவர்களையே படுகொலை செய்தவர்கள் அவர்கள்.

அவர்கள் சொல்லிய தன் காரணமாகத்தான் அந்த ஆர்ப்பாட்டம் வவுனியாவில் நடை பெற்றுள்ளது. அந்தக் சம்பவம் தொடர்பான காணொலியில் ஒரு பெண் எதிர்க்கட்சித் தலைவரைப் பற்றி அவ தூறாகப் பேசுகின்றார்.

ஒரு தமிழன், ஒரு தமிழிச்சி அவ்வாறான வார்த்தைகளைப் பிர யோகிக்கக் கூடாது. எவ் வளவு கஷ்டங்களையும் தாங்கிக் கொண்டு எங் களுக்காக வேலை செய்து கொண்டிருக்கும் அந்த தலைவரை அந்தப் பெண் அப்படிச் சொல்லுகின் றார்.

காணாமல் ஆக்கப் பட்டவர்கள் தொடர்பான விடயத்தை ஐக்கிய நாடு களுக்குச் சென்று அர சுக்கு அழுத்தத்தைக் கொடுத்து இப்பொழுது காணாமலாக்கப்பட்ட வர்களுக்குரிய நிலையம் ஒன்று கொழும்பில் அமைக்கப்பட்டுள்ளது. அதனை உருவாக்கிக் கொடுப்பதற்கு முக்கிய மாகப் பங்களித்தவர் எதிர்க் கட்சித் தலைவர் சம்பந்தன் ஆவார்.

அவ்வாறு இருக்கும் போது ஒரு விதமான அடிப்படையும் இல்லாது தூண்டப்பட்டு, ஆர்ப் பாட்டம் செய்து காணா மலாக்கப்பட்டதற்குப் பதில் சொல்ல வேண்டும் எனக் கூறியிருக்கின்றார் கள்.

இவ்வாறான பிரச்சி னைகள் எமது பிரதே சங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதில் அனைவரும் அவ தானமாக இருக்க வேண் டும்.- இப்படி அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

### ஆலயக் கூட்டம்

அளவெட்டி, ஜன.06

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய உபயகா ரர் பொதுச் சபைக்கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்ட பத்தில் நடைபெற வுள்ளது.

இக் கூட்டத்தில் புதிய பரிபாலனசபை தெரிவு செய்யப்படவுள்ளதால் உபயகாரர்களைக் கலந்து கொள்ளுமாறு அறிவிக் கப்பட்டுள்ளது. (இ)

### வசதி குறைந்த 26 குடும்பங்களைச் சேர்ந்த

## 58 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

கடந்த 2 ஆம் திகதி பாட சாலை தொடங்கியும் கற்றல் உபகரணங்கள் இல்லாமையி னால் பாடசாலை செல்லாதிருந்த மாணவர்கள் என அடையாளம் காணப்பட்ட 26 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 58 வறிய மாண வர்களுக்கு மாகாண அமைச்சர் ப.சத்தியலிங்கத்தின் நிதியினூ டாக கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா இணைப்பு அலுவ லகத்தில் வைத்து கற்றல் உப கரணங்கள் வழங்கப்பட் டன.

''கிராமங்களின் கல்வித் தரத்தை வலுப்படுத்துவோம்'' எனும் விசேட செயற்றிட்டத் தின் மற்றுமோர் கட்டமாக இக்கற்றல் உபகரணங்கள் வழங் கப்பட்டன என்று அமைச்சரின் இணைப்பாளர் பா.சிந்துஜன் கூறினார்.

இந்த விசேட செயற்றிட்டம் அமைச்சரினால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (இ)



### பழைய மாணவர் சங்கக் கூட்டம்

கோண்டாவில், ஜன.06

கோண்டாவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்ப கல் 3 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

கூட்டத்தில் நிர்வாக சபைத் தெரிவு இடம்பெற வுள்ளதால் பழைய மாண வர்களைக் கலந்து கொள் ளுமாறு அதிபர் அறிவித் துள்ளார். (இ)

# நெடுந்தீவு வைத்தியசாலை குறைபாடுகளை நேரில் அவதானித்தார் சிறிதரன் எம்.பி.

நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலையின் அடிப்படைத் தேவை களை நிறைவு செய்து தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனிடம் இப்பகுதி மக்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள ஆயிரத்து 390 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 559 பேர் வரையில் தற்போது வாழ்ந்து வருகின்றனர்.

அவர்களை விட பல்வேறு தொழில்களின் நிமித்தம் தங்கியிருப் போர் சுற்றுலாப் பயணி களாக வருவோர் என சுமார் இரண்டாயிரத் துக்கும் மேற்பட்டோர் உள்ளடங்கிய வகையில் மருத்துவ தேவையை நிறைவு செய்யவேண்டிய ஒரேஒரு வைத்தியசா லையாக நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலை அமைந்துள்ளது.

இந்நிலையில், அந்த வைத்தியசாலை ஆரம் பத்தில் மாவட்ட வைத் தியசாலையாக இருந்த நிலையில் தற்போது தரம் குறைக்கப்பட்டு 'சி' தர வைத்தியசாலை யாக காணப்படுகின்றது.


இருந்தபோதும் 'சி' தர வைத்தியசாலையின் வசதிகளை விட நெடுந் தீவு யாழ்ப்பாணத்திலி ருந்து மிகத் தொலைவில் உள்ள கடல் மார்க்கப் போக்கு வரத்துக்களைக் கொண்ட தனித்தீவாக வுள்ளதால் இதற்கு விசேட தேவைகள் ஏற் படுத்தப்பட வேண்டும்

அத்துடன் மகப் பேற்று விடுதி, அவசர சிகிச்சைப் பிரிவு உள் ளிட்ட வசதியின்மை உபகரணத்தொகுதிக ளுக்கான வசதியின்மை குருதிப்பரிசோதனை செய்வதற்கான வசதி யின்மை, விசர்நாய்கடி தடுப்பூசிக்கான மருந்து வசதியின்மை, தொற்று நோய்களுக்கான மருந்து வசதிகள் இன்மை என பல்வேறு அடிப்படை வசதிகள் அங்கு இல்லை.

## நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி





இதேவேளை இரண்டு வைத்தியர்கள் சேவையை வழங்க வேண்டிய நிலை யில் ஒரு வைத்தியர் மாத்திரமே தற்போது உள்ளார் என்றும் இரண்டு தாதிய உத்தியோகத்தர் கள் தேவையான நிலை யில் தற்போது ஒப்பந்த அடிப் படையில் ஒரு தாதிய உத்தியோகத்தர் மட்டும் சேவையில் இருக்கிறார் என்றும் சுட் டிக் காட்டப்படுகிறது.

குருதிப்பரிசோதனை செய்தல் விசர் நாய்க்கடிக் கான தடுப்பூசியின்மை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இன்மையால் இங்கு சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கே செல்ல வேண்டியுள் ளது.

அவசர நோயாளி களை நோயாளர் காவு வண்டி மூலம் கொண்டு செல்வதற்கு சுமார் நாற் பது லீற்றர் வரையான டீசல் தேவையுள்ளதுடன் படகுச்சேவை உட்பட மூன்று நோயாளர் காவு வண்டிகளில் மாற்றிச் செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இவ்வாறு பல்வேறு அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் இந்த வைத்தியசாலை காணப் படுகின்றது என்றும் இதற்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும், இப்பகுதி மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, நெடுந் தீவு வைத்தியசாலைக்கு கடந்த திங்கட்கிழமை வருகை தந்த சிறிதரன் எம்.பி. அங்குள்ள நிலை மைகளை நேரில் பார் வையிட்டதுடன் தற் போது கடமையாற்று கின்ற வைத்திய அதிகாரி பாலமுருகனுடன் கலந் துரையாடி அனைத்துப் பிரச்சினைகளையும் கேட்டறிந்து கொண் டார். இங்குள்ள குறை பாடுகளை நிவர்த்திக்க நடவடிக்கை எடுப்பதா கவும் அவர் உறுதியளி தார்.

# முதலமைச்சர் பன்னீர் - ஸ்டாலின் திடீர் சந்திப்பு; தமிழகத்தில் புதிய அரசியல் கலாசாரம் ஆரம்பம்!

## கடந்த 10 ஆண்டுகளின் பின் நடந்த அதிசயம்



சென்னை, ஜன.06

தமிழகத்தில் கடந்த 10 ஆண்டுகளாக இடம்பெறாத ஒரு அதிசய சந்திப்பு நேற்று முன்தினம் மாலை சென்னையில் இடம்பெற்றுள்ளது.

தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தை, தி.மு.க. எதிர்க்கட்சித் தலைவர் மு.க. ஸ்டாலின் நேற்று முன்தினம் மாலை தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, தமிழகத்தில் நிலவும் வறட்சி உள்ளிட்ட பல பிரச்சினைகள் குறித்து சுமார் 25 நிமிடங்கள் இரு தலைவர்களும் பேசியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இந்தச் சந்திப்பின் மூலம் தமிழக அரசியல் கலாசாரத்தில் மீண்டும் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. கடந்த பல ஆண்டுகளாகத் தமிழக அரசியலில், முதல்வரும் எதிர்க்கட்சித் தலைவரும் சந்தித்து மாநிலப் பிரச்சினைகள் குறித்துப் பேசியதே இல்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சந்திப்பின்போது விவசாயிகள் பிரச்சினை தொடர்பாக விவாதிக்க, சட்டப் பேரவையின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள் ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தை நேற்று முன்தினம் மாலை 5.30 மணி முதல் சுமார் 15 நிமிடங்கள் வரை இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்புக் குறித்து மு.க. ஸ்டாலின் தெரிவித்தவை வருமாறு:-

தமிழகத்தில் 90 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டும், அதிர்ச்சியில் மரணமும் அடைந்துள்ளனர்.

தினமும் 5 முதல் 6 விவசாயிகளாவது தற்கொலை செய்து கொள்வது தொடர்கதையாகி உள்ளது. இதற்குக் காவிரி நீர் முறையாகக் கிடைக்கவில்லை என்பதே காரணமாகும். மழை நீரும் பொய்த்து விட்டது. அதன் அடிப்படையில் வறட்சி மாநிலமாக அறிவிக்கக் கோரி, சிறப்புத் தீர்மானத்தை நிறைவேற்றச் சட்டப் பேரவையின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்.

இதை தி.மு.க., பல்வேறு கட்சிகளும், விவசாய சங்க அமைப்புகளும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

தற்கொலை செய்து கொண்ட விவசாயக் குடும்பங்களுக்கு, உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் நிதி உதவி அளிக்க வேண்டும்.

மேலும், பொங்கல் திருவிழா நாளில், வீர விளையாட்டான ஜல்லிக்கட்டை நடத்த மத்திய அரசுக்கு தமிழக அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

வேலூர் மாவட்டம் டெல் வெடிமருந்து தொழிற்சாலையில் 250 பேர் வேலை பார்க்கின்றனர். அவர்களுக்கு 5 மாதம் ஊதியம் வழங்கப்படவில்லை. இதனால், அந்தக் குடும்பங்கள் பரிதவித்து வருகின்றன. இது தொடர்பாக, முதல்வரிடமும், தலைமைச் செயலரிடமும் எதிர்க்கட்சித் துணை தலைவர் துரைமுருகன் செல்லிடப்பேசியில் பேசியுள்ளார். இந்தக் கோரிக்கைகளை முதல்வரிடம் வலியுறுத்தியுள்ளோம் என்றும் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, ஜல்லிக்கட்டு தொடர்பாக, தி.மு.க. உண்மைக்குப் புறம்பான செய்தி வெளியிடுகிறது என்று சசிகலா வெளியிட்ட அறிக்கையை சுட்டிக்காட்டி, மு.க. ஸ்டாலினிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளிக்கையில் மு.க. ஸ்டாலின் தெரிவித்தவை வருமாறு:-

தி.மு.க. ஆட்சியில், ஜல்லிக்கட்டு போட்டி நடத்துவதற்கு தடை வந்தபோது, உச்சநீதிமன்றம் வகுத்துத் தந்த விதிமுறைகளைப் பின்பற்றி, முதல்வராக இருந்த கருணாநிதி, அவசரச் சட்டம் கொண்டு வந்தார்.

அதன் பின்னர், ஜல்லிக்கட்டு போட்டியை நடத்தினார். இது நூற்றுக்கு நூறு உண்மை. இதை எங்கு வேண்டுமானாலும் நிரூபிக்க உள்ளேன். அதைத் தொடர்ந்து, அ.தி.மு.க. ஆட்சியில், அந்த விதிமுறைகளைப் பின்பற்றவில்லை.

அதனால் தான் இந்தத் தடையெல்லாம் வந்தது. இது தொடர்பான கோரிக்கைகளை முதல்வரிடம் முன்வைத்துள்ளோம் என்றும் தெரிவித்துள்ளார்.

# ஜெயலலிதா மரணம் குறித்து சி.பி.ஐ. விசாரணை; சசிகலா புஷ்பாவின் கோரிக்கை மனு தள்ளுபடி!



புதுடில்லி, ஜன.06

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மரணத்தில் சந்தேகம் இருப்பதாகவும், இது குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்த உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா உடல் நிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். 75 நாள்கள் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டும், அவர் சிகிச்சை பலனின்றி கடந்த டிசெம்பர் 5ஆம் திகதி உயிரிழந்தார்.

அவரது மரணத்தில் சந்தேகம் இருப்பதாகவும், மரணம் குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடக் கோரியும் அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சசிகலா புஷ்பா மற்றும் தெலுங்கு யுவா சங்கம் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்களை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பாலி நாரிமன் மற்றும் பினாக்கி சந்திரகோஷ் ஆகியோர் விசாரித்தனர்.

விசாரணையின் போது, இது தொடர்பான வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்திலும் நிலுவையில் உள்ளது என்று தெலுங்கு யுவா சங்கம் சார்பில் ஆஜரான வழக்குரைஞர் கூறியுள்ளார்.

இதனைக் கேட்ட நீதிபதிகள், ஜெயலலிதா மரணம் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை கோரும் வழக்கை சென்னை உயர் நீதிமன்றமே விசாரிக்கட்டும். உச்ச நீதிமன்றத்தில் விசாரித்த இந்த மனுவில் எந்த முகாந்திரமும் இல்லை என்று கூறி மனுக்களைத் தள்ளுபடிசெய்து உத்தரவிட்டுள்ளனர்.

# தமிழ்நாட்டில் வேலை கிடைக்காமல் ஆயிரத்து 316 பேர் தற்கொலை!

*அன்புமணி ராமதாஸ் தகவல்*



சென்னை, ஜன.06

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டில் வேலை கிடைக்காமல் ஆயிரத்து 316 பேர் தற்கொலை செய்துள்ளனர் என்று பா.ம.க. இளைஞர் அணித் தலைவர் அன்புமணி ராமதாஸ் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிபிடப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக்குவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. அனைத்துத் துறைகளிலும் தமிழகத்தை பின்னுக்குத் தள்ளிக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் ஜெயலலிதா தலைமையிலான அரசு பொறுப்பேற்ற 2011 ஆம் ஆண்டில் வேலையின்றி இருந்த 358 பேர் தற்கொலை செய்து கொண்டனர். 2012 ஆம் ஆண்டில் 211 பேர், 2013 ஆம் ஆண்டில் 226 பேர், 2014 ஆம் ஆண்டில் 312 பேர் என நான்கு ஆண்டுகளில் மொத்தம் ஆயிரத்து 107 பேர் தற்கொலை செய்து கொண்டனர்.

ஆனால், நான்கு ஆண்டுகளின் மொத்த தற்கொலைகளையும் மிஞ்சும் வகையில் ஒரே ஆண்டில் ஆயிரத்து 316 பேர் கடந்த ஆண்டில் வேலை கிடைக்காமல் தற்கொலை செய்துள்ளனர்.- என்றுள்ளது.

# தமிழகம் முழுவதும் தலைதூக்கும் தண்ணீர்ப் பஞ்சம்!



திண்டுக்கல், ஜன.06

வறட்சியால் பயிர்கள் கருகுவதைக் கண்டு விவசாயிகள் உயிரிழப்பது தொடர்கதையாகியுள்ள நிலையில் தமிழகம் முழுவதும் கடும் குடிதண்ணீர் தட்டுப்பாடு தலைதூக்கி உள்ளது.

வடகிழக்கு பருவமழை பொய்த்ததால் தமிழகம் முழுவதும் கடும் வறட்சி நிலவுகிறது.

பல மாவட்டங்களில் நெல், கரும்பு, மக்காச்சோளம் எனப் பல்வேறு பயிர்கள் தண்ணீரின்றி கருகிவருகின்றன.

இதனால், காவிரி டெல்டா மாவட்டங்கள் உட்படப் பல்வேறு மாவட்டங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் உயிரிழந்துள்ளனர்.

மேலும், ஏராளமான விவசாயிகள் கடன் வாங்கிப் பயிரிட்ட பயிர்கள் அனைத்தும் கண் முன்னேகருகிபோவதைகண்டு செய்வதறியாதுதவிக்கின்றனர்.

வறட்சியால் விவசாய பாதிப்பு ஒருபுறம் இருக்க, மக்களின் அத்தியாவசிய தேவையான குடிதண்ணீருக்கே தட்டுப்பாடு ஏற்படத் தொடங்கியுள்ளது.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் குடிதண்ணீர் விநியோகம் நாள் கணக்கில் தாமதமாகிறது. பொள்ளாச்சி அருகே உள்ள தென்குமாரபாலையத்தில் குடிதண்ணீர் கிடைக்காத மக்கள் காலிக் குடங்களுடன் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு அருகே உள்ள கறட்டுப்பட்டியிலும்குடிதணீருக்காக மக்கள் அலையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து அவர்கள் வத்தலகுண்டு ஒன்றிய அலுவலகத்தை முற்றுகையிட்டுள்ளனர். இதேபோல் பல்வேறு மாவட்டங்களிலும் தண்ணீர் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

மேட்டூர் பவானி சாகர், அமராவதி, பெரியாறு, வைகை என தமிழகத்தில் உள்ள அனைத்து அணைகளிலும் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளதால் வரும் நாள்களில் குடிதண்ணீர் தட்டுப்பாடு அதிகரிக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

எனவே, குடிதண்ணீர் பிரச்சினை விஸ்வரூபம் எடுக்கும் முன் தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவிக்க வேண்டும் என்றும் இதற்காக மத்திய அரசு 20 ஆயிரம் கோடி ரூபா வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் வழக்குத் தாக்கல் ஒன்று செய்யப்பட்டிருந்தது. இந்த மனு நேற்று விசாரணைக்கு வந்தது. இந்த மனுவுக்கு மத்திய -மாநில அரசுகள் பதில் அளிக்க கட்டளை அனுப்ப வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## சவூதியில் கடந்த வருடம் மட்டும் 153 பேருக்கு மரண தண்டனை

றியாத், ஜன.06

சவூதி அரேபியாவில் கடந்த வருடத்தில் மட்டும் 153 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

இஸ்லாமிய சட்டங்களை மீறிய குற்றத்துக்காகவே அவர்களுக்கு இந்தக் கொடூர தண்டனையைச் சவூதி அரசு வழங்கியுள்ளது.

இதேவேளை சவூதி அரேபியாவில் கொலை, போதை மருந்து கடத்தல், வன்புணர்வு மற்றும் நம்பிக்கைத் துரோகம் உள்ளிட்ட காரணங்களுக்குமரணதண்டனை வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் கடந்த ஆண்டில் மட்டும் 153 பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

பெண்கள் முகத்தைச் சமூக வலைத்தளங்களில் வெளியிட்டாலே அந்த நாட்டில் குற்றம் என்ற நிலையில் குற்றங்களுக்கு எதிரான சட்டங்கள் கடுமையானவையாக உள்ளன.

இதேவேளை, 2015 ஆம் ஆண்டை ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் மரணதண்டனை எண்ணிக்கை குறைந்துள்ளமை என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

இந்தநிலையில் மரண தண்டனை அதிகளவில் வழங்கப்படும் நாடுகளில் பிரபலமானவை அரேபியா நாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## நியூயோர்க்கில் ரயில் விபத்து; நூறுக்கும் மேற்பட்டோர் காயம்!



நியூயோர்க், ஜன.06

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் பயணிகள் ரயில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் நூறுக்கும் அதிகமானோர் காயம் அடைந்தனர். இந்த விபத்து ப்ரூக்லன் ரயில் நிலையத்தில் இடம்பெற்றது.

இந்த விபத்தை அடுத்து உடனடியாக தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்குச் சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். காயம் அடைந்தவர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு சிகிச்சைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

விபத்துக்குள்ளான ரயிலில் 600 - 700 பேர் வரை பயணம் செய்தனர் என்றும் இந்த விபத்தில் ரயிலுக்குப் பெரியளவில் சேதம் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள நேரத்தில் இந்த விபத்து ஏற்பட்டதால், மக்கள் அலறி அடித்துக் கொண்டு ரயில் நிலையத்தை விட்டு வெளியேறினர். இந்த ரயில் விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (எ)

## அமெரிக்காவில் இராணுவத்தினர் தலைப்பாகை அணிய அனுமதி

வொஷிங்டன், ஜன.06

அமெரிக்காவில் இராணுவ வீரர்கள் தலைப்பாகை, ஹிஜாப் அணிந்து கொள்ளவும், தாடி வைத்துக்கொள்ளவும் அந்த நாட்டு இராணுவம் அனுமதியளித்துள்ளது.

அமெரிக்க இராணுவத்தில் ஏராளமான சீக்கிய, முஸ்லிம் உள்ளிட்ட சிறுபான்மையினர்கள் பணியாற்றி வருகின்றனர். அவர்களின் மத அடையாளங்களை சுதந்திரமாகப் பின்பற்ற அந்த நாட்டு இராணுவம் அனுமதியளித்துள்ளது.

இதற்கு முன்னதாக செயலர் நிலையிலான அதிகாரிகளுக்கு மட்டும் மத அடையாளங்களைப் பின்பற்ற அனுமதி அளித்த நிலையில், தற்போது கீழ் நிலை வீரர்களுக்கும் அனுமதியளித்து அந்தநாட்டு இராணுவம் உத்தரவிட்டுள்ளது.

புதிய அறிவிப்பின்படி பிரிகேட் நிலை சீக்கிய வீரர்களும் இனிமேல் தங்கள் அடையாளமான தலைப்பாகை வைத்துக் கொள்ளலாம், நீண்ட தாடி வளர்த்துக் கொள்ளலாம்.

மேலும் முஸ்லிம் வீராங்கனைகள் ஹிஜாப் அணிந்து கொள்ளலாம்.

இதே போல் சிறுபான்மை இன பொலிஸார் தங்கள் மத அடையாளங்களைப் பின்பற்றத் தேவையான நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும் என்று நியூயோர்க் நகரப் பொலிஸ் தெரிவித்துள்ளது.

இந்த அறிவிப்பை அமெரிக்காவில் வசிக்கும் சீக்கிய சமூகத்தினர் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனர். (எ)



தொடர்ச்சியாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக மலேசியாவில் இதுவரை சுமார் 23 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர் என்று அந்தநாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன. மலேசியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் உள்ள மாநிலங்கள் மற்றும் வடகிழக்குப் பகுதியில் உள்ள 2 மாநிலங்களில் இவ்வருடம் அதிகளவிலான மழை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

## மியன்மாரில் இனப்படுகொலை நடைபெறவில்லை

அந்தநாட்டு ஆணையம் தெரிவிப்பு

மியன்மார் இராணுவம் பாலியல் வன்புணர்வு, கொலை, சித்திரவதை மற்றும் தீ வைப்பு ஆகிய குற்றங்களை இழைத்ததாக ரொஹிங்கியா மக்கள் தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்களுக்கு போதிய ஆதாரங்கள் இல்லை என்று அந்த நாட்டு அரசால் அமைக்கப்பட்ட ஆணையம் தெரிவித்துள்ளது.

மேலும், மியன்மாரில் இனப் படுகொலை எதுவும் நடை பெறவில்லை என்று அந்த ஆணையம் தெரிவித்துள்ளது.

அண்மைக்காலமாக மியன்மார் இராணுவம் பாலியல் வன்புணர்வு, கொலை, சித்திரவதை மற்றும் தீ வைப்பு ஆகிய குற்றங்களை இழைத்ததாக ரொஹிங்கியா மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர். அத்துடன் மியன்மாரை விட்டும் வெளியேறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## ட்ரம்ப் பதவியேற்கும் நிகழ்வில் ஹிலாரியும்

வொஷிங்டன், ஜன்.06

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ரொனால்ட் ட்ரம்பின் பதவியேற்பு நிகழ்ச்சியில் ஹிலாரி கிளிண்டன் பங்கேற்க இருக்கிறார் என்று அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாக குடியரசுக் கட்சி சார்பில் வெற்றி பெற்ற ரொனால்ட் ட்ரம்ப் அதிகாரபூர்வமாக எதிர்வரும் 20 ஆம் திகதி பதவி ஏற்கவுள்ளார்.

எனவே, இவ்விழாவில் பங்கேற்கப் போவதாக முன்னாள் ஜனாதிபதிகள் ஜோர்ஜ் புஷ், ஜிம்மி கார்ட்டர் ஆகியோர் அறிவித்திருந்தனர். இந்த நிலையில் ட்ரம்ப்பை எதிர்த்துப் போட்டியிட்ட ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ரொனால்ட் ட்ரம்ப் பதவி ஏற்பு நிகழ்ச்சியில் பங்கேற்கப் போவதாகத் தெரிவித்துள்ளனர். இதையடுத்து அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியான பில்கிளிண்டனும் நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளார். பதவி ஏற்பு விழாவில் கலந்து கொள்ள நாட்டின் முக்கிய பிரபலங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (எ)

## ஒரு மணிநேரத்தில் 22.5 கி.மீ.சைக்கிள் ஓடி 105 வயது முதியவர் சாதனை!

பரிஸ், ஜன.06

பிரான்ஸில் ஒரு மணித்தியாலத்தில் 22.5 கி.மீ. தூரத்தை சைக்கிளில் கடந்து 105 வயது முதியவர் சாதனை படைத்துள்ளார்.

'சாதனைக்கு வயது தடை இல்லை' என்பார்கள். அதை நிரூபிக்கும் வகையில் 105 வயது முதியவர் ஒருவர் ஒரு மணி நேரத்தில் 22.5 கி.மீ. தூரம் சைக்கிள் ஓடிச் சாதனை படைத்துள்ளார். அவரது பெயர் ரொபர்ட் மார்சண்ட். இவர் பிரான்ஸைச் சேர்ந்தவர்.

இந்த முதியவர் பரிஸ் அருகே ஒரு விளையாட்டு மைதான ஓடுதளத்தில் சைக்கிள் ஓடினார். இதன் போது ஒரு மணி நேரத்தில் 22.5 கி.மீ. தூரம் ஓடி அவர் சாதனை படைத்தார். அப்போது அங்கு கூடியிருந்த நூற்றுக் கணக்கானோர் கை



தட்டி மகிழ்ச்சி ஆரவாரம்செய்தனர்.

இதே வேளை அந்த முதியவர் தனது 102 ஆவது வயதில் 26.9 கி.மீ. தூரம் வரை சைக்கிள் ஓடியுள்ளார். 1911 ஆம் ஆண்டில் பிறந்த இவர் தனது 14 வயதில் மோட்டார் சைக்கிள் ஓடப் பழகிக் கொண்டார்.

மேலும், அவர் தனது 67 ஆவது வயதில் சைக்கிள் ஓடுவதில் ஆர்வம் காட்டினார். 2012 ஆம் ஆண்டில் அதாவது தனது 100 ஆவது வயதில் 4 மணி 17 நிமிடம் 27 வினாடிகளில் 100 கி.மீ. தூரம் சைக்கிள் ஓடி சாதனை படைத்தார். அதற்காக 6 மாதங்கள் பயிற்சி மேற்கொண்டார் என்று கூறப்படுகின்றது. (எ)

# துரோகிகளே! தூர விலகுங்கள்!!

முன்னாள் போராளிகளின் பசியைப் போக்குங்கள் அதன் பின்னர் இறந்தவர் களைப்பற்றியும் தலைவரைப் பற்றியும் பேசலாம். அதை விடுத்து, வெறுமனே மாவீரர் பெயரைச் சொல்லி அரசியல் நடத்துவது கடைகெட்ட அயோக்கியத்தனம் என்றுதான் கூற வேண்டும்.

■ ந.பரமேஸ்வரன்

துரோகிகளே தூர விலகுங்கள்! - இது எழுபதுகளில் 'சுதந்திரன்' பத்திரிகை ஆசிரியர் கோவை மகேசன் இடதுசாரிகளை விளித்து எழுதிய தொடரின் தலைப்பு.

இப்போது பிரபாகரனை வைத்து அரசியல் செய்வோரை நோக்கி இதே வார்த்தையை பிரயோகிப்பதில் எந்தவித தவறுமில்லையென நினைக்கிறேன்.

கடந்த திங்கட்கிழமை முன்னாள் பெண் போராளிகள் இருநூறுக்கு மேற்பட்டோர். கிளிநொச்சி இரணைமடு இராணுவமுகாமுக்கு முன்பாக ஒன்று கூடி தமது அன்றாட சீவியம் பெரும் இக்கட்டான நிலைமையில் உள்ளதாகவும், பிள்ளைகளைப் பாடசாலைக்கு கூட அனுப்ப வசதியில்லாமல் தவிக்கிறார்கள் எனவும், தமக்கு வேலைவாய்ப்பு வழங்குமாறும் இலங்கை இராணுவத்தினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.



2009 மே 18 வரையும் யாரைக் கண்டவுடன் தமது துப்பாக்கியின் விசையைத் தட்டினார்களோ, யாரைத் தமது பரம எதிரிகளாகக் கருத்தினார்களோ அவர்களிடம் தமது பசியைப்போக்குமாறு கோரிக்கை விடும் அளவுக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதையிட்டு ஈழத் தமிழர்கள், அனைவரும் வெட்கப்பட வேண்டும்.



''தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினையே அழித்திடுவோம்'' என்றான் பாரதி. இங்கே மக்களுக்காக தமது உயிரை அர்ப்பணித்து போராடியவர்களின் பசியைப் போக்க ஒருவருமில்லை.

2009 மே 18 வரையும் இவர்களைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடிய சமூகம் இன்று அவர்களுக்கு ஒரு வேளை உணவு வழங்க மறுக்கிறது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை அரசு எந்தவிதமான உதவியும் செய்யவில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல்வாதிகள் சிலர் நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர். இலங்கை அரசாங்கத்திடம் எதற்காக கையேந்த வேண்டும்? முதலில் நீங்கள் அல்லது நாம் என்னசெய்தோம் என்பதே கேள்வி.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் கீழ் சமூக புனர்வாழ்வு என்ற விடயம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணசபை எமக்காகத்தமது வாழ்க்கையைத் தியாகம் செய்த முன்னாள் போராளிகளின் புனர்வாழ்வுக்காக என்ன செய்தது? முன்னாள் போராளிகளுக்கு மாதம் 3ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுவதாக முதலமைச்சர் கூறியுள்ளார். இது எத்தனை பேருக்குக் கிடைக்கிறது தொடர்ச்சியாக வழங்கப்படுகிறதா? -என்பதெல்லாம் கேள்விக்குரிய விடயம்.

மத்திய அரசின் அனுமதியுடன் மாகாணசபைகள் வெளிநாட்டு நிதியைப் பெற்றுக்கொள்ளலாம் என பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் கூறுகிறது. புலம்பெயர் தமிழர்களின் உதவியுடன் முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு வடமாகாணசபை ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது? கவலைக்குரிய விடயம் என்னவென்றால் வடமாகாணசபையில் இதுவரையும் முன்னாள் போராளிகள் தொடர்பாக எந்த விதமான பிரேரணையையும் எவரும் கொண்டு வரவில்லை.

முன்னாள் போராளிகள் இலங்கை இராணுவத்திடம் கையேந்திக் கொண்டிருக்கையில்-

உள்நாட்டிலும், வெளி நாட்டிலும், நாடாளுமன்றத்திலும் மாவீரர்தினம் கொண்டாடுபவர்களும், பிரபாகரனின் நாமத்தை வாய்க்கு வாய் உச்சரிப்பவர்களும் துரோகிகள் என்றுதான் சொல்லவேண்டும்.

புலம்பெயர்ந்த தமிழர்களின் சனத்தொகை ஒரு மில்லியனுக்கும் அதிகம். 2009 மே 18 வரையும் தங்களது இருப்பைத் தக்க வைத்துக்கொள்வதற்காக புலிகளுக்கு நிதி வழங்கியவர்களும் வாரியிறைத்தவர்களும் தமது ஒரு நாள் சம்பளத்தை முன்னாள் போராளிகளுக்கு அனுப்பினால் அது அவர்களுக்குப் பல நாளைக்குப் போதுமானது. இப்போது சிலர் தனிப்பட்ட ரீதியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில உதவிகளைச்செய்து வருகின்றனர். இவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள், ஆனால் இந்த உதவிகள் நிறுவனமயப் படுத்தப்பட வேண்டும். வட மாகாணசபையோ புலம் பெயர் புலி ஆதரவு அமைப்புகளோ முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உருப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

முன்னாள் பெண் போராளிகளை எதிரியிடம் கையேந்த வைத்து விட்டு மாவீரர் தினம் கொண்டாடுவதும் தேசியத்தலைவர் எனப் பிரபாகரனை அழைத்துத் துரோகிகளே மாவீரர் தினம் கொண்டாடுவதையும் பிரபாகரனின் நாமத்தை உச்சரிப்பதையும் நிறுத்துங்கள். முதலில் முன்னாள் போராளிகளின் பசியைப்போக்குங்கள் அதன் பின்னர் இறந்தவர்களைப் பற்றியும் தலைவரைப் பற்றியும் பேசலாம். அதை விடுத்து, வெறுமனே மாவீரர் பெயரைச் சொல்லி அரசியல் நடத்துவது கடைகெட்ட அயோக்கியத்தனம் என்றுதான் கூற வேண்டும். பிரபாகரனையும் மாவீரர்களையும் வைத்துச் சுயநல அரசியல் செய்யும் சுயநலப்பிசாசுகள் அனைவருக்கும் இது சமர்ப்பணம்.

# அக்கராயனில் தொடரும் மணல் அகழ்வுக்கு கிராம சங்கங்களின் பலவீனமே காரணம்

## குற்றஞ்சாட்டுகின்றனர் பிரதேச பொது மக்கள்

கிளிநொச்சி, ஜன.06

கிளிநொச்சி அக்கராயனில் தொடரும் மணல் அகழ்வுக்குக் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பலவீனமான செயற்பாடுகளே காரணமாக அமைந்துள்ளன என்று பொது மக்களால் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

மணல் கொண்டு செல்லப்படுவது தொடர்பாக பிரதேச செயலர், மாவட்டச் செயலருக்கு தகவல்கள் வழங்கப்படுவதில்லை. நேரில் சென்று மணல் அகழ்வின் தாக்கம் தொடர்பாக தெரியப்படுத்துவதில்லை.

கிராம அபிவிருத்திச் சங்கங்கள்தங்களிடையே கலந்துரையாடல்களை மேற்கொண்டு மணல் அகழ்வின் நிலைப்பாடு தொடர்பாக அறிக்கைகள் தயாரித்து அதனை பிரதேச செயலரிடமோ அல்லது மாவட்ட செயலரிடமோ நேரடியாக கொண்டு சென்று வழங்கியதாகத் தெரியவில்லை.

கிராம அபிவிருத்திச் சங்கங்களின் முக்கிய பொறுப்பில் உள்ளவர்களே நேரடியாக மணல் அகழ்வில் ஈடுபடுவதன் காரணமாக கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மணல் அகழ்வைக் கட்டுப்படுத்த முடியாமல் உள்ளன.

அக்கராயன் குளத்தின் கீழான ஏழரைக் கிலோ மீற்றர் நீளமான குடமுருட்டி வரையான ஆற்றுப் பகுதியில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு நடைபெறுகிறது. இதன் காரணமாக எதிர்காலத்தில் நெற்செய்கைகள் பாதிக்கப்படும். கடல் நீர் உட்புகுந்து குடிதண்ணீர் பெறமுடியாது போகும்.

உவர் நீர் அக்கராயன் ஆறு முழுவதும் பரவக் கூடிய அபாய நிலை உருவாகி வருகின்றது.

அக்கராயனில் மணல் அகழ்வுக்கு எதிராக மக்கள் கண்டனக் கூட்டங்கள், விழிப்புணர்வுச் செயற்பாடுகள் என்பன மேற் கொண்ட போதிலும் மணல் அகழ்வு தொடர்ந்த வண்ணமுள்ளன.

இதேவேளை, மணல் அகழ்வுக்கு அனுமதிகள் வழங்கும் அதிகாரிகள் தொடர்பாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். வீட்டுத் திட்டங்களுக்கு மணலைப் பெற்றுக் கொள்ளாத முடியாத நிலையில், எமது மணல் வளம் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்வதற்கு அதிகாரிகளே காரணமாக உள்ளனர்.

அதேவேளை களவாக மணல் அகழ்வில் ஈடுபடுவோருக்கும் அக்கராயன் பொலிஸாருக்கும் நெருங்கிய தொடர்புகள் உள்ளன என்று பொதுமக்கள் கூறுகின்றனர். இதன் காரணமாகவே மணல் அகழ்வு தொடர்ந்து நடைபெறுகிறது.- என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். •

## ஹெரோயின் நுகர்ந்த மூவருக்கும் தண்டம்

இளவாலை பனிப்புலம் பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளை நுகர்ந்த மூவருக்குத் தலா 7 ஆயிரம் ரூபா வீதம் 21 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார் மல்லாகம் நீதிவான் ரீ.கருணாகரன்.

இளவாலை பனிப்புலம் பகுதியில் இளைஞர்கள் மூவர் ஹெரோயின் போதைப்பொருள் நுகர்வதாக பொலிஸ் நிலையத்துக்கு இரகசியத் தகவல்கிடைக்கப் பெற்றிருந்தது. இதனையடுத்து சம்பவ இடத்துக்குச்சென்ற பொலிஸார் மூன்று இளைஞர்களை கைது செய்ததுடன் 20மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளினை மீட்டிருந்தனர். அவர்கள் மூவரையும் நேற்றுமுன்தினம் நீதிவான் ரீ.கருணாகரன் முன்னிலையில் முற்படுத்திய போது இந்த அபராதம் விதித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir



# சாதனை நாயகன் டோனி!




மும்பை, ஜன.06 இந்திய கிரிக்கெட் அணியின் சாதனை நாயகனான டோனி மீண்டும் ஒரு அதிர்ச்சிகரமான முடிவை எடுத்துள்ளார்.

ஒருநாள் போட்டி மற்றும் 20 ஓவர் அணியின் தலைவர் பதவியில் இருந்து விலகுவதாக அவர் நேற்று முன்தினம் அறிவித்திருந்தார்.

இந்தச் செய்தி ரசிகர்கள் இடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆஸ்திரேலிய பயணத்தின் போது யாரும் எதிர்பார்க்காத வகையில் டோனி டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுகிறேன் என்று அறிவித்தார். இதேபோன்று, தான் தற்போதும் ஒருநாள் மற்றும் 20 ஓவர் அணித் தலைவர் பொறுப்பில் இருந்து திடீரென விலகி ஆச்சரியத்தை அளித்துள்ளார்.

ஆனால், தொடர்ந்தும் விளையாடுவேன் என்று அறிவித்தது ரசிகர்களுக்கு சற்று ஆறுதலை அளித்துள்ளது.

இந்திய கிரிக்கெட் வரலாற்றில் எந்த ஒரு அணித் தலைவரும் நிகழ்த்தாத மகத்தான சாதனையை டோனி படைத்துள்ளார். ஐ.சி.சி.யின் 3 கோப்பைகளை வென்ற உலகின் ஒரே அணித்தலைவர் டோனி ஆவார். 2007 ஆம் ஆண்டு அறிமுகமான முதலாவது 20 ஓவர் உலக கோப்பையில் டோனி தலைமையிலான அணி வென்றது. அதை தொடர்ந்து 2011 ஆம் ஆண்டு இந்தியாவில் இடம்பெற்ற ஒருநாள் போட்டி (50 ஓவர்) உலக கோப்பையையும் வென்றார்.

28 ஆண்டுகளுக்கு பின்னர் உலககோப்பையை வென்று இந்தியாவுக்கு டோனி பெருமை சேர்த்தார். அதற்கு முன்பு 1983 இல் கபில்தேவ் உலககோப்பையை முதல்முறையாக பெற்றுக்கொடுத்தார்.

டோனி 2 ஆவது உலககோப்பையை கைப்பற்றி சாதனை புரிந்தார். அதுமட்டுமின்றி, 2013 ஆம் ஆண்டு ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத்தை கைப்பற்றிக் கொடுத்தார். மேலும் அவரது தலைமையில் தான் இந்திய அணி டெஸ்டில் முதல் இடத்தைப் பிடித்தது.

ஜோர்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் பிறந்த மகேந்திரசிங் டோனி 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஒருநாள் போட்டியில் அறிமுகம் ஆனார். அதற்கு அடுத்த ஆண்டு (2005) டெஸ்டில் அறிமுகம் ஆனார்.

அதிரடியான ஆட்டம் மற்றும் சிறந்த விக்கெட் கீப்பிங் மூலம் 2007 ஆம் ஆண்டு 20 ஓவர் போட்டிக்கு அணித் தலைவர் பொறுப்பை ஏற்றார். அதே ஆண்டில் ஒருநாள் போட்டிக்கும், 2008 ஆம் ஆண்டு டெஸ்ட் அணிக்கும் தலைவர் ஆனார். 3 நிலைகளிலும் அணித்தலைவர் பணியில் சிறப்பாக செயல்பட்டு தனது முத்திரையை பதித்தார்.

199 ஒருநாள் போட்டிக்கு அணித்தலைவராக இருந்து சாதனை புரிந்துள்ளார். இதில் 110 போட்டியில் வெற்றியையும் பெற்றுள்ளார். அதாவது, வெற்றி சதவீதம் 59.57 ஆகும். அதிக ஒருநாள் போட்டிக்கு அணித்தலைவராக இருந்த இந்தியர் என்ற பெருமையையும் தனதாக்கிக் கொண்டார். அதிக வெற்றி பெற்ற இந்திய அணித் தலைவர் என்ற சாதனையையும் டோனி படைத்தார். சர்வதேச அளவில் 3 ஆவது வீரர் ஆவார்.

பொண்டிங் (ஆஸ்திரேலியா) 230 போட்டிகளுக்கும், ஸ்டீபன் பிளமிங் (நியூஸிலாந்து) 218 போட்டிகளுக்கும் தலைவர்களாக இருந்துள்ளனர். அதற்கு அடுத்த இடத்தில் டோனி உள்ளார்.

ஒருநாள் போட்டியில் அதிக வெற்றி பெற்ற தலைவர்களில் பொண்டிங்குக்கு அடுத்தபடியாக 2 ஆவது இடத்தில் உள்ளார்.

72 இருபது ஓவர் போட்டிக்குத் தலைவராக இருந்து சாதனை படைத்துள்ளார். உலகில் வேறு யாரும் இவ்வளவு அதிகமான ஆட்டத்துக்கு தலைவராக இருந்தது இல்லை. 41 ஆட்டங்களில் வெற்றி பெற்று சாதனை புரிந்துள்ளார். டெஸ்ட் போட்டியில் 60 இல் அணித்தலைவராக இருந்து 27 டெஸ்ட் போட்டிகளில் வென்றுள்ளார்.

டெஸ்ட், ஒருநாள் ஆட்டம் மற்றும் 20 ஓவர் போட்டி ஆகிய மூன்று வகையான கிரிக்கெட்டிலும் 50 க்கும் அதிகமான போட்டிகளில் அணித் தலைவராக இருந்த ஒரே வீரர் டோனி ஆவார். அதிக சர்வதேச போட்டியில் (டெஸ்ட், ஒருநாள், 20 ஓவர் சேர்த்து) தலைவராக இருந்தவர் டோனி ஆவார். அவர் மொத்தம் 331 போட்டிக்கு அணித் தலைவராக பணியாற்றி உள்ளார். அவருக்கு அடுத்தபடியாக பொண்டிங் 324 போட்டிகளில் தலைவராகப் பணியாற்றியுள்ளார்.

டோனியின் சாதனைகள் அனைத்தும் மகத்தானவை. அணித்தலைவர் பதவி இல்லாமல் அவர் நீண்டநாள் ஆடுவாரா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இதனால் அவரது சகாப்தம் தற்போது நிறைவு பெறும் நிலையில் இருக்கிறது. டோனி மிகச் சிறந்த அணித்தலைவராவார். இவர் இந்திய அணியில் மட்டுமன்றி உலகளவில் ஓர் சாதனை நாயகனாகவே கணிக்கப்படுகிறார். (க)

## டோனிக்குக் குவியும் புகழாரங்கள்

டோனியின் சாதனைகளைப் புகழ்ந்து டுவிட்டரில் முன்னாள், தற்போதைய வீரர்கள் மற்றும் பிரபலங்கள் பதிவுகளை வெளியிட்டுள்ளனர்.

அவர்களின் பதிவுகள் வருமாறு:-

**சச்சின் டெண்டுல்கர்:** ஒருநாள், டி-20 உலகக் கோப்பைகளை வென்ற டோனிக்கு என் வாழ்த்துக்கள். ஒரு ஆக்ரோஷ வீரர் என்ற நிலையிலிருந்து நிதானமும் உறுதியும் மிக்க ஒரு தலைவராக அவர் உருவெடுத்தது வரை நான் அவரைப் பார்த்து வருகிறேன். அவரது வெற்றிகரமான அணித் தலைவர் பதவியை கொண்டாடும் தருணம் இது. அவரது முடிவை மதிக்க வேண்டிய தருணம் இது. களத்தில் அவர் மேலும் நம்மை உற்சாகப் படுத்தப் போகிறார். தோனி சிறப்புற எனது வாழ்த்துகள்.

**பிரதமர் மோடி:** டோனியின் எதிர்கால இலக்குகளுக்கு எனது வாழ்த்துக்கள். அணித் தலைவராக இந்திய கிரிக்கெட்டுக்குச் செய்த பங்களிப்புகளுக்கு நன்றி.

**ஹர்திக் பாண்டியா:** லட்சக்கணக்கானோருக்கு டோனி நீங்கள் ஒரு உத்வேகம். உங்கள் தலைமையின் கீழ் நான் ஆடிய ஒவ்வொரு கணத்தையும் பெரிய புதையலாகக் கருதுகிறேன்.

**சுரேஷ் ரெய்னா:** இந்திய அணியின் வெற்றிகரமான தலைவர். தனது தொலைநோக்கை நிஜமாக மாற்றியவர். அனைவரையும் மேலும் கனவு காண உத்வேகமாகத் திகழ்ந்தவர்.

**ரோஹித் சர்மா:** உண்மையான வழிகாட்டி, தலைவர், நிறைய வீரர்களின் கிரிக்கெட் வாழ்க்கையில் தாக்கம் செலுத்தியவர். என்னை ஐ.சி.சி. சம்பியன்ஸ் டிராபியில் தொடக்க வீரராக களமிறக்கியதன் மூலம் என்னிலும் டோனி தாக்கம் செலுத்தினார்.

**இர்பான் பத்தான்:** அணித் தலைவராக அவரது வழிமுறையை விவரிக்க வார்த்தைகள் இல்லை.

**ஹர்ஷா போக்லே:** ஓர் அருமையான சேவகரை எழுந்து நின்று கரகோஷம் செய்து வாழ்த்தும் தருணம்.

ஆனால் இவர் இந்திய கிரிக்கெட்டின் ஈடு இணையற்ற தலைவர்.

மேலும், கபில்தேவ் உள்ளிட்ட பலர் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

# இலங்கையைத் தோற்கடித்தது தென்னாபிரிக்கா; இரண்டாவது வெற்றியால் தொடரையும் வென்றது

கேப்டவுனில் நடைபெற்ற இலங்கை –தென்னாபிரிக்க அணிகளுக்கிடையேயான இரண்டாவது டெஸ்டின் மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் இலங்கை அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களை இழந்து 130 ஓட்டங்களை எடுத்திருந்தது.

மூன்றாம் நாள் முடிவில் 29 ஓட்டங்களுடன் இருந்த மத்தியூஸும், 28 ஓட்டங்களைப் பெற்றிருந்த சந்திமாலும் நான்காம் நாளான நேற்று தமது இரண்டாம் இன்னிங்ஸைத் தொடர்ந்தனர்.

சந்திமால் 55 பந்துகளுக்கு முகம்கொடுத்து 30 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் றபாடாவின் பந்துவீச்சில் குக்கிடம் பிடிகொடுத்தார்.

82 பந்துகளை எதிர்கொண்டு 49 ஓட்டங்களைப் பெற்றிருந்த மத்தியூஸ் றபாடாவின் பந்துவீச்சில் குக்கிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

12 ஓட்டங்களைப் பெற்றிருந்த தரங்கவையும் றபாடா தனது பந்தில் வெளியேற்றினார்.

லக்மல் 10 ஓட்டங்களுடனும், குமார 9 ஓட்டங்களுடனும், பிரதீப் 5 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழந்து ஏமாற்றினர்.



நேற்றைய நான்காம் நாள் ஆட்டத்தில் இலங்கை அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 62 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 224 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. ஹேரத் 45 பந்துகளை எதிர்கொண்டு 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தார்.

நேற்றைய ஆட்டத்தில் றபாடா 4 விக்கெட்டுக்களையும் பிளண்டர் மற்றும் மகாராஜ் ஆகியோர் தலா 1 விக்கட்டையும் வீழ்த்தினர்.

தென்னாபிரிக்கா – இலங்கை அணிகள் மோதிய இரண்டாவது டெஸ்டில் தென்னாபிரிக்கா அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 392 ஓட்டங்களைப் பெற்றது.

இரண்டாவது இன்னிங்ஸில் 7 விக்கெட்டுக்களை இழந்து 224 ஓட்டங்களுடன் ஆட்டத்தை இடை நிறுத்திக் கொண்டது.

தென்னாபிரிக்க அணி இரண்டாவது டெஸ்டில் மொத்தமாக 616 ஓட்டங்களைப் பெற்றது. இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 110 ஓட்டங்களை எடுத்தது.

இரண்டாவது இன்னிங்ஸில் 224 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது.

மொத்தமாக இலங்கை அணி இரண்டாவது டெஸ்டில் 334 ஓட்டங்களை எடுத்தது.

கேப்டவுனில் நடைபெற்ற இலங்கை – தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டெஸ்டில் தென்னாபிரிக்க அணி 282 ஓட்டங்களால் இலங்கையை வீழ்த்தி வெற்றி பெற்றது.

இரண்டாம் டெஸ்டின் ஆட்ட நாயகனாக தென்னாபிரிக்க அணியின் றபாடா தெரிவானார்.

# மகுடம்



டில்லி, ஜன.06

ஒருநாள் போட்டி மற்றும் இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டிகளுக்கான இந்திய அணியின் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக மஹேந்திர சிங் டோனி அறிவித்துள்ளார்.

இதேவேளை, இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடர்களில் விளையாடவுள்ள இந்திய அணி வீரர்களின் பட்டியல் இன்று அறிவிக்கப்படவுள்ளது.

அணித் தலைவர் பதவியிலிருந்து விலகினாலும், இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 தொடர்களில் விளையாடுவதற்கு டோனி தயாராக இருக்கிறார் என பி.சி.சி.ஐ. வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்திய டெஸ்ட் அணிக்கு தலைமை வகித்து வரும் விராட் கோஹ்லி, ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளின் அணித்தலைவர் பொறுப்பையும் ஏற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா-இங்கிலாந்து அணிகள் மோதும் ஒருநாள் தொடர் வரும் 15 ஆம் திகதி தொடங்குகிறது. இதற்கான அணி இன்று தேர்வாக உள்ளது. இதில் விராட் கோஹ்லி, ஒருநாள் மற்றும் டி20 அணிகளுக்கான தலைவராக நியமிக்கப்பட உள்ளார்.

இதேவேளை, இவ்வருடத்தில் இங்கிலாந்தில் சம்பியன்ஸ் கிண்ணப் போட்டி நடைபெற உள்ளது. அதுவரை டோனி தலைவராக நீடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், இந்த திடீர் அறிவிப்பு வெளிவந்துள்ளது.

டோனியின் பதவி விலகல் குறித்து கிரிக்கெட் வர்ணனையாளர் ஹர்ஷா போக்ளே தெரிவித்தவை வருமாறு:-

எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு டோனி இந்தச் சரியான முடிவை எடுத்துள்ளார். கடந்த வருடத்தில் இந்திய அணி, கோஹ்லி அணியாக மாறியுள்ளது என்று கூறியுள்ளார். அது மிகச்சரியானதாகும்.

தேர்வுக்குழுவும் கோஹ்லிக்குச் சாதகமாக முடிவெடுக்கும் நிலையில் உள்ளதால் அவர்களுக்குச் சிரமம் வைக்காமல் பதவியிலிருந்து டோனி விலகியுள்ளார்.

டோனி சுயநலமின்றி 200 போட்டிகள் என்கிற சாதனைக்கு ஆசைப்படாமல் இந்த முடிவை எடுத்துள்ளார். இதனால் அடுத்த உலகக் கோப்பைக்கான இந்திய அணியைக் கட்டமைக்கும் பொறுப்பு கோஹ்லிக்கு வழங்கப்படவுள்ளது.

அணியை வழி நடத்தும் சிறந்த சூழல் அவருக்கு உருவாகியுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

## செரீனா வில்லியம்ஸ் வெளியேறினார்!



நியூயோர்க், ஜன.06

நியூஸிலாந்தின் ஒக்லண்டில் நடைபெற்று வரும் ஏ எஸ் பி கிளசிக் டென்னிஸ் போட்டிகளிலிருந்து உலகின் இரண்டாம் நிலை வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் வெளியேற்றப்பட்டுள்ளார்.

முதலாவது போட்டியில் வெற்றி பெற்ற செரீனா, வில்லியம்ஸ் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது சுற்றில் தோல்வியைத் தழுவி வெளியேறியுள்ளார்.

தரநிலை வரிசையில் 72ஆம் இடத்தை வகிப்பவரான மெடிசன் பிரெங்க்லிடம் 2-1 செட்கள் அடிப்படையில் செரீனா தோல்வி கண்டுள்ளார்.

## ஆஸ்திரேலியா அணி பங்களாதேஷ்க்கு!



மெல்போர்ன், ஜன.06


இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்குபற்றும் பொருட்டு ஆஸ்திரேலிய அணியினர் பெரும்பாலும் இவ் வருட இறுதியில் பங்களாதேஷ் செல்வார்கள் என கிரிக்கெட் ஆஸ்திரேலியாவின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜேம்ஸ் சதர்லண்ட் தெரிவித்துள்ளார்.

## யூனிஸ்கானின் சதம் பாகிஸ்தானுக்கு ஆறுதல் அளித்தது!

சிட்னி, ஜன.06

சிட்னியில் நடைபெற்று வரும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி சரிவை நோக்கி சென்ற சமயத்தில், யூனிஸ்கான் சதம் அடித்து ஆறுதல் அளித்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான 3 டெஸ்ட் போட்டித் தொடரில் முதல் 2 டெஸ்டிலும் வென்று ஆஸ்திரேலியா தொடரைக் கைப்பற்றியது. மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சிட்னியில் நடைபெற்று வருகிறது.



முதலில் ஆடிய ஆஸ்திரேலியா அணி 538 ஓட்டங்களைச் சேர்த்திருந்த நிலையில் முதல் இன்னிங்ஸை டிக்ளேர் செய்தது.

பின்னர் முதல் இன்னிங்ஸை தொடங்கிய பாகிஸ்தான், 6 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 2 விக்கெட்டை இழந்தது. அதன் பின்னர் அசார் அலி, யூனிஸ்கான் இருவரும் நிலைத்து நின்று அரை சதம் கடந்தனர். இதனால் 2 ஆம் நாள் ஆட்டநேர முடிவில் பாகிஸ்தான் 2 விக்கெட் இழப்பிற்கு 126 ஓட்டங்களை எடுத்திருந்தது. நேற்று மூன்றாம் நாள் ஆட்டம் நடைபெற்றது. தொடர்ந்து ஆடிய அசார் அலி 71 ஓட்டங்களில் விக்கெட்டை இழந்தார். மறுமுனையில் யூனிஸ்கான் சதம் கடந்தார். இது அவருக்கு 34 ஆவது டெஸ்ட் சதமாகும். ஆஸ்திரேலிய மண்ணில் முதல் சதம் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றைய ஆட்டநேர முடிவில் பாகிஸ்தான் அணி 8 விக்கெட் இழப்பிற்கு 271 ஓட்டங்களை எடுத்துள்ளது. யூனிஸ்கான் 136 ஓட்டங்களுடனும், யாசிர் ஷா 5 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இன்று 4 ஆம் நாள் ஆட்டம் நடைபெறவுள்ளது.

## 9, 10, 11ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எனத் தீர்மானித்ததாக அறிய வந்தது.

புதிய அரசமைப்புத் தயாரிப்பதற்காக நாடாளுமன்றம் தன்னை அரசமைப்புச் சபையாகவும் மாற்றிக் கொண்டிருப்பது தெரிந்ததே.

அந்த அரசமைப்புச் சபை கூடி, உத்தேச நகல் யாப்பைத் தயாரிப்பதற்காகபிரதமர்ரணில் விக்கிரமசிங்கதலைமையில்21 பேர் கொண்ட வழிகாட்டல் குழு ஒன்றை நியமித்தது. அதில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பிரதிநிதிகளானஇரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன் உட்பட நாடாளுமன்றத்தில்அங்கம்வகிக்கும் கட்சிகளின் உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர்.

அரசமைப்புச்சபையின்வழிகாட்டல்குழு,உத்தேசஅரசமைப்புத் தொடர்பாக பன்னிரண்டு தலையங்கங்களைவரையறை செய்தமையோடு, அவற்றில் ஆறு தலையங்கங்களின் விடயங்களை ஆராய்ந்து சிபாரிசுகளைச் செய்ய ஆறு உபகுழுக்களையும் நியமித்தது. எஞ்சிய ஆறு தலையங்கங்கள் கீழான விடயங்களை வழிகாட்டல் குழு தானேநேரடியாகக்கையாளும் எனவும் அறிவித்திருந்தது.

அதன்படி, அந்த உபகுழுக்கள் தமது சிபாரிசு அறிக்கைகளைச் சமர்ப்பித்துவிட்டன.

கடந்த அரசமைப்புச் சபையின் அமர்வின் போது அவை சபை உறுப்பினர்களுக்குக் கையளிக்கப்பட்டும் விட்டன.

எனினும் –

இந்தஉபகுழுக்களின்அறிக்கைகள்தொடர்பாகவழிகாட்டல் குழுவின் அவதானிப்புகளும் –

வழிகாட்டல் குழு தான் கையாளும் ஆறு தலையங்கங்களின் கீழான விடயங்கள் தொடர்பாக அதன் இடைக்கால அறிக்கையும் –

இன்னும்வெளிப்படுத்தப்படவில்லை. அவை தயாரிக்கப்பட்டு தயாராக இருக்கின்றன என்று கூறப்பட்டது.

எதிர்வரும் 9, 10, 11 ஆம் திகதிகளில் நாடாளுமன்றம் அரசமைப்புச்சபையாகமாறிமூன்று முழுநாள்விவாதத்தில்ஈடுபடும் என்றும் –

அச்சமயத்தில் வழிகாட்டல் குழுவின்இடைக்காலஅறிக்கைகள் குறித்து முழு அளவில் விவாதிக்கப்படும்என்றும்கூறப்பட்டிருந்தது.

இந்நிலையில்–

9,10,11ஆம்திகதிகளுக்கான அரசமைப்புச்சபையின்அமர்வுகளுக்கு முன்னோடியாக அரசமைப்பு சபையின் வழிகாட்டல் குழு நேற்று அதன் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடியது.

தயார் நிலையில் இருக்கும் இடைக்கால அறிக்கை தொடர்பில்குழுஉறுப்பினர்களின்அவதானத்தைப்பிரதமர்கோரினார்.

தங்களுக்கு அதற்கு மேலும் கால அவகாசம் வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் கோரினர். நல்லாட்சி அரசில் இடம்பெற்றிருக்கும் சு.க.உறுப்பினர்களும், கூட்டு எதிரணியில் இருக்கும் சு.க. உறுப்பினர்களுமே இவ்வாறுகாலஅவகாசம்கோரினர்.

முன்னர், இதே விடயத்துக்காக கால அவகாசம் கோரியிருந்த ஜே.வி.பி. உறுப்பினர்கள் நேற்றைய வழிகாட்டல் குழுவுக்கு சமுகம் தரவில்லை.

இந்தநிலையில், தயாரிப்புக் கட்டத்தில், சமர்ப்பிக்கக்கூடிய வகையில் உள்ள இடைக்கால வரைவைவழிகாட்டல்குழுஅங்கீகரிப்பதுகுறித்துத்தீர்மானிக்க மேலும்கால அவகாசம்வழங்க வேண்டிய நிலைக்குப் பிரதமர் தள்ளப்பட்டார்.

ஜனவரி மூன்றாம் வாரத்தில் வழிகாட்டல் குழு கூடும் போது, தயாரிப்பு நிலையில் இருக்கும் இடைக்கால அறிக்கையின் வரைவு குறித்து கட்சிகள் தங்களின் கருத்தை வெளியிட்டு அது குறித்து ஒரு முடிவு எட்டப்பட வேண்டும் என்று நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கை இறுதி செய்யப்படாத நிலையில், உபகுழுக்களின் அறிக்கைகளை மட்டும் கையில் வைத்துக் கொண்டு அது குறித்து அரசமைப்புச் சபை 9,10,11 ஆம் திகதிகளில் தனது அமர்வை நடத்தி மூன்று நாட்கள் விவாதிக்கலாமா என்று யோசிக்கப்பட்டது.

உபகுழுக்களின் அறிக்கைகள் மட்டுப்படுத்தும் தகைமை ஏதுமற்ற வெறும் சிபாரிசு அல்லது யோசனைக்கான அடிப்படைகள் மட்டுமே என்பதால் அவை குறித்து மட்டும் விலாவாரியாக விவாதிப்பதில் அர்த்தமில்லை என்று வழிகாட்டல் குழுவில் கூறப்பட்டது.

அந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறியவந்தது.

ஜனவரி மூன்றாம் வாரத்தில் அரசமைப்புச் சபையின் வழிகாட்டல் குழு மீண்டும் கூடி இடைக்கால அறிக்கை குறித்து தீர்மானித்து அதை இறுதிசெய்ததும், அதனை முன்வைத்து விவாதிக்கக்கூடிய பிறிதொரு திகதியில் அரசமைப்புச் சபையைக் கூட்ட வேண்டும் என்றும் நேற்று தீர்மானிக்கப்பட்டதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

நாடாளுமன்றம் அரசமைப்புச்சபையாக கூடுவது ரத்துச் செய்யப்பட்டாலும், அதுநாடாளுமன்றமாகத் தனது வழமையான அமர்வுகளைநடத்துவதற்காக 9ஆம் திகதி கூடுமென்றும் கூறப்பட்டது. (உ)

## மட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பெரும் எடுப்பில்நடத்துவதற்குத் தயாராகிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

மட்டக்களப்பில் மாபெரும் விழாவாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தமிழர் விழாவுக்கு இலங்கை நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் பிரதம அதிதியாக வருகை தந்து சிறப்பிக்கவுள்ளார்எனத்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி 19ஆம் திகதி மட்டக்களப்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமாபெரும்தமிழர் விழாவில் ஊர்வலமும் பிற தமிழர் பண்பாட்டு நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

அன்றைதினம் பிற்பகல் 1.30 மணிக்கு மட்டக்களப்பு கல்முனைவீதியில்கல்லடிப்பாலத்திலிருந்து ஆரம்பமாகும் தமிழர் விழாஊர்வலத்தில்எதிர்க்கட்சித் தலைவர்இரா.சம்பந்தன்பிரதம அதிதியாக மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டவுடன்தமிழர் பண்பாட்டு நிகழ்வுகள் அங்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகளில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்நாடாளுமன்றஉறுப்பினர்கள், மாகாண சபை அமைச்சர்கள், மாகாண சபைஉறுப்பினர்கள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும்அரசியல்பிரமுகர்களும் பொதுமக்களும் கலந்து கொள்ளவுள்ளனர் சகலருக்கும்பகிரங்க அழைப்புவிடுக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அல் ஹுசைன் எப்போதும் வலியுறுத்தி வருகின்றார் எனவும் அந்த நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என்றும் ஐ.நா தெரிவித்திருக்கிறது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித நேயத்துக்கு எதிரான குற்றங்கள் உள்ளிட்ட மோசமான குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களைவிசாரணை செய்வதற்குசர்வதேசநீதிபதிகள் மற்றும் சர்வதேசப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய விசேட கலப்பு நீதிமன்றம் அமைக்கப்படவேண்டும் என்று நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பான மக்கள் கருத்தறியும் செயலணி தனது அறிக்கையில் பரிந்துரை செய்திருந்தது.

ஆனாலும் இந்தப் பரிந்துரையை ஏற்கப்போவதில்லை என்றும், உள்ளூர் நீதி விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகள்ஒருபோதும்உள்வாங்கப்படமாட்டார்கள் என்ற நிலைப்பாட்டிலிருந்து இலங்கை ஒருபோதும் மாறாது என்றும் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளரும், சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரட்ண கூறியிருந்தார்.

போர்க்குற்ற நீதிமன்ற விசாரணைப் பொறிமுறைகளில் வெளிநாட்டு நீதிபதிகளை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்ற இலங்கையின் நிலைப்பாட்டை கடந்த வருடம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐ.நா.மனிதஉரிமைகள்ஆணையாளர் செய்ட் அல் ஹுசைன் உட்படஐ.நாபிரதிநிதிகள்பலரும் ஏற்றுக்கொண்டிருந்தனர் எனவும் அமைச்சர் ராஜித சேனாரட்ண ஊடகவியலாளர் மாநாட்டில் கூறியிருந்தார்.

அமைச்சர்ராஜித சேனாரட்ணவின் இந்தக் கருத்தை ஐ.நா. மனிதஉரிமைகள்பேரவைநேற்று முற்றாக நிராகரித்திருக்கின்றது.

சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றப் பொறிமுறை ஒன்றினூடாகவே இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் செய்ட் அல் ஹுசைன் எப்போதுமே வலியுறுத்தி வந்தார் எனவும், அந்த நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை என்றும் ஐ.நா மனித உரிமைகள் பேரவை நேற்று அதிகாலை தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்திருக் கிறது.

அது மாத்திரமன்றி வெளிநாட்டுநீதிபதிகளைஉள்ளடக்கிய கலப்பு நீதிமன்றப் பொறிமுறை ஒன்றையே நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பான மக்கள் கருத்தறியும்செயலணியும் பரிந்துரை செய்துள்ளது என்பதை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மகிழ்வுடன் வரவேற்றிருக்கின்றார்எனவும்ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தனது டுவிட்டரில்பதிவிட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இலங்கை இணை அனுசரணை வழங்கியிருந்தது.

சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்புநீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டு போர்க்குற்றங்கள் தொடர்பான நீதிவிசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இந்தத் தீர்மானத்தில் கண்டிப்பாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஐ.நா தீர்மானத்தை முழுமையாக நிறைவேற்றுவோம் என்று ஐ.நாவில் இலங்கை உறுதிகூறியிருந்த போதிலும், இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் உள்ளூர் நீதிமன்ற விசாரணைகளில் வெளிநாட்டுநீதிபதிகளைஉள்வாங்கப் போவதில்லை என்று திரும்பத் திரும்பக் கூறிவருகிறார்கள்.

இலங்கையின் நீதித்துறையில்மிகவும்திறமைவாய்ந்தநீதிபதிகள்பலர் இருக்கிறார்கள் என்றாலும், கடந்த காலங்களில் இலங்கை நீதித்துறை கடுமையாகஅரசியல்மயப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளதுஎன்றும்இதனால் இலங்கை நீதித்துறை அதன் நம்பிக்கைத் தன்மையை இழந்திருக்கிறது என்றும் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செய்ட் அல் ஹுசைன் தெரிவித்திருந்தார்.

இந்தக்காரணத்தாலேயே யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கைக்குரிய வகையில் சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றப் பொறிமுறை ஒன்றினூடாகவே போர்க்குற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் ஐ.நா.மனிதஉரிமைகள்ஆணையாளர் வலியுறுத்தியிருந்தார்.

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிகாரப்பேராசைமற்றும்குறுகியஅரசியல்தேவைகளுக்காகச் செயற்படுவதற்கு இன்னொரு தடவை வாய்ப்பில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஐம்பதாவது ஆண்டு விழாவில் கலந்து கொண்டுஉரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அந்த நிகழ்வில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் –

அம்பாந்தோட்டைத் துறைமுகம் மற்றும் கைத்தொழில் பேட்டை தொடர்பில் அரசாங்கம் எந்தவொரு உடன்படிக்கையையும் செய்துகொள்ளவில்லை. அது தொடர்பாக எந்தவொரு குழு அறிக்கையும் வெளியிடப்படவில்லை.

நாட்டின் மரபுரிமைக்கும் கௌரவத்துக்கும் பாதிப்பு ஏற்படக்கூடியவாறோ, அரசமைப்புக்கு புறம்பான முறையிலோ எந்தவொரு நாட்டுடனோ அல்லதுநிறுவனத்துடனோ அரசாங்கம்எந்தவொருஉடன்படிக்கையையும் செய்துகொள்ளவில்லை.

அவ்வாறு உடன்படிக்கை எதனையும் செய்வதாயின், அந்த உடன்படிக்கையின் ஆரம்ப நடவடிக்கைகள் வெளிப்படையாக மேற்கொள்ளப்பட்ட பின்னர் அது சட்டமா அதிபர், அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றத்துக்கும் சமர்ப்பிக்கப்படும்.

என் மீது பெரும் நம்பிக்கை வைத்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நாட்டின் பிரதான சேவகனாக நாட்டு மக்கள் என்னைத் தெரிவு செய்தனர். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மக்களின் அந்த நம்பிக்கை பொய்யாவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

2017 ஆம் ஆண்டு புதிய வேலைத் திட்டங்கள் ஊடாக நாட்டைக் கட்டியெழுப்பும் எதிர்பார்ப்புடனும், அர்ப்பணிப்புடனும் அர சாங்கம் முன்னேறிச் செல்லும்போதுபலவிமர்சனங்களை முன்வைத்து சிலர் அரசாங்கத்தைக் கவிழ்க்க முயற்சியெடுக்கின்றனர்.

எந்தக் கட்சியாவது ஆட்சியதிகாரத்துக்கு வரும்போது, அந்த அரசாங்கம்சுதந்திரமாகதனதுகடமைகளை மேற்கொள்வதற்கு இடமளிப்பதுநாட்டைநேசிக்கும்அனைவரினதும் பொறுப்பாகும்.

புலமைச்சொத்து கொள்ளை தொடர்பில் சட்டங்களை திருத்தி புதிய சட்டங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஊடக நிறுவனங்கள் மற்றும் அது தொடர்பான பொறுப்பான நிறுவனங்கள் சட்டம், சுற்று நிருபங்கள் மற்றும் மனிதாபிமானத்தை மதித்து செயற்படுவார்கள் என நம்புகின்றேன். – என்றார். (ம)

## சம்பந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேசிய இனப் பிரச்சினைக்கு நிலையான தீர்வொன்றை அடையமுடியும்என எதிர்க்கட்சித் தலைவர்தெரிவித்திருக்கும்கருத்துத் தொடர்பில் கூறும் போதே கஜேந்திரகுமார்பொன்னம்பலம் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தவிடயம்தொடர்பில்அவர் மேலும்கருத்துத்தெரிவிக்கையில்–

ஒற்றையாட்சியை ஏற்றுக்கொள்ள வேண்டும், 13ஆவது திருத்தச் சட்டத்தைத் தீர்வாக ஏற்றுக்கொள்ள வேண்டும், அரசியலில்தமிழ்த்தேசியசிந்தனைகளை நீக்க வேண்டும் போன்ற விடயங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் எங்களிடம்கேட்டுக்கொண்டமையாலேயே 2010 ஆம் ஆண்டில் நாங்கள்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிலிருந்து வெளியேறினோம்.

காணாமல்போனோரின் உறவுகளால் கடந்த வாரம் வவுனியாவில் நடத்தப்பட்ட உண்ணாவிரதப் போராட்டத்தின் இறுதியில் சம்பந்தனின் படம் தீயிட்டு எரிக்கப்பட்ட சம்பவமானது, சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது தமிழ் மக்கள் கொண்டிருக்கும் கடுமையான நிலைப்பாட்டைப் பிரதிபலிப்பதாக உள்ளது.

அவரது படத்தை எமது மக்கள் எரித்த சம்பவமானது சாதாரணமானதொரு விடயமல்ல. சம்பந்தன் தமிழர்களின் தீர்வு விடயத்தில் நேர்மையாகச் செயற்பட வேண்டும் என்பதே எங்களுடைய விருப்பம்.

சம்பந்தன் எமது மக்களுக்கு தமது உண்மையான நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும். எமது மக்கள் இதுவரை காலமும் சம்பந்தன் தலைமையிலானகூட்டமைப்பினரைநம்பி ஏமாற்றப்பட்டிருக்கின்ற நிலையில் அந்த ஏமாற்றம் தொடர்கதையாவதைஇனியும்அவர்கள் பார்த்திருக்க மாட்டார்கள்.

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் புதிய அரசமைப்பின் ஊடாக தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதுமிகவும்கடினமானது.

ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனையில்லாத ஆதரவை வழங்கியதன் மூலமே இலங்கையில் ஆட்சி மாற்றத்தைஏற்படுத்தியிருக்கிறது.

நாங்கள் எமக்குக் கிடைத்த வாய்ப்பைச்சரியாகப்பயன்படுத்திப் பேரம் பேசுவதைத் தவிர்த்தமையேதற்போதைய பின்னடைவுக்கான முக்கிய காரணமாகும்.

ஆகவே எதிர்காலத்தில் நாங்கள் நல்லதொரு முன்னேற்றமான நிலையை அடைவதற்குக் கடும் பிரயத்தனங்களில் ஈடுபட வேண்டிய தேவையிருக்கிறது. இதற்காகமக்கள்போராட்டங்கள் மூலம் எதிர்ப்பை வெளிக்காட்ட வேண்டியிருக்கிறது.

எமது மக்கள் எங்களுக்குத் தான் வாக்களித்திருக்கிறார்கள், மக்கள் எங்களுக்குத்தான் ஆதரவு, நாங்கள் எமது மக்களின் ஆதரவின்பிரகாரம்தான் செயற்பட்டு வருகிறோம் எனக் கூட்டமைப்பின் தலைமை சர்வதேசத்தின் மத்தியில் தன் நியாயப்பாட்டைஎடுத்துரைத்துவருகிறது.

இவ்வாறான சூழலில் இவற்றையெல்லாம்தாண்டிக் கடுமையான அழுத்தத்தைப்பிரயோகிப்பதன் மூலமே நாம் விரும்பிய தீர்வைப் பெற முடியும்.

அதற்காகவே நாங்கள் தமிழ் மக்கள்பேரவையை உருவாக்கி அரசுக்குப் பல்வேறு அழுத்தங்களைத் தொடர்ச்சியாகக் கொடுத்து வருகிறோம். எமது மக்கள் இதனை உணர வேண்டும்.

சம்பந்தன்தமிழ்மக்களுக்குச் செய்கின்ற பச்சைத் துரோகத்தனத்தையும்தாண்டி எமக்கான தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கு நாம்எம்மாலானமுயற்சிகளைச் செய்து வருகிறோம்.

சம்பந்தனின் தலைமையின் கீழ்தமிழ் மக்கள் இல்லை எனும் நிலைமை உருவாக வேண்டும். – என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# சி. ஐ. டி. என்று கூறிச் சென்ற நபர்கள் முல்லை. செல்வாபுரத்தில் கொள்ளை

## புலிகளின் பெயரால் வீட்டுக்காரருக்கு அச்சுறுத்தல்

முல்லைத்தீவு, ஜன.06

முல்லைத்தீவு - செல்வபுரம் பகுதியில் சி.ஐ.டியினர் என்ற போர்வையில் வீடொன்றுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் அங்கிருந்தவர்களை அச்சுறுத்திப் பணியவைத்துவிட்டு 60 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு 11.15 மணியளவில் இடம்பெற்றது.

நள்ளிரவு வேளை, மேற்படி வீட்டுக்குச் சென்ற நான்கு கொள்ளையர்களில் இருவர் வெளியே நிற்க, மற்றைய இருவரும் வீட்டு உரிமையாளரின் பெயரை அழைத்தவாறு உட்சென்று தாங்கள் சி.ஐ.டி யினர் என்று அறிமுகப்படுத்தினர்.

வீட்டுக்காரரைவிசாரணைக்கு உட்படுத்தவேண்டும் என்று கூறிய அவர்கள், 'விடுதலைப் புலிகளின்பணத்தைபயன்படுத்தியே உங்களின்மகனைவெளிநாடுஅனுப்பியுள்ளீர்கள்'என்று மிரட்டினர்.

அதற்கு வீட்டு உரிமையாளர்கள் தாங்கள் வங்கி ஒன்றில் கடன்பெற்ற ஆவணங்களைக் காட்டினர். ஆவணங்களைப் பார்வையிட்ட சந்தேக நபர்கள் வீட்டைச் சோதனையிடவேண்டும் என்றுகூறி வீட்டிலிருந்தவர்களை வீட்டின்நடுவே அமர வைத்துவிட்டு வீட்டை சல்லடை போட்டுத்தேடினர்.

பின்னர் வீட்டு உரிமையாளரின் அடையாள அட்டையை வாங்கிக்கொண்டு 'நாளை மறுநாள் மீண்டும் விசாரணைக்கு வருவோம்' எனக் கூறிச் சென்றனர். அவர்கள் மீது சந்தேகமடைந்த வீட்டின்உரிமையாளர் உடனடியாகவே முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாடு செய்தார்.

பொலிஸார் உடனடியாக அங்கு சென்று விசாரணைகளைமேற்கொண்டதுடன் தேடுதலிலும் ஈடுபட்டனர். இதன்போது,அவர்கள்வாங்கிச்சென்ற அடையாள அட்டை வீட்டுக்கு வெளியே வீசப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. வீட்டில் பணம் இருந்ததா என்று பொலிஸார் வீட்டு உரிமையாளரைக் கேட்டனர்.

அப்போதுதான், பணம் வைத்திருந்த அலுமாரியில் சென்று பார்த்தபோது அது காணாமற்போனமை தெரியவந்தது.

வீட்டிற்குள் வந்த இரு சந்தேக நபர்களில் ஒருவர் தமிழில் சரளமாகப் பேசினார் எனவும் மற்றையவர் சிங்களத்திலும் கொச்சைத் தமிழிலும் பேசினார் எனவும் வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

இந்த கொள்ளைச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ம-81)

### குமார் நினைவுதினம் யாழ்.நகரில் அனுஷ்டிப்பு



மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 17 ஆவது நினைவு தினம் நேற்று மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்த்தேசியமக்கள்முன்னணியின்அலுவலகத்தில்நடைபெற்றது.

எஸ்.இளங்கோதலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கட்சிப் பிரமுகர்களும் பொதுமக்களும் குமார் பொன்னம்பலத்தின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

நினைவுப்பேருரைகளைகட்சியின்மகளிர் அணித்தலைவி பத்மினி சிதம்பரநாதன், அரசியல் ஆய்வாளர் ஜோதிலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர். (ம)

## காணாமற்போன மீனவர்கள் மீட்பு

கொழும்பு, ஜன.06

கடந்த பத்து நாள்களுக்கு முன்னர் மீன்பிடிப்பதற்காகக் கடலுக்குச் சென்று காணாமற்போன கல்முனையைச்சேர்ந்த 6 மீனவர்களில் இருவர் அவர்கள் சென்ற படகுடன் மாலைதீவுக்கடற்படையினரால்நேற்று முன்தினம்இரவுமீட்கப்பட்டுள்ளனர்.

காணாமல்போன மற்றைய மீனவர்களும் தற்போது இருக்கும் இடம் தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளன எனவும் அவர்கள் பாதுகாப்பாக உள்ளனர் என்றும் பிரதியமைச்சர் அமீர் அலி தெரிவித்துள்ளார்.

# சுழிபுரம் - காட்டுப்புலத்தில் வாள்வெட்டு, கல் வீச்சுக்கள்

## ஒன்பது பேர் படுகாயம்

சுழிபுரம் - காட்டுப்புலத்தில் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் ஒன்பதுபேர்படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் ஆறுபேர் வாள்வெட்டு மற்றும் கொட்டன் தாக்குதல்களாலும்மூவர்கல்வீச்சுக்களாலும் காயமடைந்தனர். இவர்கள் அனைவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் புதன் காலையும்மாலையும் இந்ததாக்குதல்கள் இடம்பெற்றன.

சுழிபுரம் - காட்டுப்புலத்தில் கடந்தசிலவருடங்களுக்குமுன்னர் இடம்பெற்ற கொலை ஒன்றுடன் தொடர்புபட்டு, சிறையில் தடுத்துவைக்கப் பட்டிருந்த நபர் கடந்த மாதம் விடுதலை பெற்று வந்தார்என்றும் அவர்மூலமாக ஏற்பட்ட முரண்பாடுகளாலேயே மேற்படி தாக்குதல்கள் இடம்பெற்றன என்றும் வட்டுக்கோட்டைப்பொலிஸார்தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் காட்டுப்புலத்தில் இரவு வேளைகணவனும்மனைவியும் நித்திரையில் இருந்தபோது அவர்கள்மீது இடம்பெற்றவாள் வெட்டுச் சம்பவத்தில் கணவன் உயிரிழந்ததுடன் மனைவி படுகாயங்களுடன் தப்பினார்.

இந்தக்கொலையுடன்தொடர்புடையவர் என்ற குற்றச் சாட்டில் சிறைச்சாலையில்தடுத்துவைக்கப்பட்டிருந்த ஒருவர் கடந்த மாதம் விடுதலையானார். காட்டுப்புலத்தைச் சேர்ந்த அவர் அதேஇடத்தைச் சேர்ந்த ஒருவரின் முச்சக்கரவண்டியில் அவ்வப்போதுவெளியேசென்றுவந்தார் என்றும் அவரை ஏற்றிச் செல்ல வேண்டாம் என்று அந்தச் சாரதியை, ஏற்கனவே நித்திரையில் வைத்து வெட்டிக் கொலைசெய்யப்பட்டவரின்உறவினர்கள் கேட்டிருந்தனர் என்றும் தெரியவருகின்றது.

இதனால் ஏற்பட்ட முரண்பாட்டால் இரு தரப்பினருக்கிடையே கடந்த திங்கட்கிழமை கைகலப்பு இடம்பெற் றது. இது தொடர்பாக வட்டுக் கோட்டைப் பொலிஸ்நிலையத்தில்செய்யப்பட்டமுறைப்பாட்டுக்கு அமைய, நேற்றுமுன்தினம்புதன்கிழமை விசாரணைக்கு வருமாறு இரு தரப்புக்கும்பொலிஸார்அழைப்பு விடுத்திருந்தனர்.

இதற்கமைய நேற்றுமுன்தினம்அவர்கள்காட்டுப்புலத்தில் இருந்துமுச்சக்கரவண்டியொன்றில் பொலிஸ் நிலையத்திற்கு சென்றுகொண்டிருந்தபோது, சுழிபுரம் குடாக்கனையைச் சேர்ந்தஐவர்வாள்கள்,இரும்புக் கம்பிகள்மற்றும்கொட்டன்களுடன் அவர்களை வழிமறித்து தாக்குதலில் ஈடுபட்டனர். முதலில் முச்சக்கரவண்டிச் சாரதியின்தம்பியின்மீதுமேற்கொள்ளப்பட்ட தாக்குதலால் அவர் இரத்தம் பீறிட்ட நிலையில் மயங்கி வீழ்ந்தார் என்று கூறப்படுகின்றது.

அவரைக்காப்பாற்றமுற்பட்ட அண்ணனான சாரதியையும் அவர்கள் தாக்கினார்கள் என்றும்அதனால்அவர்தாக்கியவர்களின் வாள்களில் ஒன்றைப் பறித்து அவர்களில் ஐவரை சரமாரியாக வெட்டினார் என்றும் பொலிஸாரின்ஆரம்பகட்டவிசாரணைகளில்தெரிவிக்கப்பட்டது.

இந்த தாக்குதலில் சுழிபுரம் குடாக்கனையைச் சேர்ந்தவர்களானஉதயசூரியன்சூரியகாந்தன் (வயது-33), உதயசூரியன் இமையகாந்தன் (வயது-26), அ.சந்திரசேகர் (வயது-48), ச.கோவிந்தசாமி (வயது-57) ச.சதீஸ்குமார் (வயது-28), மற்றும் சாரதியின் தம்பியான செ.வினோகரன் (வயது-19) ஆகியோர்படுகாயமடைந்தனர்.

இவர்கள் அனைவரையும் வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற பின்னர், இதனால் அங்கு மீண்டும் ஏற்பட்ட முரண்பாட்டால் கல் வீச்சுக்கள் இடம்பெற்றன. இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த செ.திருக்குமார் (வயது-33)செ.கிரிதரன்(வயது-31), செ.யசோ (வயது-25) ஆகியோர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில்செய்யப்பட்டமுறைப்பாட்டையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் வாள்கள்-2,கொட்டன்கள்-3,இரும்புக் கம்பி - 1என்பவற்றை மீட்டனர்.

பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (ம-58)

# மாங்குளம், வவுனியா பிரதேசங்களில் கஞ்சா, மாவா பாக்குடன் இருவர் கைது!

முல்லைத்தீவு, ஜன.06

மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இந்துபுரம் கிராம அலுவலர் பிரிவில் நேற்று வியாழக்கிழமை 5.6 கிலோ கிராம் கேரள கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாங்குளம் பொலிஸ் நிலைய சிறுகுற்றப் பிரிவுப் பொலிஸாருக்குக்கிடைத்த இரகசியத்தகவலின்அடிப்படையில்,பொறுப்பதிகாரி பி.ஜி. ரட்ணசிறி, பொலிஸ் கான்ஸ்டபிள்எஸ்.சசிந்தன்ஆகியோர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது, இந்துபுரம் பகுதியில் வீடொன்றில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 5.6 கிலோ கிராம் கேரள கஞ்சாவும் கஞ்சா நிறுக்கப் பயன்படுத்தப்பட்ட தராசும் கைப்பற்றப்பட்டன. அத்துடன், வீட்டு உரிமையாளரும் கைது செய்யப்பட்டார். சந்தேக நபர் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் கூறினர்.

இதேவேளை-

வவுனியா தவசிக்குளம் பகுதியில் மாவா பாக்கு மற்றும் கஞ்சா போதைப் பொருட்களுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா பொலிஸ் நிலைய போதைப் பொருள் ஒழிப்பு பிரிவுக்கு நேற்று முன்தினம் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து சப் இன்ஸ்பெக்டர் கலாவினோதன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போதே மேற்படி சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார்.

அவரிடம் இருந்து ஒரு கிராம் 625 மில்லிக்கிராம் மாவா, 755 கிராம் கேரளக் கஞ்சா என்பன மீட்கப்பட்டுள்ளன. (ம-81,100)

## பாதாள உலக நபர் சுட்டுக்கொலை

கொழும்பு, ஜன.06

அங்கொடை, முல்லேரியா, களனிமுல்ல பகுதியில் நேற்றுப் பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர் என்று சந்தேகிக்கப்படும் ரத்தரன் என அழைக்கப்படுகின்ற குமார எலியாஸ் (வயது 36) என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மோட்டார்சைக்கிளில்பயணித்துக்கொண்டிருந்த அவரை இன்னொரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சுட்டுக்கொன்றனர் எனக் கூறப்பட்டது.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையிலான மூன்று பேர் கொண்ட அதிகாரிகள் குழு மூன்றுநாள்கள்பயணமாக இந்தியா சென்றுள்ளது.

இந்தக் குழுவினர் நேற்று இந்தியக்கடலோரக்காவற்படையின் பணிப்பாளர் நாயகம் ராஜேந்திர சிங்கைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான கடல்சார் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துதல், பரஸ்பர கரிசனைக்குரிய கடல்சார் விவகாரங்கள், கூட்டு அணுகுமுறையை உருவாக்குதல் தொடர்பாக இந்தப்பேச்சுக்களில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன்இரண்டுநாடுகளின் கடலோரக்காவற்படைகளுக்கும் இடையிலான தொடர்பாடலை அதிகரிப்பது குறித்தும் இந்தச் சந்திப்பில்ஆலோசனைநடத்தப்பட்டுள்ளது.

இந்தியாவுக்குச் சென்றுள்ள இலங்கை கடலோரக் காவற்படை அதிகாரிகள் குழுவினர் இந்தியாவின் பாதுகாப்புச் செயலர் ஜி.மோகன் குமாரையும் சந்தித்துப் பொதுவான கடல்சார் நலன்கள் குறித்து கலந்துரையாடினர்.

## கனகபுரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதும் தடுக்காத பிரதேச சபை தற்போதுமாவீரர்களுக்குநினைவுச் சமாதி அமைக்கும்போது தடுத்த செயற்பாட்டை அறிந்த மக்கள் அந்தப் பிரதேச சபை மீது கடும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

படையினர் தங்கியிருந்த பின்னர் விடுவிக்கப்பட்ட கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம் கடந்த நவம்பர் மாதம் மாவீரர்களின் உறவினர்கள், முன்னாள் போராளிகள் மற்றும் பொதுமக்களால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டு மாவீரர் தினம் மிகவும் எழுச்சியாக அனுஷ்டிக்கப்பட்டது.

அன்றைய தினம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் அங்கு பொதுச்சுடரை ஏற்றியதைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் சுடரேற்றியிருந்தனர்.

இந்த நிலையில், மாவீரர்களின் உறவினர்களும் முன்னாள் போராளிகள் சிலரும் இணைந்து அங்கு மாவீரர்களுக்கு பொதுச்சமாதி ஒன்றை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டி பணிகளை ஆரம்பித்தனர். செங்கற்களும் அங்கு கொண்டு செல்லப்பட்டு கட்டுமான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

திடீரென்று அங்கு சென்ற கரைச்சி பிரதேச சபைச் செயலாளர் தங்கள் அனுமதியின்றி எந்தவிதக் கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டாம் என்று தடுத்தார் எனக் கூறப்படுகின்றது.

அதற்கு எதிர்ப்பு தெரிவித்த உறவினர்களும் முன்னாள் போராளிகளும், இராணுவம் இவ்வளவு நாளும் இங்கு கட்டடங்கள் அமைத்து இருந்தபோது உங்களுடைய பிரதேச சபையும் சட்டங்களும் எங்கு போயின எனக் கேள்வி எழுப்பினர். பிரதேச சபையின் அறிவிப்பை புறந்தள்ளிவிட்டு பணியைத் தொடர்ந்தனர்.

பிரதேச சபைச் செயலாளர் அந்த இடத்தை விட்டுச் சென்ற பின்னர், கிளிநொச்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலானபொலிஸ்குழுவினர் அங்கு சென்று நினைவுச்சமாதி அமைக்கும் பணியில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினர்.

மாவீரர் துயிலுமில்ல காணியில் சட்டவிரோத பணிகள் இடம்பெறுகிறது என பொலிஸ் அவசர (119) தொலைபேசிக்கு மேற்கொள்ளப்பட்ட அழைப்புக்கு அமையவே தாங்கள் அங்கு சென்றனர் எனக் கூறினர்.

இந்த விடயம் தொடர்பாக பிரதேச சபை செயலாளர், பிரதேச செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளை அழைத்துப் பேசி முடிவு எடுக்கலாம் என்று கூறிய பொலிஸார் பணியை நிறுத்தினர்.

இதேவேளை, பொது நினைவுச்சமாதி அமைக்கும் பணியில் ஈடுபட்டவர்களில் ஆறுபேரை இன்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ம-70 - 81 -100)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.01.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.